
# தேசமித்திரன்

-8-47

விலை 4 அணா




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 SEP 1947
MADRAS

679

30

7L
m2ıı, N305
N47.18 ·30
199425

AMIT… ILLUSTRATED …



இயற்கையான வளர்ச்சியுடன்

அடைய விரும்புதல்


குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்




**WOODWARD'S GRIPE WATER**

W. WOODWARD LTD LONDON



## சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்தது.

### காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுகுகளைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.





ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரிசோதித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுகிறது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

### ஆட்டோ டி ஸ்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.




**மாதவிடாய்** நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 4—4—0 தபாற் செலவு அணா 12.

**கர்ப்பத்தடை** நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4 4 0 தாற்காலிகம் ரூ. 2-0 0 தபாற் செலவு அணா 12 தனி.

**ஆண்மை** "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

**Kaviraj M. Kavyatirtha ( S. W )**
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.




சகல்வருமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0. வி.பி. செலவு வேறு.

**ஜமதக்னி ஔஷதாலயா,**
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.

## ரூ 100 இனாம்

அதிசயிக்கத்தக்க சக்தி வாய்ந்த சித்த யந்திரம்
(Govt Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய் அதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண் பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அபய நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி; பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம். பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாம். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ. 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

### நரையை ஒழியுங்கள்.


சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மற்றும் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்று உத்தரவாதம் பெறுங்கள். கொஞ்ச நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்ட ரூ. 3-8-0. எல்லா நரைக்கும் ரூ.5.

Shree Kamrup Kamachhya Achram.
No 6. (P. O Katrisarai, Gaya)



## கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, கமமணமுள்ளவை




கணேஷ் ஸீ கம்பெனி
பாண்டி பஜார், தி நகர்.
பிராஞ்சு: சைனபஜார், மதராஸ்.
பைகிராப்ட்ஸ்ரோட், திருவல்லிக்கேணி.



## மீண்டும் ஜீவ சக்தி



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

## அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஸ்திரீகளின் சூதகக் கோளாறுகளை அறவே ஒழித்து இல்வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க மீண்டும் ஜீவசக்தியை அளிப்பது அருணை.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
மதராஸ் 17



வாரியர்

## பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)



## இண்டோ பாம்

நோவுகளுக்கு சிறந்த அவுஷதம்

## ஜுரத்திற்கு கர்னிக் எகுமிகசா

உபயோகியுங்கள்

KARNIK BROS' BOMBAY 4








உங்கள் துணிகளை ஸன்லைட் சோப்பினுல் சலவை செய்தால் அவை முன் இருந்ததைவிட அதிக வெண்மையாகவும் பளிச்சென்றுமிருக்கின்றன. ஸன்லைட் சோப்பின் ஏராளமான நுரை இழைகளிடையே புகுந்து சேதமின்றி அடித்துத் துவைக்காமலே எல்லா மலினங்களையும் — ஜாஸ்தி அழுக்குப் படிந்த பாகங்களிலிருந்துகூட — அகற்றுகின்றது. இச்சோப்பினுல் சலவை செய்யப்பட்ட துணிகளின் புது மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், உங்கள் கைகளுக்கு ஸன்லைட் சோப் நன்மையளிக்கின்றது.

## ஸன்லைட் சோப்





S. 89-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED







எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்கள் கண்டிரோல் விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி,
மதராஸ்.

# ஸ்ரீ அம்பாள் சேமியா உபயோகியுங்கள்

138. கொத்தவால் சாவடி. மதராஸ்.

ஸ்தாபிதம 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணு 6. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட். தேனும்பேட்டை போஸ்டு, மதராஸ்.

## கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

## செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினுலும் எவ்வித நோயானுலும் நாலே வாரத்தில் சொஸ்தப் படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

## குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினுல் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

**KAMALA WORKS,**
6, Panchpota, BENGAL.

# முக்கிய அறிவிப்பு

**மந்தார விடு இலை, தையல் இலை**
சகாயமான விலைக்கு மொத்தமாகவும்,
சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

**S. மாணிக்கம் செட்டி & கோ.,**
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் 1.
ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

## சூதகத்தை நிறுத்தியது



குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5. மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8, கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4.

(வி. பி.க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)
Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹாரி & ஸன், 93, சைனுபஜார், மதராஸ். 2. ராகவன் & கோ. ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொழஞ்சேரி, திருவாங்கூர். 4. J. கிராக் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா 6. சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92. ஸீ தெரு, கொழும்பு. 768, லோயர் தெரு, பாடுவா (ஸிலோன)

## வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும், விலைகளோ மிகவும் குறைவு.

**சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்:**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சாம்பாக் | ரூ. 2-0 | கதம்பம் | ரூ. 1-8 | ஹினு | ரூ. 1-8 | மோத்தியா | ரூ. 1-0 |
| | ,, 2-0 | மல்லிகை | ,, 1-8 | லில்லி | ,, 1-0 | ஸ்விட் | ,, 1-0 |
| | ,, 2-0 | ரோஸ் | ,, 1-8 | தாமரை | ,, 1-0 | மோதியா | ,, 1-0 |
| | ,, 2-0 | போகுல் | ,, 1-8 | கோலோன் | ,, 1-0 | ஐடியல் | ,, 1-0 |

ர அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், சலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும்.

**S PAUL & Co., Perfumers, (Dept. S.W.)**
4. Hospital Street, Dharamtcla, Calcutta.



# சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். ஸ்ரீ K. ஹரிஹரன், B. A., D. C. T. O. தர்மபுரியிலிருந்து 26-6-47-ல் எழுதுகிறுர்:—"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன. இதுவரை இம்மாதிரி வியக்கத்தக்க பலன்கள் எந்த ஜோதிடரும் கூறவில்லை. தங்கள் கவசத்தின் மகிமை மெச்சத்தக்கது." 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருஷ பலன் ரூ. 5. சக்திகவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. அணு 5. ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

நிவாரணத்திற்கு உத்தரவாதம்

## ரூ. 1000 இனும்

எங்களுடைய

## "லெப்பர் க்யூர்"

18-வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு:

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.

## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.
திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

## ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்

தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்
விலை ரூ. 2—8—0 :: விவரமான காட்லாக் இனும்

**மலையாள மெடிகல் ஹால் (REGD)**
189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

## மாதவிடாய்

நின்றுவிட்டால் எக்காரணத்தினுல் ஆனுலும் ரிதுபிரபர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலிகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணு 13.

இம்மருந்துகள் கிடைக்குமிடம்:—
அப்பா & கம்பெனி
286, சைனுபஜார், மதராஸ்.

★

## விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது பிஷிஹார தைலம். தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணு 13.

★

## குஷ்டம், வெண் குஷ்டம்

உள்ளுக்கும் வெளிப் பூச்சுக்கும் மருந்துகள்:—
உத்தரவாதமான சிகிச்சை.
ஒருமாத மருந்து ரூ. 24-13.

★

## விகரின் (தங்கம், கஸ்தூரி, மகரத்வஜம் சேர்ந்தது)

இளமையும், ஜீவ சக்தியும் அளித்து, ஞாபக மின்மை, ஹிருதய பலவீனம், நரம்புத் தளர்ச்சி இவற்றை குணமாக்கும். புதிய ரத்தம் ஊறி தேகதிடம் அளிக்கும். விலை ரூ. 3. சக்தி வாய்ந்தது ரூ. 10. வி. பி. செலவு அணு 12.

**Kaviraj R. Chakravorty,**
Ayurveda Sastri (S. W.)
Bhowanipore, Calcutta. 25.

மாதவிடாய் நின்று விட்டதா? கவலை வேண்டாம்.
சாஸ்திரீக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்கடிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணு 12. ரோதகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5. தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணு 12.
Kaviraj M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1, UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.



விமல குமாரி

மதராஸ் ஸ்ரீ ராமவிலாஸ் சர்விஸ் லிட். மானேஜரான ஸ்ரீ N. கிருஷ்ணமூர்த்தியின் குமாரத்தி. டாக்டர் ஸர் RM. அழகப்பசெட்டியார் தமது வேப்பேரி இல்லத்தில் ஸர் R. K. ஷண்முகம் செட்டியாருக்காக அளித்த விருந்தின்போது இவரது நடன கச்சேரி நடந்தது. சென்னை பிரதமர் உள்பட பிரபலஸ்தர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

குழந்தைகளுக்கு ஒரு வரம்
ஜம்மியின்
லிவர்க்யூர்
சிசுக்களின் ஈரல்
குலைக்கட்டி வியாதிகளுக்கு
பிரபல மருந்துக்கடைகளில் கிடைக்கும்
ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ் மைலாப்பூர், மதறாஸ்.
2 தனி மருந்துகள்.
வியாதி அதிகம் முற்றாமலிருக்கும் சாதாரண ஸ்திதியில் உபயோகிக்க.
வியாதி மிகவும் பலப்பட்டு அபாயகரமாய் இருக்கும் சிக்கலான ஸ்திதியில் உபயோகிக்க.

அனைவருக்கும்
திருப்தி
யளிக்கக்கூடிய
எல்லாவிதமான
நவீன
பட்டு & நூல்
ஜவுளி
ரகங்களுக்கு
மாருதி கிளாத் மார்ட்
ராஜவீதி ★ கோயமுத்தூர்

S.A.H.
TRADE MARK
Rgd. No. 2221.
27 வருஷமாய் தென்னாடு
முழுவதும் பிரசித்தி
பெற்று வரும்
சேலம் மூன்று தாமரை பீடிகளை
உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.
S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்
— வாரப்பதிப்பு —
Vol. XVIII] ஸர்வஜித்துஸு ஆவணிமீ 8உ ★ 1947-ஷு ஆகஸ்டுமீ 24உ [No. 30


# எல்லை நிர்ணயம்

பிரிவினைக்குட்பட்ட வங்காளம், பாஞ்சாலம் ஆகிய இரண்டு பகுதிகளின் எல்லையையும் நிர்த்தாரணம் செய்ய நியமிக்கப்பட்ட கமிஷன்களின் தீர்ப்பு சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. இக்கமிஷன்களின் தலைவர் ஸர் ஸிரில்ராட் கிளிப் என்பவர். இவர் செய்திருக்கும் முடிவுதான் இப்போது தீர்ப்பு! கமிஷனில் பாதிப்பேர் முஸ்லிம்கள்; மற்றொரு பாதி முஸ்லிம்களல்லாதார். வங்கம், பாஞ்சாலம் இரண்டின் எல்லைகளை இவ்விருசாராரும் சேர்ந்து நிர்ணயித்திருந்தால் எவ்வளவோ கௌரவம். ஆனால் அந்நியர் ஒருவர் இதில் தலையிட்டு மத்யஸ்தம் செய்ய நேரிட்டதுதான் துரதிருஷ்டம். தீர்ப்பளித்தவர் தீர்க்கமாகச் சம்பந்தப்பட்ட தரப்பின் பிரதிநிதிகளைக் கலந்து விசாரிக்கவில்லை. எனவே இந்தத்தீர்ப்பிலும் இருதரப்பாருக்கும் குறை உண்டு. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இது குறித்து கொதிப்பேற்பட்டுள்ளது.


வங்காளம் சம்பந்தப்பட்டவரை, புதிய எல்லை மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என்று இரு கூறுகளாக்குவதுடனில்லை; இதோடு மேற்கு வங்காளம் இரு துண்டுகளாக்கப்பட்டுவிட்டது: இரண்டுக்கும் குறுக்கேயுள்ள பூமி கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்ததென்பது அத்தீர்ப்பு. இவ்வாறு பிளக்க இடையிலுள்ள பூமி முஸ்லீம் மெஜாரிட்டியைக் கொண்டதென்பதே காரணமானால், அக்காரணம் சிட்டகாங் மலைப்பிரதேசத்துக்கும் பொருந்தும். அங்கு முஸ்லீம்கள் 3 சத விகிதமே. மேற்குறித்த வாதத்தையொட்டி அதை மேற்கு வங்காளத்துடன் சேர்த்திருப்பதே முறை. ஆனால் அப்பிரதேசம் கிழக்கு வங்காளத்தில் ஒரு பாகமாக இருக்கவேண்டுமென்று தீர்ப்பாகியிருக்கிறது. கல்கத்தா நகரம் மேற்கு வங்காளத்தின் ஒருபாகமாக இருக்குமென்பது அத்தீர்ப்பின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம். இம்முடிவு ஏற்கெனவே பலரும் எதிர்பார்த்ததுதான்.

அவ்வாறே லாகூர் நகரம் எல்லைக்கமிஷன் தீர்ப்புப்படி மேற்கு பஞ்சாபின் ஒரு பகுதியாக இருக்குமென்பதிலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை. ஆனால் லாகூர் டிவிஷனைச் சேர்ந்த அமிருதசரஸ் ஜில்லா கிழக்கு பஞ்சாபில் ஒரு பாகமாயிருக்கும். எனினும் நங்கானு ஸாகிப் போன்ற தங்கள் க்ஷேத்திரங்கள் மேற்கு பஞ்சாபுடன் சேர்க்கப்பட்டுவிட்டது கண்டு சீக்கியர் குறைப்படுவது இயற்கை. எல்லையை வகுப்பதில் பொருளாதார அம்சங்கள் போன்ற முக்கிய இனங்களை அக்கமிஷன் நினைவில் கொண்டதாகத் தெரியவில்லை, முக்கியமாக பஞ்சாபில் தங்களுக்குரியது கிடைக்கவில்லையென்பது முஸ்லிம் தலைவர்களது புகார்.

மற்ற மாகாணங்களைப்போல் இவ்விரு மாகாணங்களிலும் மக்களது வாழ்வு முதல்தரமான நிர்வாகத்தை அடிப்படையாகக்கொண்டு வளர்ச்சி யடைந்து வந்திருக்கிறது. திடீரென்று முஸ்லீம் பிரதேசமென்றும், சீக்கிய அல்லது ஹிந்துப் பிரதேசமென்றும் திட்டமாக வகுக்கக்கூடிய நிலைமையில்லை. எல்லாத் தரப்புகளும் ஏற்கெனவே வாக்களித்துள்ளவாறு எல்லைக் கமிஷன்களின் தீர்ப்பை அனைவரும் ஒப்புக்கொண்டு இனி சீரான வாழ்வுக்கு வழி தேடுவதில் முனைவதே முறையாகும்.



14-ந்தேதி நள்ளிரவில் அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடந்தது. ராஜன்பாபு அப்போது மிக்க உருக்கமாகப் பேசினார். அவர் பேசுகையில் எடுத்த படம்.



இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பாட்டனை நியமிப்பதென 14-ந்தேதி அ. நி. சபை முடிவு செய்தது. அதை ராஜன் பாபு மவுண்ட்பாட்டனிடம் நேரில்போய் தெரிவித்தார். அப்போது இருவரும் கைகுலுக்கினர்.

## அட்டைப் படம்

★

அந்நிய ஆட்சி இயங்கிய கட்டிடங்கள் அனைத்திலும் சென்ற வாரத்திலிருந்து தாயின் மணிக்கொடி பறக்கிறது. ஆட்சி நம்மவர் வசம் மீண்டு நமது கொடி கோட்டைகளில் பறக்கவேண்டுமென்று துடிதுடித்த தேசபக்தர்களின் உள்ளங்கள் குதுகுதுப்படையும் வண்ணம் இம்மாதம் 15-ந்தேதி முதல் சர்க்கார் கட்டிடங்கள் அனைத்திலும் பாரதத்தாயின் துவஜம் ஆரோகணம் செய்து அசைந்தாடுகிறது. மேலோரும், நூலோரும் வெஞ்சிறையில் வீழ்ந்து, மடிந்து இக்கொடியின் கௌரவத்தைக்காக்க முன் நின்றார்கள். அவர்களது இதய கமலங்கள் மலர்ந்து மகிழ்வுறும் வண்ணம் சுதந்திரத்தாய் அருள்செய்து விட்டாள். அத்தகைய அருள் கொடி சென்னைக் கோட்டைமீது வானளாவிப் பறக்கிறது.






வருஷம் நாற்பதுக்குமேல் ஆகிவிட்டது. நேற்று நடந்தது போல் ஞாபகத்திலிருக்கிறது. நான் அப்போது தான் எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து ஹைஸ்கூலுக்கு வந்திருந்தேன். என் அத்தை புருஷன் தன் பெண்ணுக்கு வரன் தேடும் விஷயமாய் எங்கள் வீட்டில் வந்து சில தினங்கள் தங்கினார். அவர் ஒரு காலேஜ் உபாத்தியாயர். உயர்ந்த யுனிவர்ஸிடி பிருதங்கள் பெற்றவர். உத்தம குணசீலர். உலகத்தில் பெரும் மதிப்பும் புகழும் தாங்கியவர். அவரிடம் மிக்க அன்பு ஆதரவுடன் என் பெற்றோர்கள் நடந்து கொண்டார்கள். எனக்கு அவரது கம்பீரமான தோற்றமும், அமர்ந்த நடையும், நயமான உரையாடலும் அவர்பால் பயபக்தியுடன் நடந்துகொள்வதைக் கற்பித்தன. என் மீது அவர் மிகுந்த பிரேமை கொண்டார். ஒழிந்த நேரமெல்லாம் என்னை அழைத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு ஸல்லாபம் தொடங்குவார். என் படிப்பைப் பற்றியும், பள்ளிக்கூடத்தைப் பற்றியும் வினவுவார். எங்கள் உபாத்தியாயர்களையும் ஹெட்மாஸ்டரையும் பற்றி அவர் கேட்கும்போது நான் மனதிற்குள் அவர்களை அவருடன் ஒப்பிட்டுப் பார்த்து லஜ்ஜையடைவேன்—ஸமுத்திரத்தினிடத்தில் குளம் குட்டைகளின் பெருமையை எப்படி எடுத்துரைப்பது என்று. அத்திம்பேர் அந்தமட்டோடு விசாரணையை நிறுத்துவதில்லை. என் புஸ்தகங்களை எல்லாம் வாங்கிப் பார்த்து என்னைக் கேள்விகள் கேட்டுப் பரீக்ஷிக்கவாரம்பித்தார். ஆனால் அவர் பரீக்ஷிக்கும் முறை அன்புடனும் நயமாகவும் இருந்தமையால் என் அறியாமையை அவரிடம் ருஜுப்படுத்த நான் தயங்கவில்லை. பூகோளத்தில் "மடகாஸ்கர்" எங்கிருக்கிறது என்று அவர் கேட்கவும் நான் ஒன்றும் புரியாமல், கேள்வியை சரியாய் தெரிந்துகொண்டால் பதில் சொல்லிவிடுவேன் என்ற மனோபாவத்தை வெளிப்படுத்துபவன்போல், "என்ன? மடராஸ் கலா?" என்று சந்தேக த்வனியுடன் திருப்பிக் கேட்கவே அவரும் சிரித்தார். எனக்கு என்னை அறியாமல் நான் தடுமாறிச் சொன்ன வார்த்தையை நினைக்கச் சிரிப்புவந்துவிட்டது. ஹிஸ்டரியில், "ஹுமாயூன்" என்பவர் யார் என்று அத்திம்பேர் கேட்டார். நான் ஜியாகரபி கேள்விக்குச் சமாளித்துக்கொண்ட முறையைப் பின்பற்றுவதில் துணிவுகரமேற்பட்டு "என்ன! ஹுமையனா?" என்று திருப்பிவிட்டேன். அத்திம்பேர் ஒரு புன்சிரிப்புடன் ஹிஸ்டரியை முடித்துக்கொண்டு எனக்கு ஜன்ம சத்ருவான கணக்கைக் கையிலெடுத்தார். "இதில் என்ன நடக்கிறது?" என்று புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டு என்னைக்கேட்டார். 'நீள எழவு நடக்கிறது' என்று என் வாயில் வந்தது. "நீள அளவா?" என்றார் அத்திம்பேர் சிரித்துக்கொண்டு. அந்தப்பக்கத்தை எடுத்துவைத்துக்கொண்டு அவர் எனக்கு ஒரு கணக்குக்கொடுப்பவர்போல் ஆராய்ந்து பார்க்க வாரம்பித்தார். எனக்குக் கணக்குத்தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்ள என்ன செய்வோம் என்ற அச்சம் மேலிட்டது. அம்மா என்னைக் கூப்பிடக் கூடாதா? அத்திம்பேரைப்பார்க்க யாராவது வந்திருப்பதாக அப்பா வந்து தெரிவிக்கக்கூடாதா? சுவரில் ஒரு தேள் தென்படக் கூடாதா? அத்திம்பேருக்கு ஏதாவது அவசரஜோலி ஞாபகம் வரக் கூடாதா! உம் ஹும். ஒன்றும் எனக்கு அனுகூலமாய் நடக்கவில்லை. எனனைக் காப்பாற்ற யாரும் முன் வரவில்லை. தேளுக்குக்கூட தயவில்லை. அத்திம்பேர் கணக்கைப்பொறுக்கி என்னிடம் கொடுத்து "37 வது கணக்கைப் பார். அதற்கு எப்படி விடை? கூறு பார்ப்போம்" என்று உத்சாகத்துடன் தூண்டலானார். எனக்குக் கண் திரை போட்டு மறைக்கப்பட்டது போல் 37-ம் நம்பரையே கண்டு பிடிக்க முடியாமல்போய் விட்டது. புத்தி சுழலவாரம்பித்தது. நாக்கில் வார்த்தை குழறிப்போச்சு.

சரணாகதியைத் தவிர வேறு வழி தோன்றவில்லை. நான் கெஞ்சும் குரலில், 'கணக்கு வேண்டாம், அத்திம்பேரே! இங்கிலீஷில் கேளுங்கள் நான் சொல்லுகிறேன். எங்கள் கணக்கு வாத்தியார் ஒரு ஒன்னாம் நம்பர் மூஞ்சி. ஒரு எழவும் சொல்லிக்கொடுப்பதில்லை. போர்டில் வெறுமனே சாக்கட்டியைப் போட்டுத் தேய்த்து தேய்த்துப் பாழாக்கத்தான் அவருக்குத் தெரியும். சந்தேகமென்று ஏதாவது கேட்டால் ஒன்றும் பதில் சொல்லாமல் வெறிக்கப் பார்த்துவிட்டுக் கறுப்புத்துணியைஉதறிக்கொண்டு போர்ட்டுக்குப் போய்விடுவார். பையன்கள் கணக்கு நோட்டைப் பார்த்துத் திருத்தும்போதுகூட இன்னது தப்பு என்று சொல்வதில்லை. பென்ஸிலால் தன் கூரிய மூக்கில் இரண்டு தட்டு தட்டிக் கொண்டு நோட்டில் ஒரு இண்டு மார்க் போடுவார். "என்ன ஸார், தப்பு" என்று பையன் கேட்டால். ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு அடுத்த பையன் நோட்டைக் கையில் வாங்கிக்கொள்வார். இவ்விதமே ஒவ்வொரு கேஸும் எக்ஸ்பார்டியாக பைஸலாகும். எனக்கு எப்படி, அத்திம்பேரே! கணக்கு வரும்?—" என்று உருக்கமாய் உபன்யசித்தேன். அத்திம்பேர் புன்னகை பூண்டார். நான் கொடுத்த ஆங்கில பாடப் புத்தகத்தைப் பேசாமல் வாங்கிக் கொண்டு அதைப் புரட்டிப் பார்க்கலானார்—. "கோகநட்" என்ற வார்த்தைக்கு "ஸ்பெல்லிங்" என்ன?'

"கோ கோ-எ-நட்" தானே அத்திம்பேரே!' என்றேன் நான்.

'உன் வழியே புது வழியாயிருக்கிறது' என்று அத்திம்பேர் வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னார்—இந்தத்தடவை புன்சிரிப்போடு மட்டும் நிறுத்தாமல், நல்ல

வேளையாய் அவர் மற்றொரு கேள்வி கேட்க ஆலோசிக்கும் முன் என் அப்பா அவரைக் கூப்பிட்டார்.—"ஜோஸ்யர் வந்திருக்கிறார். வாயேன் ராமனுதா!" என்று.

நானும் பரீக்ஷை கொடுத்த சிரமத்தை ஆற்றிக்கொள்ள அம்மாவிடம் சலுகையுடன் பக்ஷணங்களுக்கு மனு செய்து கொண்டேன்.—"அம்மா! ஹிஸ்டரி, ஜீயாகரபி, இங்கிலீஷ் எல்லாவற்றிலும் அத்திம்பேர் கேள்விகளுக்குத் திருப்திகரமாய் பதில் கூறிவிட்டேன். கணக்கில் மட்டும் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. வாத்தியார் சரியாய்ச் சொல்லிக் கொடுத்தால் தானே எனக்குத்தெரியும்.




"......கணக்கு வாத்தியார் ஒரு ஒணான் மூஞ்சி......"

அம்மாவாயால் எனக்கு கணக்கு வாத்யாருக்கு வசவு வாங்கி வைத்தேன். என்முன் தேன்குழல் சீடைகளுடன் தட்டு காலியாகிக்கொண்டிருந்தது. குரு நிந்தித்தாலும், நிந்தனையைக் காதால் கேட்டாலும் பாவம் என்று சொல்லுவார்கள். நல்லவேளை, கல்லுக்கும் கடினமான சீடை என்னைப் பாபத்திலிருந்து காக்க வல்லதானது. சீடையைக் கடிக்கும் சப்தத்தில் அம்மாவின் வசைமொழிகள் என் காதில் அவ்வளவு ஸ்பஷ்டமாகப்பட்ட தாய்ச் சொல்லமுடியாது. இருந்தாலும் அன்று பள்ளிக்கூடத்தில் கணக்கு வாத்தியாரைப் பார்த்தபோது. எனக்கு மிக்கப் பரிதாபமாக விருந்தது. அவருக்குப் பரவிவரும் கீர்த்தியை அவர் அறிவாரா?—பாவம்! இப்படி எவ்வளவு பையன்கள் அவர்வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறார்களோ? வாயைத் திறந்து அந்த எழவு கணக்குகளை என்னைப்போல மக்குகளுக்குப் புரியும்படி அவர்தான் சொல்லித் தொலைத்துவிடலாகாதா? ஏன் ஊமைக் கோட்டானைப்போல் இப்படிவிழிக்கிறார்!

மறுநாள் அத்திம்பேர் தன் ஜோலியாய் வெளியே போயிருந்த போது என் அப்பா என்னிடம் அத்திம்பேர் பெருமைகளை எடுத்துரைத்தார். "அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். படிப்பில் தீவிரமான ஊக்கமுடையவராதலால் எல்லாப் பரீக்ஷைகளையும் கடந்து உயர்ந்த அந்தஸ்தை அடைந்திருக்கிறார். அவர் மேதாவித்தனத்தைக் கண்டு பாதிரி பள்ளிக்கூடத்தில் அவரைச்சம்பளமில்லாமல்படிக்க அனுமதித்தார்கள். அவர் ஹைஸ்கூலிலாவது காலேஜிலாவது சம்பளம் செலுத்தியதே கிடையாது. கிளாஸில் எப்போதும் முதல் ஸ்தானத்தையே பெற்று வந்தார். வருஷா வருஷம் பரிசுகள் வாங்கி வந்தார். நன்னடத்தைக்கும் பரிசுகள் பெற்றிருக்கிறார். யூனிவர்ஸிடி பரீக்ஷைகளில் எல்லாம் பிரஸிடென்ஸிக்கு முதலாகத் தேறிப் பரிசுகள் பெற்றிருக்கிறார். இவர் எம். ஏ. பட்டம்பெற்றதும்இவரை ஒரு பிரபல பாதிரி காலேஜிலேயே உபாத்தியாயர் ஸ்தானத்திற்கு வருந்தியழைத்தார்கள். மேலும் அவர் சிறு பிராயம் முதல் ஹைஸ்கூல், காலேஜ்களில் வெளியாகும் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்யத் தொடங்கினார். போது போக்கிற்கான கதை கட்டுரை எழுதுபவரல்ல. படித்த மேதாவிகள் கொண்டாடத்தக்க ஆராய்ச்சிமுறையில் எழுதி வந்தார். நீ அவரைப்போல் படித்து முன்னுக்கு வர வேண்டும். சோம்பேறியாய்த் திரியக்கூடாது. அஸத்துக்களின் ஸகவாஸம் வைத்துக் கொள்ளக் கூடாது. படிப்பிலேயே முழு ஊக்கத்தையும் செலுத்த வேண்டும்."

அப்பாவின் உபதேசம் எனக்கு எப்படி பயன்படுமென்று நான் கலங்கினேன். நானாவது, முனைந்து படிக்கவாவது! அத்திம்பேரைப்போலே பட்டம் பரிசு பெறவாவது! ஒன்றும் சாத்தியமாகத் தோன்றவில்லை. அத்திம்பேருக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் போல் வித்யாசம் இருக்கிறதென்று நினைக்க வெட்கமும் பயமும் என்னைப் பற்றிக் கொண்டன. அப்பாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட எனக்கு சங்கோசமாயிருந்தது. நான் சோம்பேறி என்பதை அப்பா நன்கு எனக்கு உணர்த்திவிட்டார். ஆனால் நான்; அஸத்துக்களுடன் சேருவதாய் அவர் நினைத்திருக்கிறாரோ? அந்த விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. கோடியாத்து கோபு அஸத்தா? அவன் ஒருவன்தானே என்னிடம் நெருங்கிப் பழகுகிறவன்.—இதை அம்மாவிடம் சொல்லி அவனைக் கொண்டு அப்பாவின் மனதை மாற்ற வேண்டும்" என்று சங்கல்பித்துக் கொண்டேன்.

இருந்தாலும் அப்போதே அத்திம்பேரைப்போல் பட்டம் பரிசுகள்பெற்று யாரும் புகழும் பெரு



மையை அடைய ஒரு அவா என் அந்தரங்கத்தில் ஊற்றெடுக்கவாரம்பித்தது. அது சலசலவென்று பெருகி வருவதையும் நான் உணர்ந்தேன். அதில் ஒரு மகிழ்ச்சியையும் அடைந்தேன். அன்று சாயங்காலம் அத்திம்பேர் என்னை சல்லாபத்திற்கு அழைத்தார். "முத்துஸ்வாமி! நீ உன் கிளாஸில் எத்தனையாவது ஸ்தானம் பெற்றிருக்கிறாய்?"

"அத்திம்பேரே! கடைசியிலிருந்து கேட்கிறீர்களா? முதலிலிருந்து கேட்கிறீர்களா?'

அத்திம்பேரின் இயற்கைச் சிரிப்பு விரிந்து பிரகாசித்தது. "ஏன் அப்படி?"

"ஏனென்றால், ஒன்று கிளாஸ் வாத்தியாரையாவது டியூஷனுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், கேள்வித்தாள்களை அச்சாபீஸிலிருந்து வெளிப்படுத்த சாமர்த்தியம் வேண்டும்."

"வேறு வழி இல்லையாக்கும்?" என்றார் அத்திம்பேர்.

"இருந்தால் சொல்லுங்கள். அத்திம்பேரே! நீங்கள் உங்கள் காலத்தில் எப்படித்தான் வரிசையாக எல்லாப் பரீக்ஷைகளிலும் முதல் ஸ்தானத்தைப் பெற்றுத் தேறி வந்தீர்களோ?"

'அதை உனக்கு யார் சொன்னது?"

"அப்பாதான் சொன்னார்."

"அப்போது உன் அப்பா நான் எப்படி முதலில் தேறி வந்தேன் என்பதை மட்டும் சொல்லவில்லையா?"

"இல்லை. அதை உங்களிடம் கேட்டுக்கொள்ளும்படி சொன்னார். ஏன், அத்திம்பேரே! நானும் எவ்வளவோ முயற்சியுடன்தான் படிக்கிறேன். நான் நன்றாய் படித்த இடங்களிலாவது, எனக்கு நன்றாய் ஞாபகமிருக்குமிடங்களிலாவது கேள்வி வருவதில்லை. நான் படிக்காததும், படித்து மறந்ததுமான இடங்களிலேயே கேள்விகள் வருகின்றன. இந்த விபரீதத்திற்கு நான் என்ன செய்வது? எல்லாப் பரீக்ஷைகளிலுமே இப்படித்தானிருக்கிறது. சில பையன்கள் மட்டும், இது தான் வரப்போகிறது என்று சொல்லி நெட்டுருபோட்டு வைக்கிறார்கள். அதுவே அவர்களை முன் பெஞ்சிக்குக்கொண்டு போய் விடுகிறது. இதுவும் அதிர்ஷ்டவசம் தானா, அல்லது அவர்களுக்கு யக்ஷிணி சொல்லுமா? நீங்களும் எவ்வளவோ மேல்படிப்புகளெல்லாம் பிரஸிடென்ஸி முதலில் தேறிப் பரிசு பெற்றிருப்பதால் இதன் மர்மத்தை உங்களிடம் கேட்டால்தானே தெரியும். கேள்விகள் முன்னதாகவே தெரிந்து விடை தயார் செய்துகொண்டு போய் எழுதாவிட்டால் அவ்வளவு குறிப்பாய் எப்படி ஒன்று தப்பாமல் விடை சரியாகவிருக்கும். கல்லால் அடித்தால் கூடப் பத்துக் கல்லுக்கு ஒரு மாங்காய்தானே விழும்?'

"நீ சொல்வது வாஸ்தவம்தான். முத்து! அந்தக் காலத்தில் நாங்களும் ஏதோ மந்திர தந்திரம் செய்து தான் பாஸ் பண்ணினோம். ஆனால் அதெல்லாம் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு உதவாது."

"நீங்கள் சொல்லுங்களேன். நான் உதவும்படி செய்து கொள்கிறேன்".

"உன்னால் முடியாது அப்பா, முத்து! அது ரொம்ப சிரமமான காரியம். அதிலும் உனக்கு வயது போதாது. நான் அந்த வித்தைகளைக் கற்றபோது உன்னைவிட நாலு வயது பெரியவனாயிருந்தேன்."

"என்னால் முடியும் அத்திம்பேரே! நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன்! எனக்கு அது என்னவாயிருந்தாலும் சொல்லிவிடுங்கள் நான் பயப்படமாட்டேன். பின் தங்கமாட்டேன். பிடித்த பிடியை விடவும் மாட்டேன். நான் நினைத்தது சரியாய் போச்சு. நீங்கள் சொல்லுங்கள் நான் செய்கிறேனா இல்லையா பிறகு பாருங்கள்:"

"எனக்குமுன் வாஸுதேவராவ் என்ற ஒருவர் இந்தப் பரீக்ஷை தேறும் வித்தையைக் கற்றிருந்தார். அவர் அரிச்சுவடி முதல் ஐ. ஸி. எஸ். வரையில் முதல் ஸ்தானத்திற்கு மற்றொருவரை விட்டவரில்லை. அவரிடமிருந்து எனக்குத் தெரியவந்தது அந்த ரகசியம். அவர் என் மாமாவாத்து ஊர். வாஸுதேவராவுக்கு விச்வநாத சர்மாவிடமிருந்து உபதேசம் இந்த ரகஸ்யத்தை ஆதியில் கண்டுபிடித்தவர் ஒரு குடகுமலை யதீச்வரராம்."

"நீங்கள் யாருக்குச் சொல்லி வைக்கப்போகிறீர்கள்'?

"இது வரையில் நான் ஒருவருக்கும் சொல்லிக்கொடுக்கவில்லை."

"எனக்குத்தான் அத்திம்பேரே! நீங்கள் சொல்லிக் கொடுக்கப் போகிறீர்கள். நானும் ஐ. ஸி. எஸ். வரை ஒரு கை பார்க்கிறேனா இல்லையா பாருங்கள்!

"அதெல்லாம் சரி, முத்து, நீ அந்த உபாயம் ஏதோ லகுவாய் இருக்கும் என்று எண்ணுகிறாய் போலும். அதன் சிரமம் உனக்கு நான் சொன்ன பிறகு தெரியும். மேலும் தேவானுகூலம் வேண்டும். முயல் கொம்புபோல் அதற்குத் தேவையான இரண்டொரு பதார்த்தங்கள் கிடைப்பது துர்லபம். அந்த சாமான்களைத் தயாரித்துக்கொண்டுதான் மேலே மந்திர தந்திரங்களை பிரயோகம் செய்ய வேண்டும். ஏதோ அதிர்ஷ்ட வசத்தினால் எனக்கு அந்த சாமான்கள் இரண்டொரு வருஷம் தேடிக்கொணர்ந்த பிறகு எதிர்ச்சையாய்க் கிடைத்தது. அப்படியே மறுபடி கிடைக்குமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? அதெல்லாம் நடைபெறாது. ஏதோ உன்னால் முடிந்த வரையில் புஸ்தகங்களை கவனமாய் படி. தோல்வி இல்லாமல் தேறினால் போதும். அதிர்ஷ்டமிருந்தால் நல்ல வேலை கிடைக்கிறது. அதற்கும் பரீக்ஷையில் முதலில் தேறுவதற்கும் சம்பந்தம் இடையாது."

"அத்திம்பேரே! இப்படியெல்லாம் சொல்லி என்னை ஏமாற்றி விடாதீர்கள். எனக்குக் கண்டிப்பாய் அந்த ரஹஸ்யத்தைச் சொல்லிக் கொடுத்து விடுங்கள். ஒரு வருஷமில்லை, இரண்டு வருஷங்களில்லை, எட்டு வருஷங்கள் ஆகட்டும்; அந்த வஸ்துக்களை நான் கண்டுபிடித்தே தீருவேன். நீங்கள் சந்தேகப்படவேண்டாம், உங்களுக்கு வாஸுதேவராவ் அத்திம்பேரில்லையே? அவரே உங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கும்போது நீங்கள் ஏன் எனக்குச் சொல்லிக் கொடுக்க யோசிக்கிறீர்கள். சொன்னாலொழிய நான் உங்களை விடமாட்டேன். உங்களோடு ஊருக்கும் வந்துவிடுவேன்."

(தொடரும்)

# ரகசியக் கல்யாணம்

நியாயவாதி

"ஆனி மாதம் பிறந்து விட்டது. அலைந்து அலைந்து பார்த்தாய்விட்டது. இந்த வருஷம் ருக்மணியின் விவாகத்தை நடத்த முடியாது என்று தோன்றுகிறது" என்று பெருமூச்செறிந்தார் கைலாஸமய்யர்.

உள்ளேயிருந்து வெற்றிலைத் தட்டுடன் வந்த அவர் மனைவி தர்மாம்பாள், "என்னமோ நானும் தான் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். நீங்கள் ஒரு இடத்துக்கு இரண்டு இடமாயும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாயும் அலைந்து பார்த்தால்தானே ஏதேனும் ஒரு நல்லவரன் கிடைக்கும்? ருக்மணிக்குப் பதினாறு வயதுக்கு மேல் ஆய்விட்டது. அவள் ஸ்கூல் பைனல் பரீக்ஷை தேறியதுடன் படிப்பையும் நிறுத்தியாய்விட்டது. இனி சும்மா இருக்கலாமா?" என்றாள்.

அவள் கொடுத்த வெற்றிலையை மென்றுகொண்டே கைலாஸமய்யர், "நீ ஆத்தில் இருந்து கொண்டே இதுவும் சொல்வாய் இன்னமும் சொல்வாய். அலைந்து பார்த்தாலல்லவோ சிரமம் தெரியும்? பிள்ளைகளை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் எல்லாரும் என்னமோ உயர்ந்த சிம்மாஸனாதிபதிகளாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்கள் கழுத்துகளில் கிற்பதில்லை பெண்கொண்டு வருபவர்களை மனிதராக மதித்துப் பேசுவதில்லை" என்றார்.

அவர் மனைவி "நீங்கள் அலைந்து விட்டு வந்திர்களே! திருச்சியில் இறங்கி என் அண்ணா விசுவத்தைப் பார்த்தீர்களா?" என்றாள்.

அவள் கணவர், "பார்க்காமலென்ன? பார்த்தேன்! அவனிடம் ருக்மணியின் விவாக விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? "இந்த ஊரில் உங்களுக்கு ஏற்ற வரன் அகப்படாது. உங்கள் பிராந்தியத்திலேயே வரன் தேடுங்கள் என்றான். போதுமோ இல்லையோ!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டார்.

"கிருஷ்ணனைப்பற்றிக் கேட்கவில்லையா?"

நான் கேட்கவில்லை. அவனே சொன்னான் என்ன தெரியுமா?

"பதினாயிரம் ரூபாய் சீருடன் வந்து எத்தனையோ பெரிய மனுஷர்கள் பெண்களைக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவன் பிள்ளை ஒருத்தியையும் கல்யாணம் பண்ணிக்கொள்ளமாட்டேன் என்கிறானாம்."

"கிருஷ்ணன் எங்கே இருக்கிறான்?"

"போன வருஷம் எம். ஏ. பரீக்ஷை தேறி சென்னையில் ஒரு கலாசாலையில் கணக்கு உதவி ஆசிரியனாய் இருக்கிறானாம். அவன் நமது ருக்மணிக்கு ஏற்ற வரன் என்று இதுவரையிலும் எண்ணியிருந்தேன். ஆனால், தெய்வ சங்கல்பம் அதற்கு இடம் கொடுக்காது போல் தோன்றுகிறது" என்று பெருமூச்சு விட்டார் கைலாசமய்யர்.

"கிருஷ்ணன் நல்ல பையன். அவன் 'அத்தை அத்தை'யென்று என்னிடம் எவ்வளவோ ஒட்டிக்கொண்டிருப்பான். ருக்மணியிடம் அவனுக்கு அலாதியான அன்பு. அவளுக்கு அவன் மீது ஆசையென்று எனக்குத் தெரியும். ஆனால் என்ன பண்ணுவது? அவனும் அண்ணாவும் அந்தக் கிராகியிடம் அகப்பட்டுக்கொண்டு முழிக்கிறார்கள். அவள்தான் பணத்தாசை பிடித்து அலைகிறாளே?" என்றாள் தர்மாம்பாள்.

"ஆமாம். அவளைக் கண்டால் உன் அண்ணா நடுங்குகிறான். பிள்ளையின் ஜாதகத்தை அச்சடித்து வைத்திருக்கிறாளாம். ஜாதகம் கேட்க வருபவர்களிடம் தன் இரண்டு கை விரல்களையும் நீட்டி அத்தனை ஆயிரம் வரதட்சிணை கேட்கிறாளாம்? என்ன அநியாயம்" என்றார் கைலாஸம்.

"பதினாயிரத்துக்கு நாம் எங்கே போவது?"

"ஆமாம், எங்கே போவது? நான் கஷ்டப்பட்டு கல்யாணத்துக்காக மூவாயிரம் ரூபாய் பாங்கில் போட்டு வைத்திருக்கிறேன். அதற்குமேல்—தாலுகா ஆபீஸில் ஹெட் அக்கௌண்டண்ட் உத்தியோகம் பார்க்கும் என்னால் எப்படிச் செலவழிக்க முடியும்? உன் மருமான் கிருஷ்ணன் நமக்கு எட்டாதவனாய்விட்டான். இனி அவனைப்பற்றிச் சிந்திப்பதில் பிரயோஜனமில்லை" என்று சொல்லிக்கொண்டே வாசலுக்கு வந்தார் கைலாஸமய்யர்.

அப்பொழுது அங்கே வந்த பக்கத்து வீட்டு பரசுராம ராவ், "என்ன ஐயா? என்ன விஷயம்" என்றார்.

பரசுராமராவ் சேலத்தில் ஒரு வக்கீல். அதே ஊரில் அவருக்கு அடுத்த வீட்டுக்காரரான கைலாஸமய்யரிடம் நெருங்கிப் பழகுபவர். அவரிடம் கைலாஸமய்யர் சொல்லாத ரகஸியமில்லை.

வக்கீலிடம் கைலாஸம்தான் அதுவரையில் தன் மனைவியிடம் பேசிய விஷயத்தைத் தெளிவுபடுத்தினார். அதைக் கேட்ட ராயர், "இதுதானா! நான் நாளை திருச்சிக்குப் போகப்போகிறேன். உம்முடைய மைத்துனன் விசுவாசத்தைப் பார்க்கிறேன். பிறகு சென்னைக்கு ஒரு வழக்கு விஷயமாய் பிரயாணமாவேன். கிருஷ்ணனையும் பார்ப்பேன். கட்டாயம் கிருஷ்ணன்-ருக்மணி விவாகத்தை முடித்து வைப்பேன் என்றார்.

## 2

மறு நாள் சாயந்திரம் பரசுராம ராவ் திருச்சியிலிருந்த ரயில்வே ஆடிட்டர் ஆபீஸ் ஹெட்குமாஸ்தா விசுவத்தை வீட்டுக்குப் போனார். அவருக்குத் தடபுடலாக விசுவம் உபசாரம் நடத்தினார்.

பரஸ்பர க்ஷேம லாபங்கள் விசாரிக்கப்பட்டன. பிறகு ராயர் "உங்கள் குமாரன் கிருஷ்ணனுக்கு இன்னும் விவாகம் நடைபெறவில்லையா? என்று கேட்டார்.



விசுவம் தலையை அசைத்துக்கொண்டே, "இல்லை சார். எவ்வளவோ பெரிய இடங்களிலிருந்து பெண் கொடுக்க வருகிறார்கள். எல்லாவற்றையும் வேண்டாம் என்று தள்ளிவிட்டு அவன் பிரம்மசாரியாகவே இருக்கிறான்" என்றார்.

"கிருஷ்ணனுக்கு வயது இருபத்து நாலு இருக்குமல்லவா? என்ன ஸார். இதுதான் சரியான காலம். காலாகாலத்தில் கல்யாணம் செய்யாவிட்டால் என்ன நடக்குமோ யார் கண்டார்கள்? பால்யப் பருவம் பாருங்கள்! அதுவும் பட்டணம் பொல்லாத ஊர். என் ஷட்டகன் மகாதேவன் பிள்ளைக்கு நேர்ந்தது உமக்குத் தெரியுமோ இல்லையோ?"

"தெரியாதே! [illegible]ன அது" என்று ஆவலுடன் [illegible]ட்டார் விசுவம். அவன் ஸகதர்[illegible]ணி உள் பக்கத்து ஜன்னலிலிருந்து கேட்கத் தயாரானள்.

பரசுராம்ராவ், சொல்லத் தொடங்கினார்:—

"என் ஷட்டகன் காசாசைப் பிடித்தவன். அவன் பிள்ளை கோவிந்தனுக்கு எம். ஏ. பரீக்ஷை தேறியபின் அவனுக்குக் கல்யாணம் செய்ய முன் வருபவர்களிடம் பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கேட்க ஆரம்பித்தான். பிள்ளையின் ஜாதகத்தை அச்சடித்து வைத்துக்கொண்டதுடன் அதன் பின் பக்கம் தன் மகனுக்கு வேண்டிய டௌரி விவரங்களையும் அவற்றின் பெருமானத்தையும் குறிப்பிட்டிருந்தாராம். எல்லாம் சேர்ந்து முப்பதினாயிரம் இருந்தால்தான் பிள்ளையைக் கல்யாணம் செய்யலாம் என்பது துணிவாயிற்று. இவ்வளவு பணத்துடன் முன் வருபவர் யார்? ஒருவருமில்லை.

"பிள்ளைக்கு சென்னையில் ரேடியோ நிலயத்தில் உத்தியோகம் கிடைத்தது. அங்கே வேலைக்கு அமர்ந்திருந்த ஒரு இளம் பாடகியுடன் அவனுக்கு நெருங்கின தொடர்பு ஏற்பட்டது."

"பாடகி நாயுடு ஜாதிப் பெண். ஆனால், என்ன? அவர்மீது காதல் கொண்ட காளைப்பருவத்தினனாகிய கோவிந்தனுக்கு அது ஒரு தடையா? இருவருக்கும் ரிஜிஸ்டர் விவாகம் நடைபெற்றது.

இருவரும் புருஷனும் மனைவியுமான ஒரு வாரத்துக்குப் பின் என் ஷட்டகனும் அவன் மனைவியும் ஒரு நல்ல இடத்துப் பெண்ணை மகனுக்கு நிச்சயம் செய்து கொண்டு பட்டணம் சென்றனர். அப்பொழுதுதான் அவர்களுக்குக் காரியம் மிஞ்சிவிட்டது என்பது தெரிய வந்தது. பெருத்த ஏமாற்றத்துடனும் வருத்தத்துடனும் ஊருக்குத் திரும்பி வந்தார்கள். இன்னும் என் ஷட்டகன் வெளியே தலை காட்டவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடக்கிறான்".

மேற்கண்ட விருத்தாந்தத்தைக் கூறியபின் பரசுராமராவ். "உங்கள் பிள்ளை விஷயத்தில் ஜாக்கிரதையாயிருங்கள். ஏதேனும் அஸம்பாவிதம் நேர்ந்துவிடப் போகிறது" என்று கூறிவிட்டு எழுந்தார்.

விச்வத்தின் முகத்தில் ஈயாடவில்லை. அவர் மனைவிக்கும் அதே விதமான திகில் உண்டாயிற்று.

## 3

சென்னைக்கு வந்த ராயர் இரண்டு தடவை கிருஷ்ணன் இருந்த விடுதிக்குச் சென்றார். அவர் அவனைக் காணவில்லை. அக்கம்பக்கத்தில் விசாரித்ததில் அவன் உத்தியோகம் வகித்த கலாசாலையில் அவனைப்போல் உதவி ஆசிரியராயிருந்த அச்சுத மேனன் என்பவனது வீட்டுக்குப் போவது வழக்கம் என்பதையும், மேனனின் இளைய சகோதரியும் விவாகமாகாத அழகிய கன்னியும் கலாசாலை மாணவியுமான பார்வதிக் குட்டி என்பவளுடன் அவன் நெருங்கிப் பழகுவது உண்டு என்பதையும் உணர்ந்துகொண்டார். அவனைப் பார்க்காமலே சேலத்துக்குத் திரும்பினார்.

மறுநாள் திருச்சியிலிருந்த விசுவனாதய்யருக்குப் பின் வரும் கடிதம் வந்தது:—

"உஷார்."

பணத்தாசையினால் உம் மகன் போக்கில் கவனிக்காமலிருக்கிறீரே! அவன் கலாசாலையில் படிக்கும் பார்வதி குட்டி யென்ற மலையாளிப்பெண்ணுடன் காதல் நாடகம் ஆடுகிறான். சீக்கிரம் அவர்களுக்கு ரிஜிஸ்டர் மணம் நடைபெறக்கூடும். காரியம் மிஞ்சிவிடுவதன் முன் தக்க ஏற்பாட்டைச் செய்யவும்.

உண்மை உரைப்போன்.



கடிதத்தைப் படித்தபின் விசுவம் தலையில் அடித்துக்கொண்டார். தனது மனைவியைக் கடிந்துகொண்டார். அந்தப் புண்ணியவதியும் கலங்கினாள். என்ன செய்வது என்பது அவளுக்குத் தெரியவில்லை.

"பாவி! உன் பேச்சைக்கேட்டுக்கொண்டு நான் சுவர்ண விக்ரஹம் போல் இருக்கிற என் அக்கா பெண் ருக்மணியை கிருஷ்ணனுக்கு விவாகம் செய்துவைக்காமல் இருந்தேனே! அவன் அவளுடன் எவ்வளவோ பிரேமையுடன் இருந்தானே! இப்பொழுது ஒரு மலையாளச்சி உனக்கு நாட்டுப் பெண்ணாய் வரப்போகிறாள்! எல்லாம் உன் பேராசையால்தான்" என்று அவர் கதறினார்.

"இன்னும் காரியம் மிஞ்சிவிடவில்லை. உங்கள் பிள்ளை அவளைக் கல்யாணம் செய்ய சம்மதித்தல் நான் குறுக்கே நிற்கவில்லை, விவாகத்தை நடத்திவிடுங்கள்" என்று விம்மினாள் அவர் தர்மபத்தினி.

அன்றிரவே விசுவநாதய்யர் ரயில் ஏறினார். சென்னையில் தன் மகனைக்கண்டு பேசினார். ருக்மணியைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினார். கிருஷ்ணனுக்கு இது எவ்வளவோ அதிசயமாயும், இன்பகரமாயும் இருந்தது. ஏனெனில் அவன் தன் பெற்றோர் கொண்டுவந்த பெண்களையெல்லாம் தள்ளுபடி செய்தது அவன் ருக்மணியின்மீது கொண்ட காதலினால்தான்.

"அப்பா ஒரே நிபந்தனையின் பேரில்தான் நான் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்கிறேன். நீங்களாவது அம்மாவாவது வரதக்ஷிணை இவ்வளவுவேணும், சீர் இத்தனை வேணும் என்று கேட்கக்கூடாது" என்றான்.

விசுவனாதய்யர் "நாங்கள் வாயைத்திறக்கவில்லை" என்றார்.

* * * *

விசுவனாதய்யரும் அவர் மனைவியும் முந்திக்கொண்டு ருக்மணியின் கல்யாணத்தை நடத்திவைக்க துரிதப்பட்டது கைலாஸய்யருக்கு அதிசயமாகவே இருந்தது.




"இந்த தர்ம சங்கடத்தை யாருண்டே சொல்லிண்டு அழறது. பர்ஸ்லேந்து ஒரு ரூபாய் கீழே விழுந்துடுத்து. அதை எடுக்க ரோட்லே காலை வெச்சேன்னு, பிளாட்பாரத்திலே நடக்கலேன்னு அரெஸ்டுபண்ணி ரெண்டு, மூணுன்னு அபராதம் போட்டுடுவானே"

ஆனால், அவர் மனைவி தர்மாம்பாள் கூறினதுபோல் மருமகளின் கல்யாணத்தில் அம்மானுக்கு இல்லாத அக்கறை வேறு யாருக்கு உண்டு?

கிருஷ்ணனுக்கும், ருக்மணிக்கும் ஆவிமாத முடிவில் இனிதாக விவாகம் நடந்தேறியது. அவர்களது பெற்றோரது ஆனந்தத்துக்கு ஒரு எல்லையேயில்லை. தன் மகன் ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பியதாக எண்ணிய விசுவனாதய்யர் தனது தங்கையின் புருஷன் கல்யாணச் செலவை எவ்வளவு குறைத்துச் செய்யலாமோ, அவ்வளவு குறைக்கும்படி வற்புறுத்தினார். யாதொரு ஆடம்பரமுமின்றி திருமணம் நடந்தது.

கல்யாணத்தன்று மணமகளுக்கு ரிஜிஸ்டரில் ஒரு பார்ஸல் வந்தது. அதைப் பிரித்து கிருஷ்ணன் தன் மனைவியிடம் காட்டினான். அதில் ஒரு தங்க சங்கிலியும், ஒரு தங்க முடியுள்ள பௌண்டன் பேனாவும் இருந்தன. ஒரு சீட்டில் "மணமகளுக்கு—சகோதரி பார்வதி குட்டியால் அன்புடன் அளிக்கப்பட்டது" என்று எழுதியிருந்தது.

ஆம்! பார்வதிகுட்டி சகோதரி பாவத்துடன்தான் கிருஷ்ணனுடைய பழகியுள்ளாள். பரசுராமராவ் விபரீதமான சந்தேகத்துடன் விசுவனாதய்யருக்கு அனுமதேய கடிதம் எழுதினதும் நன்மையையே அளித்தது. ஏனெனில் அக்கடிதம் வராவிடில் ருக்மணி கல்யாணம் எளிதில் நடைபெற்றிருக்காதல்லவா!

———★———





# அலமுவின் கடிதங்கள்

என். எஸ். ஸ்ரீ


*அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.*

உலகத்திலே மனிதர்களுடைய போக்கே வெகு விசித்திரமாயிருக்கிறது. ஒரு சமயத்தில் இருந்தமாதிரி இன்னொரு சமயத்தில் இருப்பதில்லை. பணம் பதவி எல்லாம் இருந்தால் அப்பொழுது அவனுடைய போக்கே ஒரு அலாதியாகத்தான் இருக்கிறது. அப்பொழுது அவன் பிறத்தியாரிடத்தில் நடந்து கொள்ளும் மாதிரி, பெருந்தன்மை, உத்ஸாகம், எதிலும் பட்டதும் படாததுமாய் நடந்து கொள்ளும் ஒரு அலட்சியமான புத்தி, அதனுடைய போக்கே ஒரு தினுசுதான். அதுவே கொஞ்சம் சருக்கல் காலம் வந்தால் அதாவது அந்தப் பணமும் பதவியும் போய் விட்டால்-அவன் எவ்வளவு பயங்கரமாக மாறி விடுகிறான் தெரியுமா? எப்பொழுது பார்த்தாலும் சிடு சிடு வென்று முகத்தை வைத்துக் கொள்வது, அற்ப விஷயங்களுக்கெல்லாம் மனஸ்தாபம், கிரமமாக பரிகாசமாய் நடந்து கொண்டால்கூட அதில் தப்பு கண்டு பிடிப்பது, நன்றாக இருப்பவர்களைக் கண்டால் பொறாமை. அப்படிப்பட்டவர்கள் மீது அனுவசியமான மனஸ்தாபம், எல்லாம் தானாகவே, ஏற்பட்டு விடும்போலிருக்கிறது.

விமலாவின் தகப்பனார் நல்ல அந்தஸ்திலிருந்தபோது அவள் இங்கே வந்து கொஞ்ச நாள் குடித்தனம் பண்ணியிருக்கிறாள். அப்பொழுது அவள் இங்கே நடந்துகொண்ட மாதிரி, என்மீது அவள் காட்டிய அன்பு எல்லாவற்றையும் பார்த்து இந்தத் தெருவே யல்லவோ பிரமித்துப் போய்விட்டது! அப்பொழுது மாமியார் கூட ஒரொரு சமயம் நாங்கள் இரண்டுபேரும் ஒன்றுசேர்ந்து கொண்டு தன்னை உதாசீனம் செய்வதாய் நினைத்ததுண்டு. அப்படிப்பட்ட பெண் இப்போது இங்கே நடந்துகொள்ளும் மாதிரியைப்பார்த்தால் ஒரே வியப்பாகத்தான் இருக்கிறது—அதனுடைய பொறுமையையும் அற்பத்தனத்தையும் பார்த்தால் சில சமயம் அழுகைகூட வந்து விடுகிறது போயேன். அவ்வளவு அசட்டுத்தனமாய் நடந்துகொள்கிறது. முன்பு நாத்தனார் கூடத்தான் இந்தமாதிரியெல்லாம் நடந்து கொண்டிருந்திருக்கிறார். இருந்தாலும் எப்பொழுதாவது ஒரு சமயம் வருகிறவர்; கொஞ்சநாளைக்கு இருந்துவிட்டுப் போய்விடுகிறவர்; ஏதோ அசடு தெரியாமல் சொல்கிறது, என்று பட்டதும் படாததுமாய் இருந்துவிடுவேன். இதனுடைய விஷயம் அப்படியில்லைபார். தகப்பனார் இறந்துவிட்டார். சொத்தெல்லாம் கடனில் போய்விட்டது. ஆம்படையானுக்கும் உத்தியோகம் ஒன்றுமில்லை. தகப்பனார் சொத்தை நம்பி வீட்டோடு இருந்துவிட்டது. ஆகவே இது இனிமேல் இங்கே கூடவே இருந்தாக வேண்டும். இதை நினைத்துக்கொள்ளும் போது தான் பகீர் என்கிறது. நானும் பட்டதும் படாததும்போல் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருந்துகொண்டு வருகிறேன். 'ஒருவேளை இராவிட்டால், ஒருவேளை ஏதாவது 'நெருக்கடி' வந்துகொண்டுதான் இருக்கிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இதற்கெல்லாம் பாதி காரணம் 'இவரே' என்றுகூடச் சொல்லலாம். 'இவருக்குத்தான் கள்ளங்கபடம் ஒன்றுந் தெரியாதா? வெளியே போய் விட்டால் என்னவோ, வீட்டுக்குள்ளிருக்கும்போது நிமிஷத்துக்கொருதரம் அலமுவைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டும். பக்கத்திலே யார் யார் இருக்கிறார்கள், எப்படி எப்படி நினைத்துக்கொள்வார்கள், அதெல்லாம் கொஞ்சங்கூடக் கவனிப்பது கிடையாது. அலமுவைக் கலந்துகொள்ளாமல் தான் ஒன்றும் செய்வது கிடையாதா? அடிக்கடி கூப்பிட்டுக் கொண்டு ஏதையாவது யோசனை கேட்டுக்கொண்டே இருப்பார். யாராவது சினேகிதர்கள் ஏதாவது யோசனை கேட்டால்கூட அலமுவிடம் தான் வந்தாக வேண்டும்! தான் வெளியே சென்று அன்று சாதித்தவை, சாதிக்க வேண்டியவை எல்லாவற்றையும் அலமுவிடம் ஒப்பித்தாக வேண்டும். இதையெல்லாம் விமலா பார்த்துக்கொண்டிருக்கிறாளா? அந்த வீட்டிலேயே ஏதோ, தனக்கு இல்லாத ஒரு பெரிய செல்வாக்கு எனக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டுவிடுகிறது. இவருடைய ஆம்படையானை இந்த மாதிரியெல்லாம் நான் இருக்க

வேண்டாமென்று சொன்னேனா? அன்று கலியாணம் ஆன புதிதில் இவளும், கோபுவும் அரை நிமிஷம் அந்த மெத்தை அறையை விட்டு வெளியே வரமாட்டார்கள். என்னதான் இருக்குமோ! நாள் முழுவதும் எதையாவது ஓயாமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். புருஷன், மனைவி என்ருல் சிறிசுகள், அப்படித்தான் எதையாவது பேசிக்கொண்டிருக்குங்கள் என்று நான் எண்ணி சகஜமாக இருக்கவில்லையா? மாமியார்கூட என்மேலிருந்த வெறுப்பினுல் அன்று இதற்கெல்லாம் வாயைத் திறக்காமல்தான் இருந்தார். இப்பொழுது அந்த மாதிரி இருப்பதை நான் வேண்டாமென்கிறேனா? இவர் நிமிஷத்துக்கொருதரம் அலமுவைக் கூப்பிட்டால் அவர் செகண்டுக்கொருதரம் விமலாவைக் கூப்பிடட்டுமே. கூடத்துக்கும், உள்ளுக்கும் போகும் போதும் வரும்போதும் தலைப்பைப் பிடித்துக் கொண்டு கூடவே சுற்றித் திரிந்து கொண்டிருக்கட்டுமே! நானு வேண்டாமென்கிறேன்? அதெல்லாம்கூட ஆச்சரியமில்லை. இவர் சில நாளைக்கு பொழுது போக்குக்காக என்னை பீச்சுக்குக் காரில் அழைத்துக் கொண்டு போகிருர். இவளை யார் கூட வர வேண்டாமென்று சொன்னது? 'அவளுக்கென்ன? கார் இருக்கிற பெருமை! நினைத்துக்கொண்டால் கடை, கடைத்தெரு, பீச்சு, சினிமா என்று கிளம்பிவிடுகிருள். மன்னிதான் ஒருத்திகூடவே இருக்கிருள் எதற்கும். நம்மை யார் லட்சியம் செய்கிருர்கள்?' என்று கணக்கு வாத்தியாராத்து மாமியிடம் குறை சொல்லிக்கொள்ளுகிருளே! இவளை யார் போகவேண்டாமென்றது? தகப்பனுர்தான் போய்விட்டார் சொத்தும் தான் போயிற்று. அவருடைய அந்த காராவது நிலைக்கக் கூடாதா? அதையுமா கடன்காரன் கொண்டுபோய்விட வேண்டும்? மனஸுக்குத் தகுந்த மாதிரிதானே எல்லாம் இருக்கும்!





“விமலா ஏதாவது கேட்டால் கோபு முகம் கொடுத்துக்கூட பேசமாட்டேனென்கிருன்!”

கோபுவோ அடியோடு மாறிவிட்டார். விமலா ஏதாவது கேட்கப் போனால் முகங் கொடுத்துப் பேசமாட்டேனென்கிருர். அப்படி ஏதாவது ஒன்றுக்கு இரண்டு தடவையாகக் கேட்டால்'சள்'ளென்று சீறிவிழுகிருர். இந்த உலக சிந்தையே இல்லாதமாதிரி இருக்கிருர். விமலா காபியை எடுத்துக்கொண்டு போனால் கையில்கூட வாங்குவதில்லை. மேஜைமேல் வைத்தால் எதையோ பிப்பாயில் தள்ளுகிற மாதிரி கடகடவென்று அரை செகண்டில் குடித்துவிட்டு டம்ளரை மேஜைமேல் வைத்து விடுகிருர். 'இவரிடம்' நான் காபியை எடுத்துக்கொண்டு போனுலா, பத்து நிமிஷத்துக்குள் குறைந்து திரும்பிவர முடிகிறதில்லை. எதையாவது ஊர் வம்பளப்பு; வம்பளந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ருசிபார்த்துக்கொண்டுதான் சாப்பிடுவார். சாப்பிட்டு முடிகிறவரையில் அங்கே இங்கே போகக்கூடாது. அங்கேயேயிருந்து டம்ளரை வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும். 'ஒரு டம்ளர் காப்பியை எவ்வளவு நாழித்தான் சாப்பிடுகிறதாம்' என்ருல் பீப்பாயா என்ன ஒரே மொத்தமாய் கொட்டிக் கவிழ்ப்பதற்கு.



போடி பைத்தியமே! எதையும் ருசித்துத்தான் சாப்பிடவேண்டும். அதுவும் அலமு கையால் கொடுத்தால் அதற்கு ஒரு தனி ருசி இல்லையா?! என்பார். இதையெல்லாம் விமலா மறைவில் நின்றுகொண்டு ஒட்டு கேட்டுக்கொண்டிருக்கும். கேட்க வேண்டுமா கோபத்துக்கு! அதற்காக என்ன செய்யலாமாம். இவளுக்காக 'இவருடன்' நான் பேசாமலிருந்துவிடலாமா? அல்லது, அவ்வளவு பிரீதி என் மீது வைக்கவேண்டாமென்று சொல்லிவிடலாமா? இலை மறைவு காய்மறைவு என்று சொல்வார்களே அதேமாதிரி அதிகமாக வெளிக்கு வேண்டுமானுல் காட்டிக்கொள்ளாமல் இருக்கலாமேயொழிய 'இவர்' பிரீதியுடன் பேச வந்தால், உதறிக்கொண்டு போய்விட [illegible] இருக்கும்! உலகத்திலே எல்லோருக்கும் உள்ளதுதானே இது!




“அம்முவின் கையால் கொடுத்தால் அதற்குத் தனி ருசி இல்லையா......?”

ஒன்றும் பிரமாதமில்லை. அல்ப விஷயம். ஊரிலிருந்து ஒட்டி அனுப்பிய பசுமாடு நன்ருகக் கறக்கிறது. காலையிலே காப்பிக்கு எருமைப் பால் வாங்கி விடுகிருேம். மறு நாள் தயிருக்கும் ராத்திரி பால் வாங்கி தோய்த்துவிடுகிருேம். வாங்குகிற பால் ஒரே ஜலமாயிருக்கிறதேயென்று 'வீட்டில் கறக்கும் பசும் பாலை ராத்திரி எல்லோரும் சாப்பிடுவதற்கு உபயோகப் படுத்துவது வழக்கம். இந்தப் 'புனை சுருட்டெல்லாம்' நமக்கு வழக்கமா என்ன? எல்லோருக்கும் கொடுக்கிறமாதிரி கோபுவுக்கும் கொடுக்கச் சொல்லி அவளையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி இரண்டு டம்ளர் பாலை விமலாவிடம் கொடுத்தேன். பாவம்! உங்கள் மன்னிக்குப் பின்னும் கொஞ்சம் கொடுங்கள். உடம்பு சரியில்லாதவர். நமக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை,' என்று நான் கொடுத்த பாலை விமலா திருப்பி விட்டாள். எவ்வளவு சொல்லியும் வாங்கிக் கொள்ளவில்லை. மன்னியின் மீதுள்ள நல்லெண்ணத்தினுல் தான் திருப்பி விட்டாளென்று நினைத்துக்கொண்டு பேசாமல் திரும்ப வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். நீதான் சொல்லேன். இதில் வேறு விதமாக நினைக்கிறதற்கு என்ன இருக்கிறதென்று! ஆனுல் மறுநாள் கணக்கு வாத்தியாரகத்து மாமியிடம் சொல்லியிருக்கிருள், உலகத்திலேயே யாரும் கண்டிராத பசு ஓட்டிக்கொண்டு வந்துவிட்டாளே! அந்தப்பால் இல்லாத குறைதான் பெரிதாக இருக்கிறது! அதை வாங்கிச் சாப்பிடுவானேன், அவள் பிறந்தகத்திலிருந்து நோயாளிக்கென்று ஓட்டியனுப்பிய பசும்பாலை நாங்கள் குடித்துவிடுகிருேம் என்ற வீண் வார்த்தை கேட்டுக் கொள்வானேன். எங்கள் தகப்பனுர் வைத்திராத பசுவா? அதுகள் ஏதாவது சொல்லுமென்று தான் எங்கள் அம்மா இங்கே வந்து இருக்கமாட்டேனென்று சொல்லிவிட்டாள்' என்ருளாம். எப்படியிருக்கிறது பேச்சு?. இதில் இன்னெரு சூக்ஷமம். மன்னியும், அண்ணுவும் இங்கே இருக்கிருர்கள் என்பதற்கு மறைமுகமான தாக்குதல் இது. அண்ணு வெறுமனேயா சாப்பிடுகிருன்? அவர்களுடையசெலவுக்குமேல் பின்னும் 10 ரூபாய் கொடுத்து விட்டுத் தான் சாப்பிடுகிருன். அவனுக்குக் கூட நல்லவேளையாக இடம் கிடைத்துவிட்டது. நாளைக்கே போய்விடுவதாக

மன்னி சொல்லிக்கொண்டிருக்கிருள். அவள் இருப்பதனுல் எவ்வளவோ உபகாரமாக இருக்கிறதென்று நான்தான் திருப்தி வைக்கிறேன். எப்போது இந்த மாதிரி வார்த்தை வந்ததோ, இனிமேல் அவள் இங்கே இருப்பது நியாயமில்லை என்று தான் எனக்கும் தோன்கிறது.


இதுவா, இது அல்ப விஷயம். இன்னும் எவ்வளவோ பெரிய பெரிய பாரதமெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ரொம்ப ரஸமான விஷயங்கள்! எவ்வளவோ எழுத வேண்டியிருக்கிறது.

அதோ கணக்கு வாத்தியாரகத்து மாமி வருகிருள். இப்பொழுதெல்லாம் அவள் விமலாவுடன் ரொம்ப கூட்டாளி. என்னிடத்திலும் ரொம்ப ப்ரியமாதிரி காட்டிக் கொள்கிருள். எல்லாம் வெறும் வேஷம்! கதைத்துக்கு ஏதாவது விஷயம் சேகரித்துக் கொண்டு போவதற்காக வைத்துக்கொள்ளும் நட்பு இது. இப்படிக்கு,


உன் அன்புள்ள
அலமு



ஸ்ரீமதி வி. டி. காந்திமதி, பி. ஏ. (ஆனர்ஸ்) பி. டி. அன்னிய நாடுகளில் உயர்தரப் படிப்புக்காக இந்திய ஸர்க்காரின் உதவிச் சம்பளம்பெற சென்னை ஸர்க்காரால் இவர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்திரமனைப் பெற்ற முதல் ஸ்திரீ அட்வகேட், ஸ்கூல் பைனல், இண்டர், ஆனர்ஸ் பரிக்ஷைகளில் எல்லாம் இவர் முதன்மையாகத் தேறி இப்போது சட்ட கலாசாலையில் படித்துவருகிறார். சிதம்பரம் ஸ்ரீ என். தண்டபாணிபிள்ளையின் புத்திரியாவார்.




லண்டன், வைட் ஹாலில் இருந்த டொமினியன் ஆபீஸ் இப்போது காமன்வெல்த் ஹவுஸ் ஆபீஸாகப் பெயர்மாட்டப்பட்டுளது. அக் காரியாலயத்தின் தோற்றம்.



பாளி விதை எண்ணெய் இறக்குமதிக்காகப் பிரிட்டன் வருஷா வருஷம் பல கோடி பவுன் செலவிடுகிறது. அதே என்ற கொட்டையிலிருந்து இதைசெயற்கை முறையால் தயாரிக்கின்றனர். இதைக் கண்டுபிடிக்க 4 வருஷமாயிற்றும். எண்ணெய் எடுக்கும் அக்கொட்டைகளைத் தட்டில் காணலாம்.





# சிலந்தி வலை

டி. வி. எஸ்.

பொழுது விடிந்தால் ரவிக்குப் பிறந்த நாள். களங்கமற்ற தன் குழந்தை வாழ்வில் மூன்ரும் வயதின் வாயிலை நாளைக் காலை அவன் மிதிக்கிருன். நினைத்துப் பார்த்தால் நம்பவே முடியவில்லை. மலைப்பும் தட்டுகிறது; மகிழ்வும் ஓங்குகின்றது. நேற்றுத்தான் ரவி எங்களிருவரிடையே வாழ வந்தான் போலத்தோன்றுகிறது. அதற்குள் இரண்டு வருடங்கள்–இருபத்திநான்கு மாதங்கள்–வந்து தங்கிய சுவடே தெரியாது ஓடிமறைந்து விட்டன. 'குவா குவா' என்று ஜீவகீதமிழற்றி, அன்றொரு நாள் செவிகளிலே புளகிதம் பாய்ச்சிய 'தலைச்சன்' இன்று தனக்கே பிரத்தியேக பாத்தியதையான புதுப்பாஷையில் ஏதேதோ பேசிக்கொட்டுகிருன்: பொரிந்து தள்ளுகிருன். இன்பக்கதைகளெல்லாம் அவனைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ? இன்னுமொரு பாசப்பிணைப்பு. மூன்று...நான்கு ஐந்து......அப்புறம் அடுத்தடுத்து நாளும் பொழுதும் வளர்வான்... வாசிப்பான்......வாலிபனுவான்..... மறுமலர்ச்சி கிட்டிய யௌவன மனசில் காதல் நகை காட்டும்... கல்யாணம்...ஆர்வம் ததும்பிடும் உள்ளமிரண்டையும் அணைந்து பிறந்திடும் வாத்சல்யக்கனிகள்... அவன்!–ஆம் ரவிதான்–அப்பாவாவான். நான் தாத்தா பட்டம் பெறுவேன். அடேயப்பா! ஆனந்த அஸ்திவாரத்தில் எத்தனை எத்தனை எண்ணிலடங்காத கற்பனைக் கோட்டைகளை நொடிக்குப் பத்தாக நிர்மாணித்து விட்டேன்!! ஆனுலும் ஏனே மீண்டும் மீண்டும் திரும்பத்திரும்ப மனித குலத்தின் சரிதை ஒரே வார்ப்படத்தில் ஊற்றியெடுக்கப்பட்ட பழங்கதைதான் என்ற எண்ணம் என் கற்பனையைக் கவரவில்லை. சிந்தனை சந்தோஷகரமான நினைவுகளையே நாடிச் சதிசெய்து ஆழ்ந்த ஆலோசனைகளின் பிராந்தியத்திலிருந்து விடுபட்டுப் பறந்துவிட்டது. மறுபடியும் கனவுகள் காணலானேன்!

நின்ற இடத்தில் நில்லாமல் ஓடி ஓடி ஒவ்வொரு காரியமாகப் பூர்த்தி பண்ணி வந்தாள் சுசீலா. இழைகோலத்திற்கு அரிசிமாவை அம்மியில் அரைத்து எடுத்து வைத்தாள். நிர்மாலியங்களைக் களைந்து பயபக்தியுடன் யாரின் காலடியும் படாத இடத்தில் போட்டானபின்னர் சுவாமி படங்களையெல்லாம் துடைத்துக் குங்குமம், சந்தனம் இட்டாள். தரையின் தளத்தை யொட்டிச் சுவர்களுக்குக் கீழே மூன்று நான்கு அங்குல அகலத்திற்குப் 'பார்டர்' கட்டியதுபோல் காவிக் குழம்பு பூசினுள்' கூடத்தில் நடு நாயகமாகப் பெரிய கோலமிட்டுச் சுற்றிலும் செம்மண் சாற்றைப் பிழம்பிட்டாள். தானே தேய்த்துக் கழுவிய 'பளபள'வென்று ஒளி வீசும் பாலக்காட்டு' வெண்கலக் குத்து விளக்கில் எண்ணெய் திரிபோட்டு ஐந்துமுகமாய் ஏற்றி வைத்தாள். லக்ஷ்மீகரமான அந்தக் காட்சியே என்னைப் பரவசத்தில் முழுக்காட்டிற்று. அம்பிகே!" என்று அழைத்துப் பிரார்த்தனையில் அவள் அஞ்சலி புரிந்தபொழுது

குத்துவிளக் கேற்றிவைத்துக்
[கும்பிடப் போனுள்
குழலோசை கேட்டதுமே
[கூத்தாடலானுள்.

என்ற கவிதாவரிகள் அலையலையாக என் இதயத்தில் புல்லரிப்பை இறைத்தன.

தாயே பரா சக்தி! கூசுதம்மா என் கண்கள்; கூப்பிவிட்டேன் இரு கரங்கள்.

இவ்வளவு ஈடுபாட்டிற்கும் இடையில் என் பக்கம் அப்பொழுதைக்கப்பொழுது ஒரு பார்வை வீசுவாள். நாணப் பெருமிதம் அதில் நளினம் பகரும். மறுகணமே கண்ணேக்குப் பிறழ்ந்து கைவேலையில் கவனம் பதியும். நானே நாற்காலியை விட்டசையாது ஆர்வமும், பரபரப்பும் கிளுகிளுக்கும் அவளது நடவடிக்கைகளைச் சொல்லவொண்ணுத குதூகலம் கூத்தாடும் விழிகளால் பருகியவாறே அமர்ந்திருந்தேன்.

'பம்பரம்போல் சுறுசுறுப்பாய் நறுவிசாய்க் குடித்தனக் காரியங்களைப் பண்ணுகிருளடா பெண்! புத்திசாலி, விநயம் கற்றவள். எவ்வளவு காலம்தான் நான் சதமென்று நம்புவாய்? ஒரு டம்ளர் ஜலம் வேளையறிந்து கொடுக்கிற ஒருத்தியிடம் உன்னைப்பிடித்துக் கொடுக்காது போய்விட்டால் செத்தும் என் நெஞ்சு வேகாது," என்று அப்பொழுது அம்மா கெஞ்சுவாள்; விண்ணப்பிப்பாள்; மாட்டேனென்று சொல்லிவிடாதேடா!" என மன்ருடுவாள். இப்பொழுது எனக்கு ஆதரவாக ஒருத்தி வந்து சேர்ந்துவிட்டாள்—வருடம் ஐந்தாகிறது. அம்மாமட்டும், பாவம், அதைக் காணக் கொடுத்து வைக்காமல் முன்னமேயே போய்விட்டாள். ஹூம்! இதற்குள் ஆறு ஆண்டுகள் மின்னலைப்போல வாழ்வின் வானத்தில் படர்ந்து மறைந்து விட்டன. "ராஜு! ராஜு!!" என்று உசிரைவிடும் தாயார் இனி எனக்கில்லை. தாய்! அந்த எழுத்திரண்டில் அகில உலகின் அன்புக்காட்சியும் அடங்கிவிடவில்லையா? பாசத்தின் பரம நிலை; தியாகத்தின் பனிச் சிகரம்; மன்னிப்பின் உறைவிடம்–மாதா மாதா, மாதா!! அந்த வாஞ்சை மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க உய்வுண்டு. "அம்மா!" என்று என் ரவி சுசீலாவைக் கூப்பிடும் சந்தர்ப்பங்கள் அத்தனையிலும் தவருது இந்த வேதனை தோய்ந்த நினைவு என் நெஞ்சில் கிளைத்துவிடுகிறது.

அதற்குப்பின்னர் வந்தாள் சுசீலா, என்னுடனே இனி வாழ்நாள் முழுவதும் துணையாக வழி நடக்க அவளைப் பார்த்தேன், சம்மதித்தேன். கை கூடி வந்தது. கடவுளின் திருவுளத்தால் ஒரு புண்ணிய தினத்தன்று காலை என் கை விரல்கள் அவள் கோமளக் கழுத்தின் பின்புறம் களி நடனமிட்டன. மஞ்சள் கயிறு ஏறப் பெற்

ருள். மாங்கல்யத்தின் மாதுர்யம் இளமை எழில் மிகுந்த அவள் முகத்தில் பாட்டிசைத்துக் கவி கூறிற்று. பட்டுப்பூச்சிபோல் படபடத்ததோ அவள் இருதயம்! அந்த அத்தியாயமும் முடிந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டனவே!

அடுத்து வந்த இரண்டு ஆண்டுகளும் தேன்கூடு முடித்த இதழ்ச் செண்டும் தொத்திக் குடிக்கும் பொன்வண்டுமாய்' இனிமை நிறைந்த தனிமை வாழ்வு நடத்தினோம். மணம் முடிந்த மூன்றாம் வருடத் துவக்கத்தில் இருவர் மூவரானோம். இன்றோ அந்தப் பயலும் இரண்டு வயதுகளைக் கடந்துவிட்டு இன்னொன்றின் தலைவாசலில் பிரவேசிக்கப் போகிறான். காலத்தை ஒரு புரவி என்று உரைக்கின்றார்களே, அது லவலேசமும் மிகைப்பட்ட கூற்றல்ல. குதிரைப் பாய்ச்சலில்தான் காலம் மனிதனின் கைப்பிடியிலிருந்து திமிறிக் கொண்டு ஓடுகிறது. வாலிபத்தின் வலு பூரிக்கும் தன் உள்ளங் கைக்குள் வாழ்க்கையை வைத்துப் பத்திரமாக மூடிக்கொள்கிறான் மனிதன். நாட்கள் நழுவுகின்றன. மாதங்கள் மலர்ந்து உதிருகின்றன. வருடங்கள் வந்து விளையாடி வழியேகுகின்றன. வயோதிகத்தின் எலும்புக்குச்சிகளான நடுங்கும் விரல்களைப் பிரிக்கும்போது மனிதன் ஏமாற்றமடைகிறான். வாழ்க்கை எப்படியோ தன்னை ஏய்த்துவிட்டதை உணர்கிறான். அந்தத் தோல்வியின் ஏமாற்றத்திற்கு அனுபவம் என்ற பெயர் சூட்டி வெற்றியின் வாகையாகக் கருதுகிறான். "மனமே நம்பாதே! வாழ்வை நம்பாதே! உடலை நம்பாதே! உயிரை நம்பாதே!" என்று விரக்தித் தத்துவத்தை வரும் தலைமுறைகளின் புதுப் பிரதிநிதிகளுக்கு வீணில் உபதேசிக்கிறான். என்ன சிந்தனை வேண்டிக் கிடக்கிறது? சந்தோஷகரமான சம்பவத்தின் அருணோதயத்தை நாடி முதல் நாளின் மனோகரமாலையில் நிற்கும் தருணம் துயரக் கருத்துகளுக்கு என் உள்ளத்தில் இடமேது? குஷாலாய் எங்காவது கிளம்ப வேண்டும். வாழ்க்கையே சிந்திப்பவனுக்குக் கசப்பாகவும் அனுபவிப்பவனுக்குக் களிப்பாகவுந்தான் இருக்கும்.

"எந்தக் கோட்டையை முற்றுகையிட இப்படிப் பிரமாத யோசனையில் முழுகிவிட்டயள்?" என்ற மென்குரல் கேட்டு மெள்ள ஏறிட்டு நோக்கினேன். சுசீலா எதிரில் நின்றாள்.

ஒன்றுமில்லை! உன் உள்ளக் கோட்டையை முற்றுகையிடத்தான்—" என்று ஏதோ மழுப்பினேன்.

"அதுதான் அன்றே உங்கள் அன்பின் அஸ்திரத்தை எதிர்த்துச் சவால் கொடுக்க முடியாது பாதமண்ணை முத்தமிடப் பணிந்து விழுந்துவிட்டதே!" என்று சொல் தந்தாள் சுவர்ணப் பதுமை அவள் சொக்கும் அழகுடையாள். "போய்க் கொஞ்சம் நல்ல காய்கறியும் ஊதுவத்தி கற்பூரமும் வாங்கிவரக்கூடாதா?" என்று பாசமுறப் பணித்தாள்.

கடைவீதி வந்தேன் கையில் பையுடன் நெஞ்சில் பண்ணுடன். வாடிக்கையாக நான் அஞ்சலையிடம்தான் வாங்குவேன். இரண்டு பெரிய சாக்கை விரித்துப் பச்சைப் பசேலென்ற காய்கறி வகைகளைப் பரப்பிக்கொண்டு வருவோரையெல்லாம் நெடுநாள் பரிச்சயம்போல் "வாங்க சாமி நீங்களா என்று வாய் நிறைய உபசரித்துக் கூப்பிடுவாள். வார்த்தையின் இரஞ்சிதத்தால் வியாபாரத்தில் வெற்றிக்கொடி நாட்டுபவள். நயம் வடிந்த சொல்!

அதிலும் என்மீது அவளுக்கு ஒரு அலாதி மதிப்பும் அபிமானமும் என்றுமுண்டு. விலையே பேசி நிர்ணயித்துக்கொள்ளமாட்டாள். எடுத்து என் பையில் போட்டுவிடுவாள். தேவையான தருணம் 'எஜமானியம்மா' [சுசீலா]விடம் பணத்தைப் பெற்றுக்கொள்வாள். எஜமானி! யாருக்கு?—அவளுக்கா?—இல்லை! எனக்கும்கூட; இஷ்டத்துடன்.

அஞ்சலையைக்காட்டிலும் ஒருபடி மிஞ்சியவள் அவள் பெண் கண்ணம்மா. பத்துவயதுச் சிறுமி. சின்னஞ்சிறிய முகம். குறும்புச் சிரிப்பணிந்த நுதல். கன்னங்களில் இரண்டு குழிவு. கபடில்லாத குணம். சிறு மின்னொளி போலப் பாய்ந்து மோதி மனம் திளைக்கும் கன்னங்கரு விழிகள். அவை மருண்டு கண்டோர் மனம் மயக்கும். அஞ்சலையுடன் சேர்ந்து தானும் கூடக்கூடக் கொஞ்சுவாள்.





வழக்கமான இடத்தில் அன்று அஞ்சலையைக் காணோம். சுற்று முற்றும் பார்வை துழாவியும் அவள் அகப்படவில்லை. பிறகு மெதுவாகப் பக்கத்திலிருந்த பூக்கடைக்காரனிடம் ஓரணாவை நீட்டி, ஊதுவத்தி வாங்கிக்கொண்டே அவளைப்பற்றி விசாரித்தேன். 'அடாது மழை பெய்தாலும் விடாது கடை நடத்தும்' அஞ்சலையைக் காணாதது காரணமின்றி எனக்குத் திகிலுண்டாகிற்று. மனதில் ஏதோ ஒரு மூளியுணர்ச்சி முளைத்து மற்றபடி மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்த சிந்தனையை அரிக்கலாயிற்று.

'அதுங்களா சாமி! அவுங்க பொண்ணு கண்ணம்மா இல்லீங்க அது காலையிலே திடீருன்னு தவறிப் போயிடுத்துங்க. ஒரே மாரடைப்பு. உயிரைப் பலிவாங்கிடுத்து. நேற்று கடை சாத்தறதுக்கு முந்திகூட அரையணா பூக் கேட்டாங்க. கொடுத்தேன் தாராளமாகவே. பிரியமாச் சூட்டினாங்க. காலையிலே என்னடான்னு கடை திறக்கறப்ப இந்த சேதி காதிலே விழுந்திடுச்சு. என்ன போங்க மனுச வாழ்க்கை. நிச்சயமில்லாத பிழைப்பு. இன்னிக்கிப் பிராணன் நின்னுடுத்துன்னா நாளைக்கு இரண்டாம்நாள்' என்று வேதாந்தம் பேசி விஷயத்தை மொழிந்தான் அவன்.

இடியிடித்தாற்போலிருந்தது எனக்கு. நாளைக்காலை என் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டம். அவள் ஏழைக் குடிசையில் இறந்த தினத்துக்கம். இன்னமும் அடங்காத அழுகை. இல்லை! அழக்கூட மாட்டாள். வார்த்தைகளின் குறுகிய எல்லைக்கு அப்பாற்பட்ட மகத்தான சோகத்தால் விழுங்கப்பட்டுக் கண்ணீரே வற்றிக் கல்லாய்ச் சமைந்திருப்பாள். இங்கு மூன்றாம் வயதுத் துவக்கத்தில் முத்தமும் பரிசுகளும். அங்கு பத்தாவது பிராயத்திலே பாடையேறிவிட்ட பாலகிக்காக சோக நெடுமூச்சு. ஹூம்! என்ன வியவஸ்தையற்ற வாழ்க்கை இது?

பிறப்பு! பின்னர் பொன்ன[illegible]று பொழுதெல்லாம் போராட்டம். அப்புறம் தன் வழியில் எதிர்கொண்டழைக்க வரும் மரணம். விடை எடுத்துக் கொள்ளக்கூட ஒரு விநாடியும் தாமதியாது ஓடிவிடுகிறது உயிர் உடலின் சத்திரத்திலிருந்து. ஆம்! வழிப் போக்கன் போல். அப்புறம் ஆசையின் அலறல்; பாசத்தின் பெருமூச்சு. புனரபி ஜனனம்; புனரபி மரணம். சாவும் வாழ்வும் சுற்றிச் சுற்றிப் பின்னும் சிலந்திவலையில் சிக்குண்ட பேதை ஈ மனிதனுவான். உயிரின் அடுத்த கட்டத்தில் மரணம், களிப்பின் பக்கத்தில் கண்ணீர். ஏனோ? யார் சொல்வார்?

சாவு சாவு சாவுதான்
சகத்திலெங்கும் நிலவுது
பூவும் வாடிப் போகுது
பூமி சுற்றித் தேயுது

என்று பாடிச் செல்கிறான் ஒரு அந்தகன் காலணாக் காசுக்கு கை நீட்டி வழி தடுமாறிய வண்ணமே! வாழ்வின் இருளில் நாமும் தானே வழி தடவுகின்றோம்.

ஊஹூம்! எனக்கு நிரம்ப நாழியாகிவிட்டது. நேசம் துளும்பும் நேத்திரங்கள் ஒரு ஜோடியால் வரவேற்பு நவில நிலைவாசலிலேயே காத்திருப்பாள் சுசீலா. நான் வருகிறேன். ஞாபகமிருக்கட்டும்! நாளைக் காலை எங்கள் ரவிக்கு மூன்றாவது பிறந்த தினம். நினைவாக வாருங்கள். [தயவு செய்து உங்கள் ரேஷனை முன்னதாகவே அனுப்பி விடுங்கள்.]





நாவிதர்:—எஜமான், நீங்க காங்கிரஸ் கட்சியா, கம்யூனிஸ்டு கட்சியா ?


க்ஷவரம் செய்துகொள்பவர்:—நீ எந்தக்கட்சியோ, அதே கட்சி தான் நானும்.

நாவிதர்:—என்ன அப்படி சொல்றீங்க.

க்ஷவரம் செய்துகொள்பவர்:—என்ன, உன் கையிலே கத்தி இருக்கு; நானே நிராயுதபாணியா உக்காந்திண்டிருக்கேன், அதான் சொன்னேன்.











1. சுதந்திர தினத்தன்று சென்னைக் கவர்னரும், பிரதமரும் அணிவகுப்பைப் பார்வையிட்டனர். 2. டாக்டர் ராஜன் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். 3. அணிவகுப்பில் கலந்துகொண்ட பெண்கள். 4. ஐலண்டு கிரவுண்டில் கவர்னர் கொடியேற்றினார். 5. ஸெகரிடேரியேட்டில் கவர்னர் பிரமாணம் எடுத்துக்கொள்ளுகிறார்.





சுதந்திரதினத்தன்று பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் ரிப்பன் மாளிகைமீது கொடியேற்றிப் பேசினார்.

(கீழ்) கவர்னர் விருந்தளிப்பு மாளிகையில் நடந்த சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்ட ஸ்திரீகள் கச்சேரி கேட்டுக்கொண்டிருக்கையில் எடுத்த படம்.





600 008

# தாய்மார்களுக்கு

ஆர். லக்ஷ்மி அம்மாள்

## குழந்தையுலகின் கொலம்பஸ்

★

1939-ல் முதன் முதலில் நான் டாக்டர் மாரியாமாண்டிஸோரியைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேன். எனக்கு "மாண்டிஸோரிப் பாடசாலை" உபாத்தியாயராய் இருந்தவருடன், சமுத்திரக்கரை ஓரத்திலுள்ள பங்களாவுக்குப் போனேன். மாண்டிஸோரி மாடியில் திறந்த வெளியில் உட்கார்ந்து சமுத்திரத்தைப் பார்த்து அனுபவித்துக்கொண்டிருந்தாள். அந்த உபாத்தியாயர், "இந்தப் பெண் 'மாண்டிஸோரி முறை'யிலேயே சிறு வயதிலிருந்து பழகியவள். இப்போது மாண்டிஸோரி – ஆசிரியையாய் இருக்கிறாள்" என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது மாண்டிஸோரி முக மலர்ச்சியுடன் என் கையைப் பிடித்துக்கொண்டு, "குழந்தைகளுக்காகச் செய்யும் இந்தச் சேவை உனக்கு விருப்பம் தானா? அவர்களே நமக்குப் பலவிதங்களில் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள் அல்லவா?" என்று கேட்டாள். அதற்கு நான் "ஆமாம், நான் படிக்கும்போது எங்கள் உபாத்தியாயர்கள் சில சமயங்களில் ஒவ்வொருவரையும், 'பெரியவர்களாகும்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்பார்கள். ஒவ்வொருவரும் அவரவர்கள் எண்ணத்தைச் சொல்வார்கள். நான் 'குழந்தைகளின் ஆசிரியையாகத்தான் இருக்கப் போகிறேன். அதிலும் எனக்கு மிகவும் விருப்பமான தமிழ்ப் பாஷையை நன்றாய்க் கற்றுக் கொடுப்பேன்' என்றேனும். அந்த லட்சியம் என் மனதில் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அதனால் குழந்தைக்காகவே வாழ்க்கையை அர்ப்பணம் செய்த உங்களைப் பின்பற்ற முயல்கிறேன்" என்றேன்.

பிறகு மாண்டிஸோரி, குழந்தைகளின் மனப்பான்மையை அறிந்து அவர்களுக்குச் சரியான உதவி செய்யக்கூடியசக்தியுள்ளவர்வர்கள் சிலரே இருக்கின்றனர் என்றெல்லாம் பல விஷயங்களை எடுத்துச் சொன்னார்.

### மாண்டிஸோரியின் தாயன்பும் குழந்தையுள்ளமும்

மாண்டிஸோரி கன்னியாகவே இருந்து குழந்தையின் சேவையிலேயே ஈடுபட்டிருக்கிறார். தன் பந்து ஒருவரை ஸ்வீகாரம் செய்துகொண்டு அவருடன் வசித்து வருகிறார். இவ்வளவு வயதாய்க் கன்னியாகவே காலம் கழித்தபோதிலும் தாயன்பை அவரிடம் மிகுதியாகக் காணலாம். மாண்டிஸோரியுடன் நெருங்கிப்பழகிய நாங்கள் "அம்மா" என்றே தான் அழைப்போம்.

மாண்டிஸோரியிடம் இயற்கையை அனுபவிக்கும் குணம் உண்டு. தினம் அடையாறில் சாயங்காலம் சமுத்திரக் கரையில் உலாவப் போவார். சில நாட்களில் நானும் கூடவே போவேன். அப்போது மாண்டிஸோரி சிறு குழந்தைகளைப்போலவே குதூகலத்துடன் இயற்கையை அனுபவிப்பதைப் பார்க்கலாம். எவ்வளவு வயதானாலும் குழந்தையுள்ளம் படைத்தவர்.

மாண்டிஸோரி அடையாற்றில் கடற்கரை ஓரத்திலுள்ள அழகிய பங்களாவில் தன் ஸ்வீகார புத்திரன் மாரியோ மாண்டிஸோரியுடன் வசித்து வந்தார். "மாண்டிஸோரி வகுப்பும் அந்தப் பங்களாவிலேயே தான் நடைபெற்று வந்தது. எங்களில் சிலர் வகுப்பு வேலை முடிந்தாலும் ஏதாவது வேலை செய்து கொண்டோ, அல்லது மாண்டிஸோரியுடன் பேசிக் கொண்டோ அங்கே இருப்போம்.

### இயற்கைமீது பேரன்பு

ஒரு நாள் சாயங்காலம் காற்று, மழையுடன் புயல் அடிக்க ஆரம்பித்தது. சமுத்திரம் ஒரே கொந்தளிப்பாயிருந்தது. சில பெண்கள் பயந்து கொண்டு உள்ளே போய் விட்டார்கள். அப்போது மாண்டிஸோரி எங்களைப் பார்த்து, "இதோ இயற்கைத் தேவி ஆனந்தத் தாண்டவம் புரிகின்றாள். நான் அவளை இன்னும் பக்கத்தில் சென்று தரிசிக்கப் போகிறேன், யார் வேண்டுமானாலும் வரலாம்" என்று புறப்பட்டு விட்டார். அப்போது அந்த அம்மாவுக்குச் சுமார் 70 வயதிருக்கும்.

நாங்கள் முப்பத்தைந்து பேரும், "நாங்களும் வருகிறோம், உங்களுடன் வேடிக்கை

பார்க்க" என்று புறப்பட்டோம். மாண்டிஸோரியுடன் வெகு சந்தோஷத்துடன் பேசிக்கொண்டே, நாங்கள் கடற்கரையில் நடந்து போனோம். காற்றும் மழையும் கலந்து வேகமாய் அடித்துக் கொண்டிருந்தது. நடுவில் மின்னலும் இடியும் வேறு. சமுத்திரம் அலைகளை மோதிக் கொண்டு வெகு உக்கிரமாய் இருந்தது. இயற்கையன்னையின் இந்த வடிவத்தைத் தரிசித்துக்கொண்டே சுமார் அரைமணி நேரம் நின்று கொண்டிருந்தார். பிறகு எல்லோரும் வீடு வந்து சேர்ந்தோம்.

மாண்டிஸோரி ஒருபொழுதும் வீண்பொழுது போக்க மாட்டார். அப்படிக் காலத்தைக் கழிப்பவர்களையும் விரும்பமாட்டார்.

**சக்தி வாய்ந்த சம்பாஷணை**

நான் அடிக்கடி என் சிநேகிதியுடன் போய், மாண்டிஸோரியோடு குழந்தைகளைப் பள்ளிகளிலும் வீடுகளிலும் வளர்க்க வேண்டிய முறையைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்போம்.


சில சமயங்களில் மாண்டிஸோரி எங்களில் சிலருக்குக் குழந்தையின் முக்கிய ஸ்தானத்தைப்பற்றி மிக்க உணர்ச்சியுடன் பேசுவார். அப்போது அவர் விஷயங்களை ஆவேசத்துடன் எடுத்துச்சொல்லுவார். சில சமயங்களில் அந்தக் கம்பீரமான உணர்ச்சி ததும்பிய முகத்தையும், அந்தச் சக்திவாய்ந்த கண்களையும் என்னால் நேரே பார்க்க முடியாமல் போய்விடும். அப்போது நான் கீழே குனிந்து கொண்டே கேட்டுக்கொண்டிருப்பேன். அந்தக் குட்டிப் பிரசங்கம் முடிந்ததும் மிக்க அன்புடன், "நீ ஏன் சில சமயம் குனிந்து கொள்கிறாய்? என்னைப் பார்த்தால் உனக்குப் பயமாய் இருக்கிறதா?" என்று கேட்பார். நானும் என சிநேகிதியும், "என்னவோ தெரியாது. ஆனால் உங்களிடம் பயமே இல்லை. நீங்கள் எங்களுடைய 'அம்மா' தானே!" என்று சிரிப்போம்.

ஒருநாள் நாங்கள், "அம்மா! இந்த யுத்தத்தில் தினசரி கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறார்களே, ஒரு நாளைப் பணத்தைக் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டோம். அதற்கு மாண்டிஸோரி பயந்ததுபோல் நடித்து, "ஐயையோ! எனக்கு அவ்வளவு பணம் வேண்டவே வேண்டாம். எனக்கு என்னத்திற்கு? நான் அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? உண்மையாக குழந்தையின் சேவைக்குத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யக்கூடிய சக்தியுள்ள சிலரே எனக்கு வேண்டும். அதுவே எனக்குப் போதுமான செல்வம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.


குழந்தைகளிடம் அவருக்கு அளவற்ற அன்பு உண்டு. அவர்களுடன் விளையாடும் போது தாமும் ஒரு குழந்தையாகவே இருப்பார். 'பயிற்சி முறை' நடைபெறும்போது பிரசங்கத்தில் குழந்தையின் சக்தியை அழகாய் விவரிப்பார். பெரியாழ்வார் மானசீகமாய்க் குழந்தை கிருஷ்ணனைக் கண்டு அனுபவித்தது போல், மாண்டிஸோரியும் 'அதிசயக் குழந்தை'யைக் கண்டு அனுபவித்து எங்களுக்கும் எடுத்துச் சொல்வார்.

மூன்று வயதிற்குள்ளான ஒவ்வொரு அதிசயக் குழந்தையும் சில வருஷங்களில் எத்தனையோ மாறுதல்களை அடைந்துவிடுகிறது. சுருண்டு தொங்கும் கேசத்தையுடைய முகத்தையும், முத்துப்போன்ற பற்களையும், குறு குறுப்பான கண்களையும், தளர் நடையையும் உள்ள குதூகலமான குழந்தையை மாண்டிஸோரி வர்ணிக்கும் போது, அந்த அதிசயக் குழந்தையான கிருஷ்ணனையே எங்கள் கண்முன் கொண்டு வந்து விடுவது போலிருக்கும். அந்த அழகுக் குழந்தையின் (உள்ளடங்கிக் கிடக்கும்) சக்தியை ஒவ்வொருவரும் முக்கியமாகத் தாய்மார் - அறிந்து சேவை செய்ய வேண்டும் என்பது மாண்டிஸோரியின் விருப்பம்.

'குழந்தை யுலகின் கொலம்பஸ்' என்று சொல்லத்தக்க இவர், தாய்மார்களுக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டி.




பிரசங்கி :—"தோழர்களே! தமிழானது பழமையான, அழகான மொழி! தமிழர்களாகிய நாம் அதை பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுவோமானல் அது சீக்கிரத்தில் செழிப்படையும்…."




(சென்ற வாரத் தொடர்ச்சி)

சோமு-அவன்தான் மருதனின் தங்கை மகன். அவனுக்கு மிகவும் - ஏன் - மருதனைக் காட்டிலுமே அஞ்சலையைப்பற்றிய வருத்தம் அதிகமாக விருந்தது. அவன் முதிர்ந்த காளை நல்ல அழகன். கறுப்பான அவன் உடலிலே ஒருவித வயிர ஒளி வீசும். அதற்கேற்றாப்போல் நல்ல குணமும் உண்டு. அஞ்சலை ஒருத்திக்குத்தான் இதெல்லாம் நன்றாகத் தெரியும். அவளுக்கு அவன்மீது எப்போதும் ஒரு கண்! இன்று மெய்மறந்து படுத்துக்கிடக்கும் போதுகூட சோமு வந்த செய்தி எப்படியோ அவள் காதுக்கு எட்டியிருந்தது.

கையைப் பிடித்துத்தூக்கி உட்காரவைத்த முத்தாயியைக் கண்டால் அவளுக்கு அருவருப்பு. ஆனால் தன் அத்தை வீராயி-சோமுவின் தாய்-தன்னிடம் பேச வரும்போது ஓர் ஆசையுணர்ச்சி அவளிடம் புகுந்தது.

ஏதோ நல்ல காலத்தால் கொஞ்சம் கொஞ்சமாகச் ஜுரமும் குறைந்தது. கண் திறந்து எல்லோரையும் பார்த்தாள். மருதனின் மனம் நிரம்பியது.

அன்று அஞ்சலை பூராக்குணமும் அடைந்திருந்தாள். சாயந்திர வேளை தோட்டத்தில் வைக்கோற் போர் அருகில் படர்ந்திருந்த முல்லைக்கொடியின் அருகில் அவள் உட்கார்ந்திருந்தாள். வய்க்காலிலிருந்து சோமு தற்செயலாக அந்தப்பக்கம் வந்தான். கொடியோடு கொடியாக உட்கார்ந்திருந்த அவளைக் கண்டதும் ஓர் புத்துணர்ச்சி சோமுவைத் தாக்கியது. அவளிடம் பேசவேண்டுமென்று எத்தனை நாட்களாய் அவன் தவம் கிடக்கிறான்! இன்று அத்தவத்திற்கு வரங்கிடைக்கப்போகிறது! அதனால் ஏற்படப்போகும் ஆனந்தத்திற்கு அவனால் எல்லை கண்டு பிடிக்க முடியப்போகிறதா?

"அஞ்சலை…" வெகு அருகிலிருந்து கூப்பிட்ட அக்குரல் யாருடையது என்று திரும்பினாள் அஞ்சலை. "அஞ்சலை! இந்த மட்டும் நீ பிழைச்சயே! அதுவே எனக்குப் போதும். அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. கண்ணிலிருந்து ஒரு நீர் முத்து.

"சோமு! எல்லாம் உனக்காகத்தான்…" என்று சொல்லிவிட்டு, எப்படி இந்த வார்த்தையை இவ்வளவு தைரியமாகச் சொன்னேம்' என்று வெட்கத்துடன் பின் வாங்கினாள் அஞ்சலை.

"எனக்காகவா? உன் மாமன் மகனுக்காகவல்லவா?" என்றான் சோமு.

அஞ்சலைக்குக் கோபம் வந்துவிட்டது. "ஆமாம்; அந்த அறிவு கெட்டவனுக்காகத்தான் பிழைச்சேன்; உனக்காகச் செத்துப் போகிறேன்."

அர்த்தமில்லாமல் பேசுகிறாள் அவள் என்று எண்ணி, கிட்டே வந்து தலையை நிமிர்த்தினான் சோமு. அவன் கை நிறைய நீர் மிகுந்தது. மறு கணத்தில் தன்னுடைய மேலாடையால் கண்ணைத் துடைத்துவிட்டு பார்த்தபோது அவனால் அக்கண் சிவப்பைக் கொஞ்சமேனும் சகிக்க முடியவில்லை.

"அநாவசியமாக உன்னைக் கலக்கப்படுத்திவிட்டேன். எதற்கும் விதி கெட்டியாக இருந்தால் நீதான் என்னை விட்டுவிடுவையா? அல்லது நான்தான் ஓடிப் போய் விடுவேனா?"

"விதியா? அது நம்ம மதியிலே தானிருக்குது" என்றாள் அஞ்சலை.

இவ்வளவு சாமர்த்தியமாகப் பேசும் அஞ்சலையை நான் அடைந்தால் என் வாழ்வு…! இப்படியே நினைத்துக்கொண்டு ஒரு கணம் மெய்ம்மறந்து நின்றான். திடீரென்று அவன் கரங்கள் அவளது உடலை அணைத்துக்கொண்டன.

அதே சமயத்தில் அநியாயம், அக்கிரமம் என்ற கோர சப்தத்துடன் ஒரு காளை ஓடி வந்ததை இருவரும் கண்டு நடுவகிப் போனார்கள்.

அஞ்சலை, இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? இதோ பார். இப்பவே உன் அப்பனிடம் சொல்லி என்ன பண்ணுகிறேன் பார் என்று இரைந்தான். அவன்தான் மருதனின் மைத்துனன் மகன்.

சோமுவுக்குப் பொறுக்கவில்லை. நீ அங்கே செல்லப் போகிற வரையிலும் விடப் போகிறவன் நானில்லை என்று சொல்லிக் கொண்டு அருகே சென்று குத்தத் தொடங்கினான். இருவருக்கும் கைகலந்த சண்டை உண்டாகிவிட்டது. நடுவிலே அம்பு தைத்த மானைப்போல மருண்டு வீழ்ந்தாள் அஞ்சலை.

சப்தம் கேட்டு மருதன் ஓடோடியும் வந்தான். அஞ்சலை அப்பால் சென்று மறைந்துகொண்டாள். இருவரையும் பிரித்துவிடுவதற்குள் மருதனுக்குப் பெருமூச்சு வாங்கியது. அவனுக்கு இதெல்லாம் ஆச்சரியமாகவேயிருந்தது. இதுவரையிலும் இந்த மாதிரிச் செய்கையெல்லாம் அவன் கண்முன் நேர்ந்ததேயில்லையே!

சமாசாரத்தைத் தெரிந்து கொண்டான். உடனே சோமுவை அவன் தாயுடன் ஊருக்கு அனுப்பி னுன். அவனுக்கு அஞ்சலையிடம் கோபமில்லை, அனுதாபமே உண்டாயிற்று. ஆனாலும், அவன் செய்த தப்புக் காரியங்களையெல் லாம் அவளிடம் கேட்டுவிடுவது என்று எண்ணிக்கொண்டு உள்ளே சென்றான். மேஜை படுத்துக் கொண்டு விசித்து விசித்து அழுத வண்ணமாக இருந்த அவளைப் பார்த்ததும் அவன் ஊமையாகி விட்டான். கொஞ்சநேரங்கழித்து, 'குழந்தை' என்று கூப்பிட்டான்.

"குழந்தை! ஏன் இப்படி அழு கிறாய்? போ சமத்தாயிரு. இன் னிக்கே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன். மச்சானுக்கும் தெரிவித்து விடுகிறேன்." என்று மெல்லக் கூறினான். அஞ்சலைக்குத் தாங்கவில்லை அவ்வார்த்தை!

'அப்பா.'

"என்ன, குழந்தே,"

அப்பா! எனக்குத் துளிக்கூட இஷ்டமில்லை கல்யாணம் பண்ணிக் கறதுக்கு!

சேச்சே! அப்படிச் சொல்லலாமோ? காலாகாலத்திலே உன் கழுத்திலே ஒரு தாலியேறி என் கண்ணுலே பார்த்தால்தானே என் மனசு நிம்மதியடையும்?

அது நல்லதுதான். ஆனால்...

ஆனால் என்ன? சொல்லுயம்மா, சங்கோசமில்லாமல். அப்ப னிடத்தே எந்தப் பெண்ணாவது இப்படிச் சங்கோசப்படலாமா?

அப்பா எனக்கு அவனைக் கட் டிக்க இஷ்டமில்லை!

என்ன?

ஆமாம் அப்பா!

மருதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் பெண் தன் எண் ணத்தை இப்படி இவ்வளவு எளி தில் மறுத்து விடுவாள் என்று அவன் நினைக்கவில்லை. மைத்துன னிடத்திலும் வாக்குக் கொடுத்து விட்டான். கிராமத்து ஜனங்களுக் கும் சமாசாரம் பரவியிருந்தது. இதற்குப் பிறகு எப்படி அவனால் அதை மாற்ற முடியும்?

குழந்தே அப்படிச் சொல்றது நியாயமில்லை.

என்னப்பா, இஷ்டமில்லாட்டிக்கு ஒருத்தரை எப்படித்தான் கட்டிக் கிட்டு வாழமுடியுமாம்?

இப்போ இப்படித்தான் இருக் கும். பின்னாலே எல்லாம் சரியாகப் போயிடும். அவன் என்ன அழ கிலே குறைஞ்சவனா? சாமர்த்தி யத்திலே பட்டமானவனா? சோமு வைக்காட்டிலும் எந்த விதத்தி லும் குறைஞ்சவனில்லேயே! சமர்த் தாக நான் சொல்றதைக் கேட்டு நட." என்று கொஞ்சம் அதட்டல் குரலில் மருதன் கூறினான். அதற்கு அவள் பதில் சொல்ல வில்லை ஆனால் அவளுடைய அந்த மௌனம் சம்மதத்தைத் தெரி விக்கவில்லையென்பதை கண் ணீர்த்துளி அறிவித்தது.

மருதனுக்கு அங்கு நிற்கக் கொள்ளவில்லை. வெளியே வந்த மச்சானுடன் முகூர்த்த விஷயத் தைப் பேசலானான். 'இரு, வரிசை களில் ஒரு குறையும் இராது' என்று உறுதி கூறினான். ஏன்— அவனுடையது எல்லாம் அவளுக் குத்தானே? அவளை அடையப் போகிறவன் அவை யெல்லாவற் றிற்கும் எஜமானன் தானே!

பந்தற்கால் நட்டாய்விட்டது. நிச்சயம் பண்ணிக்கொண்டு பாக்கு வெற்றிலை மாற்றிக்கொள்ள அவ் விரு குடும்பத்தினரும் கூடினார்கள். கூட்டத்தில் உட்கார்ந்திருந்த முரு கன் மருதனைப் பார்த்து, 'உன் மக ளைக் கூப்பிடு' என்று ஏவினான். அவன் மகன் அசடு வழியும் பார்வையுடன் பல்லிலே ஜலம் சொட்ட உட்கார்ந்திருந்தான். மருதன் உள்ளேபோய், 'அஞ்சலை உன் புருஷன் வந்திருக்கான் உன் னைப்பார்க்க; இப்படி நீ மூடி முனகிண்டு உட்கார்ந்திருக்கிறயே' என்று இரைந்தான்.

'அப்பா...!' அதற்குமேல் குரல் எழவில்லை.

'இப்படிப் பிடிவாதம் பண்றது உனக்கு அழகுதானா, அஞ்சலை?'

'அப்பா! பிடிவாதம் பண்ணலை நான். கல்யாணம் கட்டினா சோமுவைப் பண்ணிக்கறது. இல்லாவிட்டால் சும்மா கன்னி யாகவே இருந்துவிடறேன். இதை நீங்கள் பார்க்காதீங்க. ஐயனாரப் பன்மேல் ஆணை, மாத்தாதீங்க!'

மருதனை மிகவும் கலக்கிய இவ் வார்த்தைகள் அவன் தலையைக் கனக்கச்செய்தன. 'அஞ்சலை, அஞ் சலை' என்று இருமுறை கூவினான். அப்படியே கீழே விழுந்து





மூர்ச்சையானான். அவனுடைய கண்களில் குளிர்ந்த நீரைத் தெளித்துக் கொஞ்சநேரத்தில் பிரக்ஞையை வரவழைத்தாள் அஞ்சலை.

'குழந்தே! சோமுவுக்கே உன் னைக் கொடுக்கறதில் தடையில்லை ஆனால் அவன் அடுத்த ஊர்க்கார னாச்சே! நம்ம ஊரு பிள்ளைக்குத் தானே கொடுக்கணும்? தலைமுறை தலைமுறையாக இருந்துக்கிட்டு வற பழக்கத்தை எப்படியாம் மாற்றுகிறது?'

"நான் அதை மாத்தச் சொல்ல லையே! எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்றால் அதனால் என்ன கஷ்டம்?" அஞ்சலை அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை. மருதன் மெதுவாக எழுந்திருந்தான். "குழந் தைக்கு உடம்பு சரியாயில்லை" என்று சொல்லிச் சும்மா குந்தி யிருந்தான். அப்போது அவன் மனத்திலே ஒரு புரட்சி சூழ்ந்து கொண்டிருந்தது. வந்த விருந்தி னர் வருந்திய வண்ணம் சென்ற னர்.


"கிராமப் பழக்கத்தை மாற்று வதா? ஆனால் அதற்காக அஞ் சலையை அவள் இஷ்டமில்லாமலே ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுத் துப் பலியிடுவதா?"

"எனக்குப் பெரிசு என்பது கிராமமா? அல்லது என் பெண்ணா?"

"'கிராமம், கிராமம்' அந்தப் பழக்கத்தை மாற்றக்கூடாது. நான் செத்தாலும் என் கிராமத்து வழக்கம் மாறக்கூடாது, ஆனால்..."

'ஐயோ! அஞ்சலைக்கு வேறு யார்? அவள் இஷ்டப்படி கல்யா ணம் பண்ணிவிட்டால் அவள் சிரித் துப் பேசுகிற அழகைப் பார்க்க லாமே, ஓடி வளைய வளைய வருகிற அழகு எப்படியிருக்கும்? புருசன் பின்னே அவள் உட்காருகிற அழ கும் அதை நான் காணும் பாக்கிய மும் எனக்குக் கிடைத்து விட் டால்......' இந்த எண்ணத்துடன் உள்ளே சென்று, 'அஞ்சலை,' என்று கூப்பிட்டான். அவள் முகங் கொடுத்து 'ஏன்' என்று கேட்க வில்லை. அதில் ஆச்சரியமில்லை! "உன் அப்பாவிடத்தில்தானே உன் கோபம்" மருதனின் குரல் கீழ் ஸ்தாயியில் இறங்கியது.

"அப்பா! அப்பா! உன் இஷ்டப் படி செய்யப்பா, நான் என்னை மாத்திணுடறேன்......"



இதைக்கேட்டதும் மருதனுக் குத் தூக்கிப் போட்டது. அஞ்சலை யின் பாசத்தையும், தகப்பனுக் காகத் தன் எண்ணத்தை-வாழ்க் கையை-மாற்றிக் கொள்ளும் பொறுமையையும் நினைக்க லானான். "ஆஹா! அஞ்சலைக்கும் ஈடுண்டா! அஞ்சலை அஞ்சலை உன் எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டாம். நான் உன் இஷ் டப்படியே முடித்து விடுகிறேன். கிராமப் பழக்கம் இருக்கட்டும். உன்னைக் கெடுத்துட்டு கிராமமா! ஆனால் ஒன்று. நான் கிராமத்தை விட்டுக் கிளம்பமாட்டேன். சோமுவையும் இங்கேயே அழைச்சுக்கலாம்" என்று உணர்ச்சிமிகுந்தவனாய்க் கூறி னான். அஞ்சலை தன் முகபாவத் தின் மூலம் தன் மகிழ்ச்சியையும், பூரணமான நன்றியறிதலையும் காட்டிக்கொண்டாள்.

மறுகணத்தில் துள்ளி எழுந்து ஓடி மறைந்துகொண்டாள் தன் ஆசையின் வெற்றியைக் கண்டு விட்ட அக்கட்டழகி.

மருதனும் ஆள் போக்கித் தன் தங்கை மகனை வரவழைத்தான். தங்கையும் அவள் புருஷனும் அள விறந்த மகிழ்ச்சியுடன் காட்டு மாங்குடிக்கு வந்து சேர்ந்தார்கள். கல்யாணவரிசைகளுடன் சோமு வையும், அஞ்சலையையும் கூட்டிக் கொண்டு முதலில் ஐயனாரப்பனை வணங்கிவரச்சென்றான் மருதன்.

காட்டுத்தீயெனப் பரவியது இச் செய்தி காட்டுமாங்குடி முழுதும். கிராமத்தாரின் கோபத் தீக்கு நெய்யையூற்றினான் முருகன். நன் ருகப் பற்றியெரியும் சினத் தீ பொறிபறந்திட எல்லா மக்களும் ஒருங்கு திரண்டனர் கோவில் வாசலில்.

"ஏய், மருதா!' கூப்பிட்டது, கிராமத்து மேலதிகாரி கிருஷ் ணப்ப நாயக்கர். "என்னடாநீ, நீகூட வழக்கத்துக்கு மாருகச் செய்ய ஆரம்பிச்சுட்டே?'

"அப்படி ஒண்ணுமில்லிங்களே, எசமான்!"

"மருதா! நம்ம ஊரு பிள்ளைக் குத்தானே பெண்ணைக் கட்டிக் கொடுக்கறது பழக்கம்?"

"ஆமாங்க, அது உண்மைதான். நம்ம சொந்தக்காரப்பிள்ளைக்குக் கொடுக்கறதும் வழக்கம் பழக்கம் தானுங்களே!"

"அதுக்காக, அடுத்த ஊருக்காரனுக்கா கொடுக்கறது?"

"கட்டிக் கொடுத்துட்டு நம்ம ஊருக்கே அழைச்சுக்கிடறேனுங்க!"

இந்த வார்த்தையைக் கேட்டதும் ஒரு விநாடி நேரம் மயங்கி நின்ருர் நாயக்கர். "ஆமாம், அதுவும் சரிதான்!" என்ற வார்த்தை அவரிடமிருந்து வெளி வந்தது.

அதே சமயத்தில் முருகனின் ஆர்ப்பாட்டம் மூளத்தொடங்கியது. "நாயக்கனும் சேர்ந்துட்டாண்டா, தலையாரியோடே!" என்ருள். அதைப் பலர் ஆமோதித்தனர்.

மருதப்பக் கவுண்டன் முன்னே வந்து, "மருதா! நீ இந்தக் கிராமத்திலே தலைகாட்டக் கூடாது. உன் மகளை எந்த மரத்துக்காவது கட்டிக்கொடு. அதைப்பற்றி நாங்கள் கேட்கவில்லை என்று கூவினன். ஆமாம், அதுதான் சரியான தண்டனை! என்று அங்குக் கூடிய மக்கள் எல்லோரும் கூறினர்கள்.

மருதனுக்கு உலகமே கவிழ்ந்ததுபோலிருந்தது. பிரளய காலத்தில் தத்தளிக்கும் ஒரு சிறு பூச்சியே போலத் தவித்தான் அந்த நிரபராதி மருதன்!

நான் போக முடியாது ஒருநாளும் என்று அவன் கூறியதை எதிர்த்து எல்லோரும் விரட்டலானர்கள்.

பிடிடா, உதைடா என்று குரல்கள் கொந்தளித்தன.

நான் செத்தாலும் சாவேனே தவிர, இந்த ஊரை விட்டு நகரமாட்டேன் என்ருன் மருதன்.

நீ, யாருடா பேசறது? நாங்கள் சொன்னல் நாயாட்டமா போக வேண்டியதுதான் என்று கூவிய ஜனங்கள் அவன் கண்முன்னே பலகோடி காலர்களாகக் காட்சியளித்தனர்!

ஏ, கடவுளே! இது உனக்கு அடுக்குமா? நான் கிராமத்துக்குள்ளே நுழையமாட்டேன் என்று எப்படிக் கூறுவேன்? இங்கேயே குடிசை கட்டிக்கொண்டு வாழ்கிறேன். இத்தனை நாட்கள் பாடுபட்டதற்குப் பலன் கிடைத்துவிட்டது! என்று கதறினன் மருதன். ஜனங்கள் எல்லோரும் அவனை விட்டகன்றனர், தேனைக் குடித்துப் பின்பு பூவை விட்டு நீங்குகிற வண்டுகளே போல!

திருமணம் இறைவன் சந்நிதியிலேயே நடைபெற்றது. எல்லோரும் பெரிய இடி இடித்துப் பூமியில் விழுமென்றும், பூகம்பம் உண்டாகிப் பெருஞ்சேதம் விளையுமென்றும் சாமிகோயிலே தவிடுபொடியாய் அழிந்துவிடும் என்றும் கருதினர்கள். அப்படியொன்றும் நடக்கவில்லை. அவர்களுடைய எண்ணங்களே அழிந்தொழிந்தன. அஞ்சலை சோமுவின் மனைவியாகிவிட்டாள்!

மருதனுக்குத்தான் உடம்பு குணமாயில்லை. மன வியாதிக்கு ஏது மருந்து! அவன் அங்கே ஒரு குடிசையில் தங்கலானன். குழந்தை அஞ்சலையைப் புருஷனுடன் அனுப்பிவிட்டுத் தங்கையை ஒத்தாசைக்கு வைத்துக்கொண்டான். மேலைக் கோடியில் அவன் வளர்த்த தென்னந்தோப்புகளும், ஈசானியத்திக்கில் அவன் கண்காணித்து வந்த தொண்டைமான் வயல்களும், அவன் எண்ணத்தை விட்டு அகலவில்லை. சரியான ஆகாரமும் இல்லை. ஒரு முறை எப்படியாவது அக்கிராமத்துக்குப் போய்விட்டு வருவது என்ற முடிவான அபிப்ராயமே உடலிலும் உள்ளத்திலும் வியாபித்து அரித்துவண்மையாகவிருந்தது.

நாட்கள் ஓடின. கார்த்திகை மாதம் அஞ்சலை கருக்கொண்டிருக்கிருள் என்பதைக் கேள்விப்பட்டான் கிழவன் மருதன். அவன் அப்போது அடைந்த சந்தோஷத்திற்குப் பெரிய தடையுண்டாயிற்று உடனே!

காட்டுமாங்குடியில் பிள்ளை குட்டிகள் எல்லாம் அடிக்கடி சாகிருர்கள். வயல்கள் எல்லாம் வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. பயிர்கள் கருகிப் போயிருக்கின்றன. இச்செய்தியே அவனைக் கலக்கிய இடியேறு!

அவனல் அதைக் கேட்டதும் சும்மா இருக்க முடியவில்லை. அதே சிந்தனையில் படுத்துக்கொண்டான், தூக்கமோ வரவில்லை. ஆனல் ஒரு வித மயக்கம் உண்டாயிற்று. அம்மயக்கத்தில் ஒரு கனவு! அதாவது நினைவின் நிழல்! வயல்களெல்லாம் ஒன்று சேர்ந்து மருதா! எவ்வளவு காலம், எவ்வளவு ராத்திரி எங்களைக் காத்து வந்தே! அப்போதெல்லாம் நாங்கள் வறண்டதுண்டா? எங்களைவிட்டுப் பிரிஞ்சு போயிட்டியே! இது நியாயமா? வளர்த்த குழந்தைகளை விட்டுவிட்டுச் சொந்தக் குழந்தையோடே போனது போதாதா? இனிமேலாவது இங்கு வரமாட்டியா? என்று கேட்கின்றன. அன்று அவன் வளர்த்த செடிகொடிகள், நீ விட்ட தண்ணீரால் வளர்ந்தோம். நீ போனய், நாங்களும் சாய்ந்து போனேம் என்று புலம்புகின்றன. கிராமத்து ஆடு கோழிகள் எல்லாம், நீ இருந்தாய், எங்களிலே அதிகமாகப் பலி கொடுக்கப்படவில்லை. இப்போ மழை, மழை என்று சொல்லிக்கொண்டு, கிராமத்து தேவதை பேரை வைச்சுண்டு எங்களையெல்லாம் தொலைக்கிருங்க பழிகாரன்கள். நீ இப்பவாவது வந்து எங்களைக்காக்கக்கூடாதா?

அதற்குமேல் அவனல் அங்கு தங்க முடியவில்லை. நல்ல நிசி வேளை. உலகமே அந்தகாரம் தானே, என்று சொல்லும்படி இருள் சூழ்ந்திருந்தது. கையிலே வாளுடன் கிளம்பிவிட்டான் மருதன். தைரியமாகக் கிராமத்துக்குள் நுழைந்தான். இழந்த இன்ப சாம்ராஜ்யத்தை திரும்பவும் அடைபவன்போல அதி விரைவில் சென்ருன்.

சில்லென்ற காற்று அவன் உடலில் வீசி ஆனந்தத்தைத் தந்தது. செடிகொடிகள் சாய்ந்து கிடந்தவை குனிந்தபடியே மேல் நோக்கிப் பார்த்தன அவனை. பட்ட மரங்கள் அவன் கால்களில் மெல்லிய கிளைகளை உதிர்ப்பது மலர் தூவி அர்ச்சனைபுரிந்து, ஆவலை அறிவிப்பதுபோல் இருந்தது. வந்துவிட்டான் கிராமத்துக்குள்ளேயே, அதன் சொந்தக்காரன்!

வெகு தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. யார் என்று ஒரு நிமிஷம் யோசித்தான். அவன் அப்போதெல்லாம் நின்றுகொண்டிருந்த இடத்தில் இன்னெருவன் நிற்கிருன் தலையாரியாக. அவனுக்கு அவன்மீது பொருமை உண்டாகவில்லை. வருத்தத்துடன் அருகில் சென்று, 'யாரு காத்தானு? சௌக்கியமா?" என்று கேட்டான். காத்தான் திடுக்கிட்டுப்போய் "மருதனு! வாடா, பழிகாரப்பயலே! இப்பத்தானே தெரிஞ்சுது. மழை பெய்யாததுக்குக் காரணம், அக்கிரமத்தைப் பண்ணிவிட்டு இங்கேயே நீ திரும்பி வந்து காலை வைச்சதனலேதான் மானம் பொய்ச்சுப் போயிடுத்து!" என்று கூவிக்கொண்டு அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான்...



மறுநாள் காலை ஐயனரப்பன் கோவில் வாசலில் மருதனைப் பலி கொடுத்துவிடுவது என்ற எண்ணத்துடன் பலர் கூடினர்கள். சில பெரிய மனிதர்களும் அதற்கு உடந்தையாகிவிட்டார்கள். 'நாட்டின் க்ஷேமத்துக்காக, நாட்டின் நாசகாரனைக் கொல்வதுதான் நியாயம் என்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிவிட்டது. நிரபராதி மருதனுக்கு மரண தண்டனை! ஐயனரப்பன் அவனை ஒரேயடியாகத் தன்னுடன் அழைத்துக்கொள்ளப் போகிருர் கொஞ்ச நேரத்தில் இல்லை அடுத்த விநாடியில்!

அப்போது ஓடி வந்த அஞ்சலை ஐயோ' என்ற அலறலுடன் தந்தையின் அருகில் நெருங்கினள். வாளை ஓங்கினன் பூசாரி, மருதனின் தலை உருண்டது, அஞ்சலையின் பொட்டிலே வாளின் நுனி பட்டதால் சிறிது இரத்தம்.

ஒரு கணம் அமைதி! பிறகு பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டவர்போல் பலர் திரும்பினர்கள், அஞ்சலைக்குக் கோபம் தாங்கவில்லை.

"ஏ, குடிசனங்களே! இது அடுக்காது. உங்கள் கிராமம் இனிமேல் காடா[illegible] போகும்: வெறும் மேடாகப் போகும்..." அவளை அதற்குமேல் பேசவொட்டாமல் துயரம் தாங்கியது.

சில நாட்கள் சென்றன. அஞ்சலை குழந்தையைப் பெற்ருள். ஆண் குழந்தைதான்! ஏன்-மருதனைத்தான் பிள்ளையாக இப்பொழுது அவள் பெற்றிருக்க வேண்டும். அச்சமயம் காட்டுமாங்குடி அழிந்து போய்க்கொண்டிருக்கிற செய்தியும் தன் வாக்குப் பலித்துவிட்டதையும் கேட்டுப் பூரித்தாள் அஞ்சலை.

* * *

இதே கதையைத் தன் பிள்ளைக்கு வயதானதும் அவனிடம் கூறினள் அஞ்சலை. "அம்மா! இதெல்லாம் ஆச்சரியமாக விருந்தாலும், கலியில் சகஜம்தான்! ஆனலும் நாம் இப்பொழுதாவது அந்தக் கிராமத்துக்குப் போய் அதைத் திருத்தலாமே! என்ருன். அஞ்சலைக்குச் சந்தேகம் நீங்கியது. பிறந்திருக்கிறவன் மருதன்தான் என்பதில் இனி ஏது தடை?



நேசதேசங்களின் சபைக்கூட்டத்துக்குச் சென்ற ஸ்ரீ பி. ஆர். ஸென் (வலதிலிருந்து இரண்டாவது) ஸ்ரீ எஸ். எஸ். ஸென். (வலது) சபைக்கூட்டத்துக்கு முன் கூடிப் பேசினர்.

# இஞ்சினீயர் ராமு



~வெண்தாமரை~

"ஏ ராமு! கோலி விளையாட வறயாடா?"

"நான் வரல்லேடா விளையாட. இந்த டயரிலே என்ன ஜோரா காத்து ஏறுது பார்டா."

"ராமு வரவேண்டாம். நாம் விளையாடலாம், வாங்கடா. இஞ்சினீர் ராமு கோலி ஆட வருவாரோ?"

டயரில் காற்று ஏறும் அழகைப்பார்த்து வியந்துகொண்டே நின்ருன் ராமு. அவனுடைய தோழர்கள் கோலியாடப் போனுர்கள்.


* * * *

ராமசாமி ஒரு அநாதைப் பையன். வயது பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். அவனுக்கு ஐந்து வயது ஆவதற்குள்ளேயே அவனுடைய தாயும் தகப்பனும் காலமானுர்கள். அவர்கள் இறந்தபின் அவன் ஊரிலுள்ள பிச்சைக்காரப் பையன்களுடன் சேர்ந்துகொண்டு பிச்சையெடுத்துப் பிழைத்து வந்தான். பிச்சை எடுக்கும் நேரங்களைத் தவிர மற்ற எந்த சமயங்களிலும் அவனை அந்த மோட்டார் தொழிற்சாலையின் வாசலில் பார்க்கலாம். இயந்திரங்களையும் தொழிலாளிகள் செய்யும் விதவிதமான வேலைகளையும் கண்கொட்டாமல் பார்ப்பதிலேயே காலத்தைக் கழிப்பான். அந்தத் தொழிற்சாலை அவனை அவ்வளவு ஆகர்ஷித்தது. அவன் உறங்குவதும் அந்தத் தொழிற்சாலையின் வாசலிலேதான்.

ராமு இப்படித் தொழிற்சாலையே கதி என்றிருந்ததால், அவனுடைய சகாக்கள் அவனுக்கு 'இஞ்ஜினீர் ராமு' என்று கேலிப்பட்டம் சூட்டியிருந்தார்கள். ஆனால், ராமுவோ நமக்கு இந்தப்பட்டம் கிடைத்ததே என்று பெருமை கொள்வானே தவிர, தோழர்கள் கேலி செய்கிருர்கள் என்று எண்ணவேமாட்டான்.

"நான் ஒரு காலத்தில் இஞ்சினீயராகக் கூடாது?" என்றுமனதிற்குள்ளே சொல்லிக் கொள்வான்.

* * * *



டயரில் காற்றடைப்பதை ஆவலோடு பார்த்துக் கொண்டு நின்ற ராமுவை அருகிலிருந்த கனவான் முதலிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு சமூகத் தொண்டர். பட்டணத்தில் அநாதைச் சிறுவர், சிறுமிகளுக்காக ஒருஅநாதை நிலையமும், ஒரு பாடசாலையும் ஏற்படுத்தியிருந்தார். அவருடைய காரைப்பழுதுபார்ப்பதற்காக அந்தத் தொழிற்சாலைக்குக் கொண்டு வந்திருந்தார். அந்தக் காரின் டயருக்குத்தான் காற்றடைத்துக் கொண்டிருந்தார்கள்.

ராமுவின் ஆவல் நிறைந்த பார்வையைக் கண்டதுமே அவனுக்கு இயந்திரங்களைப் பற்றி அறிய அவா இருக்கிறதென்று கனவான் அறிந்து கொண்டார். அவனை நன்ருகப் படிக்க வைத்தால் ஒரு நல்ல விஞ்ஞானி ஆவான் என்று அவருக்குத் தோன்றியது. ஆகவே, அவனைத் தன் காரிலே ஏற்றிக்கொண்டு தன்னுடைய அநாதை நிலையத்துக்கு அழைத்துச்சென்ருர்.

* * * *



தாயும் தகப்பனும் இல்லாத ராமுவுக்கு அன்று முதல் அவரே தாயும் தகப்பனுமானுர். ராமு பாடசாலையிலே கல்வி கற்கத் தொடங்கினுன். தனது நல்லொழுக்கத்தினுலும் புத்தி கூர்மையினுலும் எல்லாரிடமும் நல்ல பெயர் வாங்கினுன். ஊக்கத்துடன் படித்து வந்தமையால் எல்லா வகுப்புக்களிலும் அவனுக்கே முதல் ஸ்தானம் கிடைத்து வந்தது.

இவ்விதம் ராமு படிப்படியாக உயர்ந்து வருவதைக் கண்டு கனவான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். அவனுடைய பள்ளிப் படிப்பு முடிந்ததும் அவனை மேல் படிப்புக்காக கலாசாலைக்கு அனுப்பினுர். அங்கே அவன விஞ்ஞானத்தை இஷ்ட பாடமாக எடுத்துக்கொண்டு அதை நன்கு கற்ருன். நான்கு வருஷங்களில் அவன் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு சென்னை இஞ்சினீயரிங் காலேஜில் சேர்ந்தான்.

இஞ்சினீயரிங் படிப்பு முடிந்ததும், ராமு சர்க்காரின் உதவிச் சம்பளத்துடன் மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்ருன். அதன் பிறகு வருஷங்கள் ஐந்து கழிந்தன. ராமு ஒரு பெரிய ரயில்வே இஞ்சினீயராக தாய்நாட்டுக்குத் திரும்பிவந்தான்.

* * * *

அதே வருஷத்தில் ராமுவின் கிராமத்தில் ரயில்பாதை போடப்பட்டது. அந்தவேலை "இஞ்ஜினீர் ராமு"வின் மேல் பார்வையில்தான் நடந்தது. பழைய மோட்டார் தொழிற்சாலைக்கு எதிரேதான் ரயில்வே ஸ்டேஷனும் கட்டப்பட்டது.

ஒரு நாள் இன்ஜினீயர் ராமு தன் ஆபீஸ் அறையிலிருந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். எதிரே மோட்டார் தொழிற்சாலை தெரிந்தது. அவன் சிறுவனுயிருந்த போது நடந்த சம்பவம் இப்போது நினைவுக்கு வந்தது. அதை நினைத்துப் பார்த்த போது அவன் கண்களில் ஜலம் வந்து நிறைந்தது. அந்த தொழிற்சாலை இப்பொழுதும் அப்படியே இருக்கிறது. அவனை இவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்த அதே சீமான்தான் இன்னும் அவனுக்குத் தாயும் தந்தையுமாக இருக்கிருர். ஆனுல், அந்தப் பழைய தோழர்கள் மட்டும் எங்கே? அதுதான் அவனுக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்.

* * *

பால்கன்-ஜீ-பாரீ-அகில இந்திய பாலர் சங்கம்-சிறுவர் சிறுமிகளின் சங்கம். பதினெட்டு வயதிற்குட்பட்ட யாவரும் இந்த சங்கத்தில் சேரலாம். ஏற்கனவே 25,000-க்கு மேற்பட்டவர்கள் இதில் சேர்ந்துள்ளனர். நீங்கள் இதுவரை சேரவில்லையானுல், இப்பொழுதே சேருங்கள். விவரங்களுக்கும், பிரவேசக் கூப்பன்களுக்கும் முக்காலணு ஸ்டாம்பு வைத்து கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:

சகோதரன் ஹரி.
"குலிஸ்தான்"
கார்,
பம்பாய் 21.

—:—

## பசுவைப் பற்றிய பழமொழிகள்

★

1. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
2. அசைந்து தின்கிற மாடு. அசையாமல் தின்கிறது வீடு.
3. அடியாத மாடு படியாது.
4. ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும், பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும்.
5. உழுகிற மாடானுல் உளளூரில் விலை போகாதா?
6. காராம் பசுவுக்குப் புல்லுமாம், நந்தவனத்துக்குக் கவளையு [மாம்.
7. சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பாராதே.
8. தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்துப் பசுவைக் கொளளு,
9. துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா?
10. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பெண்ணுக்கு ஒரு சொல்.
11. பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்தது போல.
12. போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப்போட்டுக் கட்டுமோ?
13. மாடு கிழமானுலும் பாலின் சுவை போகுமா?
14. மாடு கெட்டால் தேடலாம், மனிதர்கெட்டால் தேடலாமா?
15. மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது.
16. மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவோர்களா?




வரகூர் வேங்கடதாஸன்

## இதற்கு முன்

“உக்ரோதயம்” என்பது, ஓர் அதிசய நாகரத்ன மாலையின் பெயர். அம்மாலையை அணிந்தவள் ‘பூஸுந்தரி’ என்பவள். கங்கநாட்டரசன் சிவமாறன் என்பவனின் புதல்வி பூஸுந்தரி. அவளையும் அம்மாலையையும் அடையவேண்டும் என்று உறுதிகொண்டான் பாண்டியன் ராஜஸிம்மன். பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க மறுத்தான் சிவமாறன். அது காரணமாகப் போர் மூண்டது.

போரில் ராஜஸிம்மனிடம் தோல்வியடைந்தான் சிவமாறன். உடனே தன் புதல்வி, புதல்வர்களுடன் பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சியை அடைந்தான். பல்லவன் உதவிபுரிவதாக வாக்குறுதி அளிக்கின்றான். திடீரென்று பல்லவன் மரணமடைகிறான். அவனுக்குப் பின் அரசாளச் சந்ததி இல்லை.

ராஜவம்சத்து நந்திவர்மனும், பல்லவனின் கணிகை மகனான சித்திரமாயனும் அரசாட்சிக்குப் போராடுகிறார்கள். நகரமக்கள் சபை கூடுகிறது. அதில் நந்திவர்மன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதனால் சித்திரமாயன் பகை கொண்டு நாட்டை விட்டோடி பாண்டியனை அடைகிறான்.

இந்நிலையில் சிவமாறன் பூஸுந்தரியை நந்திவர்மனுக்கு மணம் புரிவிக்க முற்படுகிறான். அவள் மறுத்து பாண்டியனை விரும்புகிறாள்; அவள் சகோதரர்களான வல்லபன், குணபரன் இருவரும் பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க விரும்பி பாண்டியனுடன் போகிறார்கள்.

பூஸுந்தரியை அடைய விரும்பிய நந்திவர்மனும் அவளால் அவமானம் அடைகின்றான்.

எனவே, பாண்டியன் படைகளுடன் காஞ்சியை முற்றுகையிடுகிறான். போருக்குப் புறப்பட்டுக் கடும் போர் செய்கிறான் நந்திவர்மன். பல்லவ-பாண்டியப் போரில் பாண்டியனுக்கு உதவிபுரிய வந்த சளுக்கிய விக்கிரமாதித்தனை அநிருத்தர் சூழ்ச்சியால் சமாதானப்படுத்தி, அவனை நாடு திரும்பச் செய்கிறார். போர் நடக்கின்றது. நந்திவர்மன் தனிப்படையுடன் சென்று தாணுரவியின் உபாயத்தினால் பாண்டியனைமட்டும் சிறைப்படுத்தி விடுகின்றான். அவனை மீட்க வந்த சேனாதிபதி மாறன்எயினனும் சிறைப்படுகின்றான்.



66

## ‘விடுதலை’

“வைர மேகரே, இந்தக் காதல் மணவிழா திர்பாராதது. இதன் அருமையை மதிப்பிட முடியாது: ரேவாவும், நந்திவர்மனும் உண்மைக்காதலர்கள் என்பதை இப்போது நான் நன்கு தெரிந்து கொண்டேன்; படைகள் புறப்பாட்டுடன் ரேவாவும், பல்லவரும் தேரில் நகருக்குள் ‘பவனி’யாகச் செல்லட்டும்: நாமும் புறப்படுவோம்!...நகரெல்லையில் போர் நடப்பதால் நாம் விரைவில் புறப்பட வேண்டும்!...”என்றார் அநிருத்தர்.

“கவிஞர் யோசனைப்படியே செய்வோம்!” என்று கூறிப் புறப்பட்டான் வைரமேகன்.

யாவரும் கூடாரத்தை விட்டு வெளிவந்தார்கள். ‘ரேவாவுக்கும் பல்லவனுக்கும், காதல் மணம் நிகழ்ந்த செய்தி கேட்டு ராஷ்டிர கூடப் படைகள் கடல் புடைபெயர்ந்தாற்போல் ஆரவாரித்துக் கொந்தளித்தன. இடி முழக்கம் போல வாத்தியங்கள் முழங்க எழுந்தன.

ரேவாவும், நந்திவர்மனும், ராஷ்டிர கூடத்துப் பொற்றேரில் ஏறி அமர்ந்தார்கள். அடுத்தாற்போல் தனித்தனியே வைர மேகனும் அநிருத்தர், ஹிரண்ய வர்மர் சிவமாறப் பிரபு முதலிய பலரும் தேர்களில் அமர்ந்தார்கள். சுற்றுமுற்றும் ராஷ்டிர கூடப் பெரும்படைகள் சூழ, வேந்தரும் பிரதானியரும் சூழ ரேவா தேவியுடன் நந்திவர்மன் தேரில் அமர்ந்து ஸந்தோஷபரிபூதனாக அரண்மனை நோக்கிச்சென்றான்.

* * * *

இன்பக்கிரணங்களை அள்ளிப் பொழிந்தது தண்மதி. இன்பவீறுகொண்டு, தோளோடு தோள் மயங்க, நினைவு மறந்து தேரில் சென்றார்கள் ரேவாதேவியும் நந்திவர்மனும். அவ்விருவர் உள்ளங்களும் ஒன்று கலந்து இன்பவாரிதியில் மயங்கின. இன்பக்காதலர்கள் பொம்மல் கொண்டு செல்வதைக்கண்டு படைகள் கொண்ட ஆரவாரத்தை என்னென்பது?

நந்திவர்மனின் தேர் அரண்மனையை அடைந்தது. தாணுரவி வியப்பால் மெய்ம்மறந்தவனாக, அரண்மனைப் பரிவாரங்கள் சூழ நின்று நந்திவர்மனையும், ரேவாவையும், வைரமேகன் முதலியவர்களையும் வரவேற்றான். தேரிலிருந்து இறங்கி நந்திவர்மனும் ரேவாவும் வைரமேகன் முதலிய யாவரும் சூழ அரண்மனைக்குள் புகுந்தான். ராஷ்டிரகூடப் படைகள் அரண்மனையிலும், வெளியிலும், வீதிகளிலும் குதூகலத்துடன் நின்றன.

நந்திவர்மன் ரேவாவுடன் அரண்மனை புகுந்ததுகேட்டு எங்கும் குதூகலமும் கோஷணையும் உண்டாயின. ராஜ்யப் பிரதானியர்களும், பிரபுக்களும், தூதுவர்களும் கூட்டம் கூட்டமாக அரண்மனைக்குள் புகுந்தார்கள்.

* * * *

‘பரமேச்வர பவனம்’ என்ற ராஜகிருகத்தில் சித்திர மண்டபத்திலே பல்லவமன்னன் ரேவா தேவியுடன் சிங்காதனத்தில் அமர்ந்தான். அவனுக்கு இரு புறங்களிலும் அமைந்த ரத்ன மஞ்சங்களிலே வைரமேகன்; அநிருத்தர், சிவமாறர், ஹிரண்யவர்மர், தாணுரவி, பிரதானிகள், பிரபுக்கள் யாவரும் அமர்ந்தார்கள: ராஜகிருகத்துப் பெண்டிர்களும், மற்றவர்களும் ராஜகிருகத்து முறைப்படி அஷ்டமங்களம் ஏந்தி, வாத்ய முழக்கத்துடன், மன்னவனுக்கும் பட்டத்தரசி ரேவாதேவிக்கும் மலர்மாரி பொழிந்தார்கள். வைரமேகனும், அநிருத்தர் முதலியவர்களும் பொன்னும் பூவும் பொழிந்தார்கள்.

குதூகலம் மிகுந்த அந்தத் தருணத்திலே சோழசேனாபதிகளில் ஒருத்தனான ‘ருத்ரபதி’ மிகுந்த பதற்றத்துடன் அம்மண்டபத்தில் புகுந்து சபைக்கு முன் தலை வணங்கிப் பரபரப்புடன் நின்றான்.

ஒன்றும் புலப்படாதவர்களாய்த் திடுக்கிட்டு யாவரும் அவனை நோக்கியபோது நந்திவர்மன் வியப்புடன் கேட்டான்:

“ருத்ரபதி ...போர்க்களத்தின் செய்தி என்ன? ஸர்வாதிகாரி விடுத்த செய்தி உண்டா?...என்றான் நந்திவர்மன்.

வேந்தே!...நம் நகருக்குள்—சில இடங்களைப் பாண்டியப் படைகள் கைப்பற்றிவிட்டன! போர் மிகவும் கடுமை! எதிர்க்க முடியாத நிலையில் நம் படைகள் பின்னடைகின்றன. பாண்டியப்படைகளுடன் சோழநாட்டுப் படைகளும் வந்து சேர்ந்து தாக்குகின்றன. இனி நிலை...கவலையை அளிப்பதாகவே இருக்கும்!—தங்களையும் மற்றவர்களையும்’ என்று கூறியவன் மேலும் கூறமுடியாதவனாய்த் தடுமாற்றத்துடன் நின்றான். அப்போது நந்திவர்மன் ரேவாவின் கைகளை, பற்றியவண்ணம் தடுமாற்றத்துடன் எழுந்தான். யாவரும் பரபரப்புடன் எழுந்து நின்றார்கள்.

“இனி தாமதம் ஏன் — வைரமேகப்பிரபுவுடன் நாம் புறப்பட வேண்டியதுதான். ராஷ்டிர கூடப்படைகளே இப்போது நம்மைக் காக்கமுடியும்—என்னையும், என் உள்ளத்தையும் காத்துக் கொள்ளைகொண்ட ராஜகுமாரி ரேவாதேவியை எனக்கு அளித்த வைரமேகப் பிரபுவுக்கு இனி செய்யப்போகின்ற உதவிக்காக —வெறி பிடித்த கங்க கன்னிகையை அளிப்பதே நேர்மை!... அவளுக்குத் தகுந்த தண்டனை அதுவே!...என்றான் நந்திவர்மன் கம்பீரமாக.

அப்போது, தளிர் மென்சாயல் பாவையான ரேவாதேவி திடுக்கிட்டாள், பதறினாள். அவள் தளிர் மேனி நடுங்கியது. விழிகள் இரு புறமும் ஓடிப்பாய்ந்தன.

“என்ன? என்ன பல்லவ மகிபர், என்ன சொல்கிறீர்? கங்க கன்னிகையை என் தந்தைக்கும் கொடுப்பதா? இது உண்மையா —இது நடக்கக்கூடுமா? இதுநியாயமா?...’, என்று குழல்மொழியால் இரக்கத்துடனும் பதற்றத்துடனும் கேட்டாள்.

வைரமேகன் மௌனமானான்: “ரேவா!...நீ ஏன் கவலைப்படுகிறாய்?...பாண்டியனையும், கங்க கன்னிகையையும் தனித்தனியே சிறைவைத்திருக்கிறேன்...இனி...பாண்டியப் படைகளை மட்டும் அழித்து கங்ககன்னிகையின் ஸகோதரர்களான கங்கராஜகுமாரர்களையும், என் ஜன்ம விரோதியான சித்திரமாயனையும் சிறைப்பிடிக்கவேண்டும்; இக்காரியங்களை நிறைவேற்றுவதாக உன் தந்தை ஒப்புக்கொண்

டார். இவற்றிற்குப் பரிசாகக் கங்ககன்னிகையை அளிப்பதாகவும், கங்கவேந்தரும் ஒப்புக்கொண்டார். இதில் தவறு என்ன? இதோ—இம்மாளிகையின் அந்தப்புரத்தில் கங்ககன்னிகை அடைபட்டிருக்கிறாள்; அங்கே அரண்மனைச்சிறைக்கோட்டத்தில் பாண்டியன் வலியொடுங்கிக் கிடக்கின்றான்! ஏன் இந்தக்காரியம் நடக்கக்கூடாததாகும்?"

"பாண்டியனை விரும்பித் தவம் கிடக்கும் நங்கை இதற்கு மனம் ஒப்புவாளா?" என்றாள் ரேவா.

"ரேவா! ... நீயே காண்பாய் அந்தக் காட்சியை!...இன்று வெண்ணிலவில் நாம் இருவரும் சந்தித்து ஒன்றுபட்டோம்!...இதே போல் நாளை இரவு—வெண்ணிலவில் கங்க கன்னிகையை—ராஷ்டிரகூட வேந்தர் சந்திப்பார்—"என்றான் நந்திவர்மன்.

"ஹூம்..." என்றாள் வெம்மை கனிந்த பெருமூச்சுடன். அப்போது அந்தச் சபையிடத்தே ஒவ்வொருவர் உள்ளத்திலும் மகத்தான போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

"நாங்கள் இப்போதே போர்க்களம் போகின்றோம்; இன்று நடந்துகொண்டிருக்கும் போர்—பொழுது புலருமுன் முற்றுப்பெற்று விடும்!...அதுகாறும் என் பிரிவைப் பொறுத்துக்கொள்!... மகாகவியான அநிருத்தர் உன் அறிவுக்கு விருந்தாகப் பேசிக்கொண்டிருப்பார்!...நான் போய் வருகிறேன்!' என்று கூறி ரேவாவை மலர நோக்கினான்.

"கவிஞரா!...நல்லது; வெற்றிக்குப் பிரார்த்தனை செய்கிறேன்" என்றாள் நயமொழிகளால் ரேவா தேவி.

"ரேவா!...போய் வருகிறேன்! ......" என்று வைரமேகனும் புறப்பட்டான்.

நந்திவர்மனுடன், வைரமேகன், சிவமாறன், ஹிரண்யவர்மர், தாணுரவி, ருத்ரபதி, மற்றும் பலரும் சூழ்ந்து சென்றார்கள்.

ராஷ்டிரகூட வேந்தனின் கட்டளைப்படி ராஷ்டிரகூடப் படைகள், பாண்டியப்படைகளை எதிர்க்கப் புறப்பட்டன. ராஷ்டிரகூட வைரமேகனுடன், நந்திவர்மனும் மற்றவர்களும் தேர்களில் அமர்ந்து போர்க்களத்திற்குக் கடுகினார்கள்.

கார்மேக அலைகள் சூழ்ந்த நீல வானப்பெருங்கடலில், இருகோட்டு வெண்மதியம் சிறு தோணி ஒன்று மிதப்பதெனக் காட்சி அளித்தது. அந்தச் சிறு தோணி வெண் மதியம் அகல் வானம் முற்றும் ஆட்சி செலுத்தியது. மேகக் கூட்டங்கள் ஒவ்வொரு கணமும் பின் அடைந்தவாறே தேய்ந்து அழிந்தேவிட்டன! அதன்பின் பிறைமதியின் ஆட்சிப் பெருமையை என்னென்பது?

பிறைமதியின் பேரொளி காஞ்சியை வெள்ளி நகராக்கியது அந்த வெள்ளிமா நகரின் வீதிகளில் மகத்தான போர்ப்படைகள் அணி வகுத்துச் சென்றன. ராஷ்டிரகூட மகா சைன்யமே அவ்வளவு ஆர்ப்பரிப்புடன் கடுகிக்கொண்டிருந்தது. நால்வகைப் படைகளும் திரண்டு செல்ல, அவற்றின் நடுவே ராஷ்டிரகூட சக்கரவர்த்தி, பல்லவ சக்கரவர்த்தி ஹிரண்யவர்மர், சிவமாறப் பிரபு முதலியோர் தனித் தனியே தேர்களில் அமர்ந்து சென்றார்கள்.

பாண்டியப் படைகளுடன் பெரும் போர் நடத்தும் நோக்கத்துடன் அவர்கள் கடுகிச் சென்றார்கள்.

அவர்கள் போகும்போதே, போர்க்களத்திலிருந்து எழும் வீர கோஷணைகளும் பறை முழக்கமும் இடைவிடாமல் அவர்கள் செவிகளில் கேட்டன. பல்லவர்களும், பாண்டியர்களும் கடும்போர் புரியும் நிலையை ஊகித்தவாறே போர் வெற்றியுடன் ராஷ்டிரகூடப் படைகள் போர்க்களத்தைச் சேர்ந்தன.

கடலுடன் கடல் கலந்தாற்போல ராஷ்டிரகூடப் படைகளும் போர் முகத்தில் கலந்து 'பகோததி' பொங்கினாற்போலப் பொங்கி எழுந்து பொருதன. ராஷ்டிரகூடர்களும், பல்லவர்களும் ஒன்றுபட்டுப் பொருத போரில் பாண்டியரும் சேரரும் குருதி கக்கிப் பொருதார்கள்.

* * * *

அதே தருணத்தில் காஞ்சியின் ராஜ கிருகத்து நிகழ்ச்சிகள் திடுக்கிடத்தக்கனவாகவும், துரிதமாகவும் நிகழ்ந்தன.

பாற்கடலாகித் தோன்றிய வானிலிருந்து அமுத வெண்ணிலவுத் துளிகள் எங்கும் துளித்தன.

ராஜ கிருகத்தில் பரமேச்வர பவன மாளிகையில் மேல் உபரிகையில் கவிஞர் அநிருத்தரும் பல்லவ பட்டத்தரசியான ரேவாதேவியும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இந்த நிலாப் பரந்த உலகத்தில்—அமுதமயமான தீவுக்கு நீ அதிபதி!...உன் கையில்தான் உலக ஜீவன்களின் இன்பம் நிறைந்துள்ளது. நீ புன்முறுவல் செய்தால் போதும்! கோடிக் கணக்கான அங்காந்த உள்ளங்கள் அகமகிழும்!... உன்னை எதிர்ப்பதற்கும் உன் செயலைத் தடுப்பதற்கும் துணிவு யாருக்குமில்லை..." என்று கவிஞர் ரேவாதேவியைப் பார்த்துக் கூறினார்.

ரேவா சிரித்தாள்—அதனால் காஞ்சியாகிய மங்கை களிப்புற்றாள்!—

"கவிஞரே, என் ஆட்சியைப் பல்லவ சக்கரவர்த்தி ஏற்றுக்கொண்டாரல்லவா?— இதனால் யாருக்கும் துக்கம் இருப்பதற்கு நியாயம் இல்லையல்லவா?—" என்று கனிரசக் குரலால் வினவினாள் ரேவா.

"மாதர் மணியே! உன் மணித்துவர் வாய் மொழி உண்மையானதே!—ஆனால் உன் முன் யோசனையைச் செய்து விட்டால் உலகம் உன் இன்ப ஆட்சியை வாழ்த்தும் என்பதில் சந்தேகம் இல்லை. இனி தாமதம் வேண்டாம்:...' என்றார் கவிஞர் சாதுர்யம் நிறைந்த சொற்களால்.

முல்லையை நகைக்கும் நகைப்பால் கவிஞருக்கு விடை கூறினாள்:

ராஜ்யதந்திர நிபுணரே, நான் செய்யப்போகும் காரியம் நீர் எதிர்பார்த்ததா?-சொல்லும்பார்ப்போம்

மாதரசி!...இல்லை!... கவிஞனாகிய என்னுடைய கற்பனைக்கும் எட்டாதது நடந்துவிட்டது; நீ கூறிய யோசனையும் என் கற்பனையில் முதலில் மிளிரவில்லை. இப்போதோ,...என் கற்பனை உன் ஆட்சி வீட்சண்யத்தால் மலர்ந்துவிட்டது. உண்மை உணர்வு உண்டாகிவிட்டது. என் கவிகளின்—கற்பனையின் உண்மை நீயேதான் என்றார் கவிஞர்.

கவிஞரே,...பல்லவ சக்கரவர்த்தியின் பெரும் போராட்டத்துக்கு முடிவு செய்துவிட்டேன். ஆனால் அந்தக் கங்கராஜனின் கொடுஞ்சித்தத்தைச் சின்னபின்னப்படுத்து



விடுவதே...என் குறிக்கோள்!... புறப்படுங்கள்...போவோம்! என்று கூறிவிட்டு ரேவாதேவி உபரிகையிலிருந்து வேகமாகக் கீழிறங்கினாள். அநிருத்தரும் மனப்பதற்றத்துடன் பின் தொடர்ந்தார்.

அப்போது, நிலவாடையுடுத்த இராமங்கை கன்னிப் பருவமாகிய முன் யாமங்கடந்து தருண மங்கைப் பருவமாகிய நடுயாமத்தை அடைந்துகொண்டிருந்தாள்.

* * * *

பட்டத்தரசி ரேவாதேவி, கவிஞர் அநிருத்தருடன் அந்தப்புரம் நோக்கி நடந்தாள்; அந்தப்புர மாடத்தின் வழியிடையே சேடியரும் பேடியரும் அடி வணங்கி நின்றார்கள்; அநிருத்தர் பின்தொடர்ந்து வர, ரேவாதேவி முன் சென்றாள். அந்தப்புரத்துக்குள் புகுந்து கங்க கன்னிகையின் வாசஸ்தலத்தை அடைந்தார்கள் இருவரும்.

—பாதச் சிலம்புகள் சிலம்பின. மேகலாபரணம் இடைவிடாமல் ஒலித்தன. வளையல்கள் பொருமின. முத்துமாலைகளும் மணித்தாமங்களும் இசை பாடின—

இவ்விதமான ஆரவாரத்துடன் பட்டத்தரசி ரேவாதேவி கங்க கன்னிகையின் அறைக்குப் பவனி வந்தாள் கவிஞருடன்.

ஆரவாரத்தால் அலைப்புண்ட உள்ளத்துடன் பேடி சித்ரமுகி ஓடோடியும் வந்தாள். பட்டத்தரசியின் பாதங்களில் தலைவைத்துப் பணிந்தாள். கவிஞரையும் கைகூப்பித் தொழுதாள். உடனே அநிருத்தர் கூறினார்:

"இவள்தான் சக்கரவர்த்தியின் அபிமானம் பெற்ற பேடி சித்ரமுகி. கங்க கன்னிகையைக் காத்து வருபவள்."

"நல்லது. பேடி. நான் வந்திருப்பதாகக் கங்க ராஜ குமாரிக்கு சொல்!" என்றாள் ரேவாதேவி.

ஓடினாள் உள்ளேபேடி அடுத்த சில கணங்களில் கங்காதேவியுடன் பேடியும் வந்தாள்.

"தேவி!...வருக!...கவிஞரே... வருக..." என்றாள் கங்கா.

கங்காதேவியைப் பின் தொடர்ந்து கவிஞரும் ரேவாவும் சென்றனர். சித்ரமுகியும் சென்றாள்.

உள்ளே மஞ்சத்தில் ஒடியெறி பூங்கொடிபோல் கிடந்தாள் பூஸுந்தரி. அவளைக் கண்டாள் ரேவா. அவளைக் கண்டாள் கங்க கன்னிகை.

சோகமே உருவெடுத்து ஒளி குன்றிக்கிடப்பதெனப்படுக்கையில் கிடந்த கங்ககன்னிகையைக் கண்டு உள்ளம் உடைந்தது ரேவாவுக்கு. தளிர்த்த அழகு தேயப் பார்ப்பதெனக் கண்டாள். எழுந்திருக்கவும் செயலற்றுக்கிடந்தாள். அவள் விழிகள் ரேவாவை மணி விளக்கினூடே விளக்கமாகக் கண்டன. அன்று நகரமக்கள் சபையில் கண்ட ரேவாவே அவள் என்பது உணர்ந்தாள்.

"பாக்கியவதி!..." என்றாள் உணர்ச்சியுடன் அவள் கிடந்தபடியே. அந்தச் சொல் செவி விழுமுன்பாக ரேவா கண்ணீர் துளித்தாள்: மனம் பொருமினாள். அவளை அணுகினாள், தொட்டாள் அவள் வகிர் நுதலை. வெறியோடிய அவள் கண்கள் ரேவாவை மருண்டு பார்த்தன. ரேவாவின் விழிகளில் நீர் பொசிவதைக் கண்ட, கங்ககன்னிகை மேலும் செயலற்றாள்; நினைவற்றாள்: செருக்குற்ற அவள் விழிகளிலும் ஆற்றுமடை திறந்ததென நீர் சுரந்தது.

ராஜகுமாரி!......உனக்கு விடுதலை; உன் தலைவருக்கும் விடுதலை. உங்கள் ஒன்றுபட்ட வாழ்வுக்கு என் வாழ்த்து!...எழுந்திரு! என்றாள் ரேவா; அவள் தளிர்க்கரங்கள் பூஸுந்தரியின் இரு கொடித் தோளகளையும் இறுகப்பிடித்து எழுப்பின.

ஒருகணம் ஹா! என்ற பெருமூச்சினூடே எழும் பெரும் பொருமல் அனைவரிடமும் எதிரொலித்தது.


ரேவா!...... தலைவருக்கும் விடுதலையா?...நிச்சயம் விடுதலையா?...ஹா!...உண்மையா? என்று பதற்றத்துடன் கேட்டவாறே எழுந்திருந்தாள். ரேவாவின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டாள். அவளைத் தழுவிக் கொண்டாள்.

ரேவாவும் பூஸுந்தரியும் ஓருயிரும் ஈருடலுமாக நின்றார்கள். கண்ணீரால் ஒருவரையொருவர் நனைத்துக்கொண்டார்கள். இவ்விருவருடைய உள்ளமும் ஒரே தன்மைத்தாக இருந்தன.

சித்ரமுகி,...பல்லக்கு சித்தமாகட்டும் என்றார் அநிருத்தர். குதூகலத்தால் ஒன்றும் உணராதவளாய் ஓடினாள் சித்ரமுகி.

ரேவா, நீ பட்டத்தரசியாக வந்துவிட்டாய் என்று கேள்வப்பட்டு மகிழ்ந்தேன். என் மகளுக்கு உயிர் கொடுத்தாய் இப்போது. இது உண்மையென்றால் நானும். என் புதல்வியும் பெரும் பாக்கியம் செய்தவர்களாவோம்...... என்றாள் கங்காதேவி.

உடனேரேவா பூஸுந்தரியை அணைத்துக்




மனைவி:—ஸரோஜாவுக்கு ரோட்டிலே இந்த பலூனை கையிலே எடுத்துண்டு வர வெக்கமாயிருக்காம்...நீங்க கையிலே எடுத்துண்டுவாங்கோ!

கொண்டு மஞ்சத்தில் அமர்ந்தாள். கங்காதேவியும், கவிஞரும் அமர்ந்து கொண்டார்கள்.

தேவி, ராஜகுமாரி!...நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். நான் பட்டத்தரசியாக பல்லவ சக்கரவர்த்தியால் ஏற்றுக்கொள்ளப் பெற்றேன். அந்த அதிகார உரிமையைக் கொண்டு உங்களை விடுதலை செய்து, இன்றிரவே நகருக்கு வெளியே அனுப்பிவிடுவதென்று முடிவு செய்துவிட்டேன். பொழுது புலர்ந்தால் நிலைமை என்னவாகுமோ?...அதனால் இப்போதே செய்யத் துணிந்துவிட்டேன், பாண்டியப் படைகளை முறியடிப்பதற்கு என் தந்தையாரும், பல்லவ வேந்தரும் போர்க்களம் போயிருக்கிறார்கள்; அவர்கள் திரும்புவதற்குள் இம்முடிவைச் செய்ய... என்று ரேவா கம்பீரமாக மொழிந்தாள்.

இடையே பூஸுந்தரி கேட்டாள் வியப்பால்.

ராஜகுமாரி, என் மீதும் என் தலைவர் மீதும் தங்களுக்கு இவ்வளவு கருணை ஏற்பட்டதன் காரணம்?


அவள் முகம் வியர்த்தது. ரேவாவின் முகம் வாடியது. கங்காதேவியையும் அநிருத்தரையும், மாறி மாறி நோக்கினாள்:

பூஸுந்தரி, உன்னை நான் முன்பு நகர மக்கள் சபையில் கண்டபோதே உன்னிடம் எல்லையற்ற நட்பைப் பெற்றேன். அதனால் உன்னை இழப்பதற்கு விரும்பவில்லை. நான் உனக்கு வரும் துயரைத் துடைப்பதே என் கடமை என்று கருதினேன். உன்வாழ்க்கை இன்பமடைய வேண்டும் என்பதே என் லட்சியம்-அதனாலேயே என் உள்ளமும் அமைதியை அடைய முடியும். நீ சுக வாழ்வைப் பெற்ற பின்பே என் வாழ்வும் சுகம் பெறும். இதற்கு மாறாக ஒன்று நடந்தது. என் தந்தையார் உன்னை என் தந்தையாருக்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தார் இன்று. பாண்டியனைச் சிறைப்படுத்தி கங்கபாடியில் வைத்து. பாண்டியப் படைகளை அழித்துவிட்டால் என் தந்தையின் கையில் உன்னை அளித்துவிடுவதாக உறுதி கூறினார் உன் தந்தை...இதை நான்... பொறுத்துக்கொள்பவள் அல்ல!... இதை உலகமே பொறுத்துக் கொள்ளாது. பாண்டியனின் பலம் தணிப்பதற்கு உன்னைத் தியாகம் செய்யச் சித்தமாக உள்ள உன் தந்தையை ஏமாற்றிவிடுவதென்று உறுதிகொண்டேன்... இதுதான் உண்மை!..."என்றாள் ரேவா. அவள் வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள் கங்காதேவியும், பூஸுந்தரியும்.

"ராஜகுமாரி!...எங்கள் விடுதலை பல்லவ மன்னருக்குத் தெரியாமலேயே......நடப்பதா?" என்று கேட்டாள் கங்க கன்னிகை.

"ஆம்!...உண்மை அதுதான்; எனக்கு உதவி செய்ய இதோ கவிஞர் இருக்கிறார்......" என்றாள் ரேவா.

"பூஸுந்தரி, இன்னும் சந்தேகமா உனக்கு?...உன் தந்தை மதிகெட்டவன்; இந்தத் தருணத்தில் நீ உன் காதலனுடன் விடுதலை



காரைக்குடியில் டாக்டர் அழகப்ப செட்டியார் காலேஜை சென்ற வாரம் சென்னை சர்க்கார் கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் திறந்து வைத்தார்.



பெற்று, தப்புவதே மேல்..."என்றார் கவிஞர்.

ரேவா!...ரேவா!...செயற்கரிய தவி!...உலகம் மதிக்கும் தவி!...என் தந்தையின் கொடுமைக்கு நான் லட்சியம் ஆகிவிடாமல் பாதுகாத்த பெருமை உனக்கே!...உன்னை எழுபிறப்பும் மறவேன்:...என் உயிர்...நீ..." என்று ரேவா தேவியைத் தழுவிக் கொண்டாள்.

"ரேவா...உன் துணிவைக்கண்டு நான் வியப்படைகிறேன். என் கணவர் சித்தம் கலங்கியவர்!... இந்த மீளாத் துயரிலிருந்து விடுதலை செய்யும் நீ நீடூழி வாழ்க..." என்று கங்காதேவி வாழ்த்தினாள்.

"தேவி! சிவிகைகள் சித்தமாகிவிட்டன!......" என்று சித்ரமுகி முன்வந்து கூறினாள்.

"புறப்படுங்கள், போவோம்..." என்று அநிருத்தர் கூறினார்.

உடனே ரேவாவுடன் பூஸுந்தரியும், கங்கா தேவியும் புறப்பட்டார்கள். பல்லவரின் அந்தப்புரமாகிய சிறைக் கோட்டத்திலிருந்து பூஸுந்தரி விடுதலை பெற்றாள். சித்ரமுகியும் பின் தொடர்ந்தாள்.

அந்தப்புர வெளிமாடத்தையும் விரைந்து கடந்தார்கள். மாளிகையின் வாயிலில் இரண்டு சிவிகைகள் ஆயத்தமாக இருந்தன. ஒன்றில் பூஸுந்தரி ரேவா, கங்கா தேவி மூவரும் அமர்ந்து கொண்டார்கள். மற்றொன்றில் அநிருத்தரும் சித்ரமுகியும் அமர்ந்து கொண்டார்கள் அநிருத்தரின் கட்டளைப்படி, சிவிகைகள் இரண்டும் அரண்மனைச் சிறைக் கோட்டம் நோக்கிப் புறப்பட்டன.

அந்தப்புரத்திலுள்ள சேடியரும் பேடியரும் பூஸுந்தரியின் விடுதலையைக் கண்டு வியப்பால் தமக்குள் பலவாறு பேசிக்கொண்டு நின்றார்கள்.

* * * *

ராஜகுமாரி ரேவா பட்டத்தரசி. பல்லவ மல்லனின் அமைச்சர் அநிருத்தர்—இவ்விருவரும் துணிந்து செய்யும் காரியத்திற்குத் தடை சொல்பவர் யார் இருக்கிறார்கள்?

'நள்'ளென்ற நடு யாமத்தே அரண்மனைச் சிறைக்கோட்டத்திற்குச் சென்றன சிவிகைகள். சிறைக் கோட்டத்தை அடைந்து நின்றன சிவிகைகள்.

சிறைக் காவலர்கள் சிவிகைகளுக்கு முன் வந்து நின்றார்கள். சிவிகையிலிருந்து யாவரும் வெளி வந்தார்கள்.

"காவலர்களே.......வேந்தரின் பட்டத்தரசி கட்டளையிடுவதைத் தாமதம் இல்லாமல் செய்யுங்கள்;..." என்றார் அநிருத்தர்.

பல்லவ மகிபனின் மந்திரியும் கவியுமான அநிருத்தரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் காவலர்கள் திடுக்கிட்டார்கள். பொன்னும் மணியும் ஒளிவிடும் தலையணியுடன் நடுவே நின்ற ரேவா தேவியைக் கண்டு கொண்டார்கள் காவலர்கள். தலைபணிந்து நின்றார்கள்.

"கவிஞரே,......இனி பாண்டிய வேந்தரின் சிறைக்கோட்டத்திற்குப் போகவேண்டியதல்லவா?..." என்றாள் ரேவா புன்னகையுடன்.

"ஆம்!" என்று தலையசைத்து விட்டு அநிருத்தர் கட்டளையிட்டார். சிறையில் கிடக்கும் பாண்டியனுக்கு விடுதலை கிடைத்துவிட்டது. விரைவில் முன்னதாகச் சென்று செய்தியை அவனுக்குத் தெரிவித்துவிடுங்கள். பட்டத்தரசியின் வரவையும் உணர்த்துங்கள்..." என்றார் அநிருத்தர் காவலர்களைப் பார்த்து.

திடுக்கிட்டார்கள் காவலர்கள். ஒருகணம் தயக்கத்துடன் பார்த்துவிட்டுக் கூறினார்கள்:

"ஆக்ஞை!......பாண்டிய வேந்தருக்கு இப்போதே......விடுதலை என்பது...கட்டளையா?..."

"ஆம்!......இன்னும் தாமதமா?..." என்றார் அநிருத்தர் சீற்றம் தோன்ற.

ஓடினார்கள் காவலர்கள்.

அநிருத்தரும் கடந்தார். பின் தொடர்ந்து ரேவாதேவியும், பூஸுந்தரியும், கங்காதேவி, சித்ரமுகியும் சென்றார்கள்.

* * * *

சிறைக்கோட்டத்தில் பாண்டியன் ராஜஸிம்மன், மாறன் எயினனுடன் குதூகலத்தோடு எழுந்து நின்று, 'விடுதலை' கூறி நிற்கும் காவலாளிகளிடம் வியப்புடன் பேசிக்கொண்டிருந்தான்.

"எனக்கா விடுதலை?......இது உண்மையா?..." என்று கேட்டான்.

"ஆம்! உனக்கும் விடுதலை—உன் காதலிக்கும் விடுதலை!...பல்லவ மல்லனின் பட்டத்தரசி ரேவா தேவியின் கட்டளை இது" என்று கூறிக்கொண்டே அநிருத்தர் ராஜஸிம்மனுக்கு முன் சென்று நின்றார்.

திடுக்குற்றான் ராஜஸிம்மன்; மாறன் எயினன் வியப்பால் மெய் மறந்தான்.

"கவிஞரே,......என்னால் நம்ப முடியாதது..." என்று கூறியவனாகப் பாண்டியன், ரேவா, பூஸுந்தரி, கங்காதேவி முதலியவர்களைக்கண்டு நினைவிழந்து நின்றான்.

அந்த மகத்தான தருணத்தில் பாண்டியனின் கண்கள் பூஸுந்தரியை நோக்கி நிலையாகி ஒளியிழந்தன.

நிற்கமுடியாதவளாய்த் தளர்ந்த நிலையிலும் தீவிர உணர்ச்சியுடன் பாண்டியனை நோக்கித் தலை வணங்கினாள் பூஸுந்தரி.

"பூஸுந்தரி!..." என்று கூறியவனாகச் சற்று முன் நடந்து வந்தான் அவன்.

"பிரபுதேவா!..." என்று சொல்லியவளாக, விரைந்து முன் சென்று பாண்டியனின் இரு கரங்களிலும் நினைவிழந்து சாய்ந்தாள் பூஸுந்தரி'.

கண்ணீர்விட்டாள் ரேவாதேவி!

"ராஜஸிம்மரே,...இனி தாமதம் வேண்டாம்: பொழுது புலருமுன்பாக நீ உன் காதலியுடன் உன்னுடைய படைகள் இருக்குமிடம் அடைந்துவிடவேண்டும்." என்றார் அநிருத்தர்.

கவிஞரே, என் கனவு பலித்துவிட்டதே!...ஆனால் இன்னும் கனவுபோலவே காண்கிறேன்... ராஷ்டிரகூட ராஜகுமாரி...பட்டத்தரசியாக வந்த தருணத்தில் எங்களுக்கு...விடுதலை! இது என் வீரத்துக்குக் குறையல்லவா? என்றான் பாண்டியன்.

ராஜஸிம்மரே,...அப்படி நினைக்க வேண்டாம்; பூஸுந்தரியைக் காப்பது என் கடமை!...இதனால் தாங்களும் சுதந்தரமாக வெளியேறுவதே நியதி!...இல்லையேல்...என் தந்தையாருக்கு கங்கராஜனால் அளிக்கப்படும் பரிசாகப் பூஸுந்தரி மாறிவிடுவாள். இதைத் தவிர்ப்பதே என் குறிக்கோள்!' என்றாள் ரேவாதேவி.

ராஜஸிம்மன் மேலும் வியப்படைந்தான். சிவமாறன் வைரமேகனுக்கு அளித்த வாக்குறுதியைப்பற்றி அநிருத்தர், பாண்டியனுக்குத் தெளிவாக உணர்த்தினர். மனம் பதறினன் பாண்டியன் அது கேட்டு.

"மதிகெட்ட மன்னன் சிவமாறனை நான் மறக்க முடியாது; அவன் கெடுமதியை உலகமும் மறக்காது; அவன் புதல்வர்களான வல்லப குணபரர்கள் இது கேட்டால்......" என்று பதற்றத்துடன் கூறினன்.

"ராஜஸிம்மா, விரைவில் புறப்படு!......நீ உன் படைகளை அடைந்தவுடன் செய்ய வேண்டுவது ஒன்று!...உன் படைகளைப் பின்னடையச்செய்து நீ உன் நாடு திரும்ப வேண்டும். இத்துடன் நம் கட்பு நிலைத்திருக்கட்டும். பல்லவ மல்லனையும் நான் மாறுதலடையச் செய்கிறேன்..." என்றார் அநிருத்தர்.

"என் வேண்டுகோள் இதுவேதான்: போரைத் தவிர்த்துத் தாங்கள் படைகளுடன் நாடு திரும்ப வேண்டுமென்பதே என் விருப்பமும்." என்றாள் ரேவா தேவி.

"நல்லது!...தேவி! கவிஞரே! உங்களுடைய விருப்பம்போல் செய்து விடுகிறேன். ஆனாலும் பின்னடையும் படைகள் தாக்கப்பட்டால், போரைத் தவிர்ப்பது முடியாததாகிவிடும். என்றான் பாண்டியன்.

"போரைத் தவிர்ப்பதே உன் கடமை!...புறப்படுங்கள்" என்றார் அநிருத்தர். அருகில் நின்ற வீரர்களுக்கும் கட்டளையிட்டார்.

"காவலர்களே, விரைவில் இரண்டு தேர்கள் சித்தமாகட்டும்;......"

"ஆக்ஞை!" என்று கூறிக் காவலர் கடுகினார்கள்.

அனைவரும் சிறைக் கோட்டத்தை விட்டுப் புறப்பட்டார்கள். வெளிமாடத்தின் வாயிலில் தேர்கள் இரண்டும் சித்தமாக நின்றன. ரேவாவும் அநிருத்தரும் ஒரு தேரில் ஏறிக்கொண்டார்கள். மற்றொரு தேரில் பாண்டியன், பூஸுந்தரி, கங்காதேவி மூவரும் ஏறிக்கொண்டனர். தேரை ஓட்டும் பாகனாக மாறன் எயினன் அமர்ந்துகொண்டான். முடிந்த முடிபாகப் பிரியா விடைபெறக் காத்து நின்றாள் சித்ரமுகி—பேடி. அவளைக் கண்டு பூஸுந்தரி மனம் கலங்கினாள். "ரேவாதேவி...பேடி சித்ரமுகியும் என்னுடன் விடுதலை பெறட்டும். தங்கள் நினைவுக்குக் காரணமாக......சித்ரமுகியும் என்னுடன் வருவதற்கு விரும்புகிறாள். என்றாள் பூஸுந்தரி.

"ராஜகுமாரியின் விருப்பம்...முகி!...நீயும் புறப்படு" என்றார் அநிருத்தர். ரேவா தேவி தலையசைத்தாள்.

குதூகலத்துடன் உற்றதுணையாகச் சித்ரமுகியும் பூஸுந்தரியுடன் தேரில் ஏறிக்கொண்டாள்.

"ராஜஸிம்மா! நேர் மேற்கிலும் தெற்கிலும் போர் நடக்கின்றது. வடமேற்குப் புறத்தில் வாயிலாகத் தேர் செல்லட்டும்; அங்கே சென்று எல்லை கடந்த பின்பு உன் படைகளின் பாசறையை எளிதில் அடையலாம் என்றார் கவிஞர்.

கவிஞரின் ஆக்ஞைப்படியே செலுத்துகிறேன் என்று கூறி மாறன் எயினன் தேரைச் செலுத்தினன். வடமேற்குத்திசைநோக்கி அடுத்தாற்போல் அநிருத்தரின் தேரும் கடுகியது.


* * * *

கனவுபோல் காரியங்கள் கடுகி முடிந்தன. அதே இரவு நிலவு பரந்த அதே நள்ளிரவு பாண்டியன் தன் காதலியுடன் விடுதலை பெற்றான்.

நகரின் வடமேற்கு வாயிலைக் கடந்தன தேர்கள். எல்லைக்காரர்கள் அநிருத்தரின் ஆக்ஞையைத் தலைமேல் தாங்கி மௌனமாக நின்றார்கள். பகைவனான பாண்டியனைத் தப்புவிக்கும் காரியம் வெற்றி பெற்றது.

ஒரு கணம் இருதேர்களும் நின்றன. பூஸுந்தரியும் பாண்டியனும் எழுந்து நின்று ரேவாவுக்கும் அநிருத்தருக்கும் நன்றி செலுத்தினார்கள். ரேவாவும் கவிஞரும் எழுந்து நின்று நன்றியுடன் அவர்களை வாழ்த்தினார்கள். பிரியாவிடைபெற்ற வண்ணம் ராஜஸிம்மனின் தேர் கடுகியது. சில நாழிகைக்கெல்லாம் ராஜஸிம்மனின் தேர் கண்களுக்குத் தெரியாமல் சென்று மறைந்தே விட்டது. வெற்றி பெற்றவர்கள் போல அருகுற்ற அனைவருடனும் தேரில் அமர்ந்து நகருக்குள் திரும்பினார்கள். அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் பெருங்கவலை குடிகொண்டுவிட்டது!

(தொடரும்)



அமெரிக்கா உற்பத்தி செய்துள்ள புத்தம் புதிய கார்தான் இது. இதற்கு என்ஜின் பாகம் பின்னால் இருக்கிறது. "டகர் 1948" என அழைக்கப்படும் இக்கார் சாதாரண காரைவிட மிகவும் குறைந்த யந்திர பாகங்களைக் கொண்டதாம்.




யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் தெரு, மதறாஸ்.1. மதுரை, குடந்தை, கோவை

# பட்டுப் புடவைகள்.


கொள்ளேகால், பெங்களூர், பெங்கால், பெனாரஸ் சேலைகள் எல்லா ஊர் பட்டு, தினுசுகளும் இங்கு இதர கடைகளைக் காட்டிலும், ரூ. 10 முதல் ரூ. 25 வரை குறைவாக இருக்கும்.

நேரில் விஜயம் செய்யுங்கள்.

## ஸ்ரீ சாரதாள் கிளாத் ஷாப்

37, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதறாஸ்.

T. V. S இராஜகோபால அய்யர், ஸோல் புரோப்ரைட்டர்.



(பான்ஸ் கோல்டு.)

பெண்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் இந்த நகைகளைப் பிரதிதினமும் உபயோகித்தாலும் நிறம் மாறாது. பார்ப்பவர்கள் அசல் தங்க ஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள். கியாரண்டி உள்ளவை. 4 ஆபரணங்கள் உள்ள வெல்வெட் பெட்டியுடன் போட்டியின் பயனாக ரூ. 5-12-0க்கு அனுப்பப்படும். நகைகளின் விபரம்:- (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ரேடியோ கட்டிங் மோதிரம் ஒன்று. (பேபி செயின் ஒன்று இனம்.)

அமேஜான் டிரேடிங் கம்பெனி,
1/6 சாம்பய்யர் தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.




King Arrowroot

கிங் அரரூட்

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் சிறந்த ஆகாரம் வைத்திய நிபுணர்களாலும், டாக்டர்களாலும் நன்மதிப்பு பெற்றது.

Sole Agents
EMPIRE TRADERS
4. BUNDER ST. MADRAS

# ப்ரஸித்த ஜ்யோதிஷர்

சாஸ்திர ஆராய்ச்சியையும், நீண்ட கால அனுபவத்தையும் கொண்டு, வருங்காலப் பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும்.

மூன்று கேள்விகள் ரூ. 2.

ஒரு வருஷ பலன் (மாதவாரியாக) ரூ. 6.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.

பொருத்தம் பார்க்க ரூ. 2.

(1) ஜாதகம் (2) பிறந்த மணி, தேதி (3) எழுதும் நேரம் இவைகளில் ஒன்று அனுப்பவும்.

**Prof. ஸ்வாமி, M. A.,**

தபால் பெட்டி 1403, மதராஸ் 17.



வைத்திய ரத்ன

வு. ராமநாத சாஸ்திரியாரின்

## ஆனந்த பற்பொடி (Reg)




சரீரத்துக்கு வாசபடியான வாய்,பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது.

இந்தியா கவர்ன்மெண்டு ஏஜண்டு ஜனரல், தென் ஆபிரிக்கா; இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள், இங்கிலாந்து; இம்பீரியல் கவுன்ஸில் மெம்பர்கள், டில்லி; எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், சென்னை; மதராஸ், பர்மா சீப் ஜட்ஜு உள்பட பத்து ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சென்னை பிரதம மந்திரி உள்பட இதர மந்திரிகள், மஹாராஜாக்கள் இவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டு இருக்கிறது. இத்துடன் நாங்கள் ஜெயம்பெற்ற சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுமெண்டில் பின்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது :— "மார்க்கெட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் அதிகமாய் எங்கும நன்றாய் பிரஸித்தி பெற்றது என்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமே இல்லை. எங்கும் கிடைக்கும்:



## ராஜ பிரபர்தன்

★

மாத விடாய்க் கோளாறு 4, 5 மாதமாக விருந்தாலும் எக்காரணத்தினால் இருந்தாலும் உடனே நிவாரணம் பெறலாம்.

ராஜ பிரபர்தன் ஹானியற்ற ஔஷதம் ரூ. 2-8-0 தபால் செலவு அணா 12 கர்ப்பத் தடைக்கு கர்ப்பத்படி விலை ரூ. 2-0-0 தபால் செலவு அணா 12. சகலவிதமான ஸ்திரீ ரோகங்களுக்கும் ஸேத் பிரதாந்தர் ரூ. 3-8-0 தபால் செலவு அணா 12.

**Calcutta Ayurved Pharmacy,**

[S] 163/1 Cornwallis St.,

CALCUTTA 6.


"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

★

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

| | இந்தியா, சிலோன் | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| 1-வருஷம் | 13 | 0 | 18 | 0 |
| 6-மாதம் | 7 | 0 | 9 | 8 |
| 3-மாதம் | 3 | 12 | 5 | 0 |

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.—

மானேஜர்,

"சுதேசமித்திரன்" ஆபீஸ்,

மவுண்ட்ரோட், மதராஸ்.




கேச குஸும்

மிகச் சிறந்த

## கேசடானிக்

அற்புத தயாரிப்பு

மண்டை ரணங்களை குணமாக்கி அரிப்பை நீக்கி மயிர் உதிர்வதை நிறுத்தி கேசத்தைபட்டுப்போல் மிருதுவாக்கும். கேசத்தின் இயற்கை யழகு குன்றாது.

4 அவு. அழகிய பெட்டிகளில்

மொத்த விலை டஜன் ரூ. 18.


தனி புட்டி ரூ. 1-12-0

RATHOD TRADING COMPANY

Manufacturing Perfumers

[illegible] THULASINGAM ST., SOWCARPET, MADRAS










தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ 57

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல கூாய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,

பைகிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

**B. Balapattabi Chettiyar,**

246, Vysyal St.,

COIMBATORE.



## பிற்காலத்துக்கு சேமிப்பு

★

## ப்ருடென்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில்

உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்து கொள்ளுங்கள்.

★

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள நாடுகளுள் மிகப் பெரிய ஆயுள் அஷ்யூரன்ஸ் ஸ்தாபனம். 500 கோடிக்கு அதிகமான ஆயுள் நிதியும் 95 வருஷங்களுக்குமேற்பட்ட கியாதியும் பெற்றது.

**A. D. R. அய்யங்கார்**

ப்ருடென்ஷியல் ஏஜண்ட்

79, ஆதியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ் 1.

போன்: 4590.



டெலிபோன் 2246 தந்தி: கிளாவர் பீடி




லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

**ஸ்பேட் கிளாவர் பீடிகள்**


தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.




ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்—சேகூத்திரங்காட்பக பெஜவாடா — மதுரை.

"ஜெய் ஹிந்த்"

பாரத நாட்டு மக்களே !

இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகளை உபயோகிக்க இன்னும் ஏன தயங்குகிறீர்கள்? இந்தியர்கள், நம் நாட்டுக் கைத்தறி ஆடைகளை வாங்கி, நம் மக்களை ஆதரிப்பதில் சிரத்தை காண்பியுங்கள்.



இந்தியப் பெண்மணிகளே !

கைத்தறி ஆடைகளில் சிறந்து விளங்கும் எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகளை வாங்குங்கள்

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் & கோ., மால் 2-வது தெரு, மதுரை.
2. பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை.
3. R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.
4. ஸ்ரீ பால முருகன் & கோ., 166, தெற்கு மாசி வீதி, மதுரை.
5. M. S. T. சுப்பய்யர் & சன்ஸ், 115, சந்தை ரோடு, நாகல் நகர், திண்டுக்கல்.
6. கஸ்தூரிரங்கய்யர், நாகையர் & கோ., ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு.
7. N. S. குப்புசாமி, N. A. K. சுப்பய்யர், ஜவுளி வியாபாரம், தென் கரை, பெரிய குளம்.
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் & N. A. Dt.
9. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசாமி பிள்ளை வீதி, பொள்ளாச்சி
10. ராஜா & கோ., மதராஸ் & ஆந்திரா Dt.

(N. B.) 40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும் பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்

சரஸ்வதி வீவிங் கம்பெனி,


நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை.

199475



சென்ற 15-ந்தேதி திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயிலில் ஆலயப்பிரவேசம் நடந்தது. பிரதம மந்திரி இதை நடத்தி வைத்தார். ஆலயப்பிரவேசக் கோஷ்டியில் கலந்துகொண்ட ஸ்ரீ பி. எஸ். மூர்த்தியும் அவரைச்சேர்ந்தவர்களும்.



ஆலய சன்னதிக்குள் தரிசனம் செய்யச்சென்ற பக்த கோடிகள்.

# சுதேசமித்திரன்

வாழிய செந்தமிழ் · வாரப்பதிப்பு · வாழ்க நற்றமிழர்

Vol. XVIII] ஸர்வஜித்துஸ்ரீ ஆனிமீ 8உ ★ 1947-ஞு ஜூன்மீ 22உ [No. 21


## நேர்மையான முடிவு

இந்திய ஆட்சியை ஒப்புவித்துவிட்டு தாங்கள் வெளியேறுவதையொட்டி இம் மாதம் 3-ந் தேதியன்று பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட திட்டத்தைக் காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏற்கத் தீர்மானித்தது. அம் முடிவை சென்றவாரம் அகில இந்தியக் காங்கிரஸ்கமிட்டி அங்கீகாரம் செய்துவிட்டது. அத்தீர்மானம் இவ்வங்கீகாரத்தை பெறுமுன்பாக அ. இ. கா. கமிட்டியில் நடந்த விவாதம் காரசாரமானது. தீர்மானத்தை எதிர்த்தவர்கள் வெகுண்டெழுந்ததில் வியப்புக்கிடம் இல்லை. இதுவரை காங்கிரஸ் ஐக்கிய இந்திய சிருஷ்டிக்காகவே பாடுபட்டு வந்திருக்கிறது. இந்நிலையில் பிரிட்டிஷாரின் 3-ந்தேதி திட்டம் அந்த லட்சியத்துக்கு உலை வைப்பதாயிருக்கிறதென்றால் காங்கிரஸ்காரர்கள் மனம் குமுறி வெதும்புவது இயற்கையே. ஆனால் இன்றுள்ள நிலையில் ஒரே முடிவுக்குத்தான் வரக்கூடும். காரியக்கமிட்டித் தீர்மானத்துக்கு அங்கீகாரம் அளிக்கவேண்டிய அவசியத்தை முதல் நாளன்றே காந்திஜி சாங்கோபாங்கமாகத் தெளிவுபடுத்தினார். மறுநாளன்று பண்டித நேருவும், ஸர்தார் படேலும் அணு அணுவாக நிலைமையை விளக்கி எதிர்த்தவருக்கு சமாதானங்களைத் தெரிவித்தனர். வகுப்புப் பூசலை வளர விடுவதற்குப்பதிலாகப் பிரிவினைக்கு உடம்படுவதே நேர்மையென்பதை அவர்கள் சந்தேகமற்ற பாஷையில் எடுத்துக்காட்டினர். இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் காங்கிரஸ் லீகினிடம் சரணாகதி அடைந்துவிட்டதாகக் கருதுவது அபத்தம் என்பதையும் தலைவர்கள் தக்கவாறு துலக்கிவைத்திருக்கின்றனர். காங்கிரஸ் இந்தியா முழுதுக்கும் ஒரே சர்க்கார் வேண்டுமென்று கோரியது. ஆனால் புதிய பிரிட்டிஷ் திட்டத்தால் முக்கால் பங்கு ஒரு பகுதியாகவும் கால் பகுதி மற்றொரு பகுதியாகவும் பிரிவுபட நேரிட்டிருக்கிறது.

சர்தார் படேல் குறிப்பிட்டதுபோல் இந் நாட்டில் முக்கால் பாகத்துக்குமேல் இந்திய யூனியனிலேயே இருந்து வரும். இதை எத்தகைய தடங்கலுமின்றி பல துறைகளிலும் துரிதமாக வளப்படுத்துவதன் மூலம், நாம் இந்திய யூனியன் துரிதமாக பெருமையுடனும், சக்தியுடனும் விளங்கச் செய்ய முடியும். தங்களுக்கு ஏற்படவிருக்கும் தனி ராஜ்யத்தின் அளவு கண்டு, முஸ்லிம்களில் எவ்வளவு பேர் உண்மையில் குதூகலிப்பரோ தெரியாது! ஆனால் அத்தகையோரும், இந்திய யூனியனில் சேர்ந்திருப்பது தங்களுக்கு அனுகூலமென்பதை விரைவில் உணரக்கூடும். எனவே தேசப்பிரிவினை தற்காலிகமானதுதான் என்றே நம்புவோம். அ. இ. கா. கமிட்டியில் எதிர்த்தவர்கள் பிரிட்டிஷ் திட்டத்திலுள்ள குறைகள் பலவற்றையும் எடுத்துக்காட்டினர். அவற்றை யாரும் மறுக்கவில்லை. எனினும் பிரச்னை மேன் மேலும் இழுத்துக்கொண்டிராமல் ஒருவிதமாகத் தீர இத்திட்டம் வழி காட்டுகிறது; இந்த வழியை ஒரு சமரச ஏற்பாடாக முக்கியத் தரப்புகள் ஒப்புக்கொள்கின்றன என்பதுதான் இதன் விசேஷம். அ. இ. கா. கமிட்டி, தலைவர்களை ஆதரிக்க மறுக்குமாயின் அதன் பலன் என்னாகுமென்பதை காந்திஜி சுட்டிக் காட்டினார் நேருவும், படேலும் இதைத் தொடர்ந்து பேசி தீர்மானத்தை ஆதரிப்பதன் அவசியத்தை உணர்த்தினர். அ. இ. கா. கமிட்டியினர் நேர்மையுணர்ந்து முடிவு செய்தது விசேஷம்.

---



விக்கிரமாதித்தன் அமைதியாக மீட்டும் சொன்னான்:

"உண்மையாகவே இந்தப் போரைத்தவிர்த்து விட முடிவு செய்து கொண்டோம்."

அவன் அவ்விதம் மீட்டும் கூறியவுடன் அனைவரும் மனம் பொருமிப் பெருமூச்சுவிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பாண்டியன் நீண்டபெருமூச்சால் சீறி எழுந்தான்.

"நான் இந்த யோசனையை எதிர்க்கிறேன். என் தந்தையின் யோசனை இங்குள்ள அனைவராலும் மறுக்கப்படும் என்பது நான் அறிந்ததே:.....ராஜஸிம்மர் இதற்காக மனம் பொரும் வேண்டாம்...என் தந்தையின் யோசனையை நானே மறுக்கிறேன் என்றால்.....நீங்கள் வெகுண்டு எழுவதற்குக் கேட்கவேண்டுமா?..." என்று எழுந்து நின்று கீர்த்திவர்மன் கூறினான்.

ஆச்சரியத்தால் விக்கிரமாதித்தன் அனைவரையும் பார்த்துவிட்டு மறுபடியும் சொல்லலானான்:

"அமருங்கள்;...நான்சொல்வதை கேட்டுவிட்டு... அதன்பின் உங்கள் கருத்துப்போல் செய்யுங்கள்..."

விக்கிரமாதித்தனின் மொழியைக்கேட்டு அனைவரும் அமர்ந்தார்கள். பாண்டியன் கட்டுக்கு அடங்காத சிங்கவேறுபோல் இறுமாந்து விழிகனல நின்றான்.

"விக்கிரமதேவரே, இந்த யோசனை என் உள்ளத்தை ஊடுருக்கின்றது. தாங்கள் தெளிவாகக் கூறினாலல்லது என் மனம் அமைதிபெறாது." என்று பாண்டியன் மனம் பொருமியவாறே சொன்னான்.

"என் தந்தை தெளிவாகச் சொல்வதைக்கேட்டால் என்னிடம் தாங்கள்...இப்படிப்பேசுவீர்களோ!..." என்று நகைத்துக் கூறினான் கீர்த்திவர்மன்.

உடனே விக்கிரமாதித்தன் கோபத்தால் மனம்பதறிச் சொன்னான் மகனைப்பார்த்து:

"கீர்த்திவர்மா!... என் முயற்சி சிதறி விடுமென்று எண்ணாதே!... உன் கெடுமதியை அடக்கிக்கொள்; நெறியொன்று இருக்குமானால்... அதைப்பின்பற்றுவது அநீதமல்ல!......வீரத்துக்கு மறுவல்ல! சளுக்கிய குலத்தின் பெருமையைக் கெடுப்பது என் இயல்பல்ல!"

இவ்விதம் விக்கிரமாதித்தன் தன்னுடைய புதல்வன்மீதே கோபம்கொண்டு பேசுவதைக் கண்ட யாவரும் வியப்பும் பதற்றமும் அடைந்தார்கள்.

"தந்தையே...இயற்கைப் பகைவனின் சாம்ராஜ்யத்தை வேர் களைந்து விட வேண்டுமென்பது என் பிரதிக்ஞை!......தாங்கள் கருணை காட்டுவது...பழம் பகை மறப்பதுமட்டுமல்ல! மேலும் பகைவனுக்கு ஊன்றுகோல் கொடுப்பதுமாகும்: நான் சாளுக்கிய ராஜ்யத்தின் மேம்பாட்டுக்கு ஊறு ஏற்படாமல் பாதுகாப்பது என்று உறுதி கொண்டுள்ளேன். தாங்கள் எது செய்தாலும் ஏற்றுக் கொள்வேன்! சாளுக்கியரின் இயற்கைப் பகையான பல்லவ முடியரசை வேரறுப்பது முடிந்த முடிபு!..." என்று எழுந்து வஞ்சினம் கூறினான் விக்கிரமனின் புதல்வனானகீர்த்திவர்மன். அதைக் கண்ட அனைவரும் குதூகலித்தார்களென்றால் அது அதிசயமல்லவே!

"கீர்த்திவர்மனின் பேச்சுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்; இயற்கைப் பகைவனை அழிப்பது இயற்கை—கீர்த்திவர்மனுக்கு என் முழு உதவியும் உண்டு!' என்றான் சித்திரமாயன்.

"சித்திரமாயா!....உன்னை நீ அறியவில்லை! பல்லவராச்சியத்தை நிர்மூலமாக்கிவிட எண்ணிப்பேசும் என் மகன் உனக்கு உதவி புரிவான் என்று கனவு காண்கின்றாய்!.....அது தவறு!,...." என்று விக்கிரமாதித்தன் இகழ்ச்சிக் குரலில் கூறிவிட்டுப் பாண்டியனை நோக்கிச் சொல்லலானான்:

"ராஜஸிம்மரே,.. நான் தெளிவாகச் சொல்கிறேன்; என் இயற்கைப் பகைவன் பல்லவன்; ஆனால் என்னிடம் தன்முடியைத் தாழ்த்திவிட உறுதி கூறிவிட்டான்: என்னைக் காஞ்சி அரண்மனையில் வரவேற்க ஆயத்தமாக இருக்கிறான். என் நட்பை என்றும் எதிர்பார்க்கிறான்; இன்று தொட்டு பல்லவ சாளுக்கிய நட்பு வளர்வுற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறான்;....என்னுடைய வெற்றியையும் தன்னுடைய தோல்வியையும் ஒப்புக்கொண்டு மந்திரியான ஆசாரியர் அநிருத்தரை என்னிடம் தூதனுப்பிவிட்டான்; அவருக்கு நான் உறுதிமொழியும் அளித்துவிட்டேன்:....உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் அவர் கூறினார்; கங்க கன்னிகைக்குக் காஞ்சி நகர் அரண்மனையில் 'சுயம்வரம்' வைத்து அவள் விருப்பம்போல் மணவினை முடிப்பதே ஏற்ற செயல் என்று கூறினார்!.... யானும் அதுவே ஏற்றதென்று கருதுகிறேன். சுயம்வரத்தில் கங்க கன்னிகை வரித்துக் கொள்வதைத் தடை செய்ய யாராலும் முடியாது. கங்கராஜனுக்குக் கங்கபாடியை அளித்துவிடுவதும் முறையான செயலாகும்; பல்லவ வேந்தனான நந்திவர்மனின் நட்பை நீங்கள் ஏற்றுக் கொள்வதே சிறந்த வழியாகும்"

இவ்விதம் விக்கிரமாதித்தன் யோசனை கூறியவுடனே பாண்டியன் துள்ளி எழுந்து நின்றான்.

(தொடரும்)




என் பிரபிதாமகருக்குப் புரிந்த துரோகச் செயல்களுக்குப் பழி வாங்கிவிட்டேன் என்பதை நன்றாக எடுத்துச் சொல்லவேண்டியதாக இருக்கிறது;..."

இவ்விதம் விக்கிரமாதித்தன் கூறிவிட்டு பாண்டியனை உற்று நோக்கினான்.

அனைவரும் வியப்புடன் பார்த்தார்கள்.

"விக்கிரமரே,......இந்தப்போரில் நாம் ஒன்றுபட்டுத் தாக்குவதால் தான்.. பல்லவர் ஒருபுறம் வலி குன்றியிருக்க வேண்டும்: இல்லையேல் அவர்கள் திறம் குன்றியிருக்க நியாயமில்லை: பெருவளநல்லூரில் நடந்த போரில் இந்தப் பல்லவர்களோ உலகம் வியக்கும்படியாகப் பொருதார்கள் என்பது மறக்கக்கூடியதல்ல!,...... ஆனால் தாங்கள் தேடிக் கொடுக்கும் வெற்றி.. மகத்தானதுதான்;..... முதல் நாள் போரில் இவ்வளவும் நடந்து விட்டதால் இனி யோசிக்க வேண்டியதில்லை:. ...., பல்லவவேந்தன் தங்கள் படைகளாலேயே சிறைப்படுத்தப்படுவான் என்று கருதுகிறேன்... என்னுடைய படைகள் நாளைப்போரில் காஞ்சிக்குள் புகுந்து விடுமென்று உறுதி கூறுகிறேன்;. ... தங்களாலோ, அல்லது என்னாலோ பல்லவ மன்னன் சிறைப்படப்போவது நிச்சயம்;...;.. தாங்கள் எனக்குத் துணையாக என்றால் அழைக்கப்பட்டீர்கள்..... தாங்கள் தேடிக் கொடுக்கும் வெற்றியில் நம் இருவருக்கும் ..மகத்தான லாபம் உண்டல்லவா! யானே குறித்த லக்ஷியத்தைப் பெற்று என் துணைவர்களின் குறையையும் போக்குகின்றேன்:... ஆனால் இன்று நடந்த போரில் அடைந்த வெற்றி நிரந்தரமன்று!...... காஞ்சி நகருக்குள் பாண்டிய-சாளுக்கியப் படைகள் வீதிவலம் வரும்போதுதான் உண்மையில் பரிபூர்ண வெற்றி கிடைத்ததாகக் கூறமுடியும்!.,...." என்று பாண்டியன் ராஜஸிம்மன் அமைதியாகவும் நயமாகவும் கூறினான் விக்கிரமனைப் பார்த்து.

"எங்கள் கருத்தும் இதுவே தான்!..." என்று கங்கராஜ குமாரர்களும் சித்திரமாயனும் கூறினார்கள்.

அப்போது மாறன்காரி பரபரப்புடன் கூறலானான்;

"நாளைப் போரில் நாம் செய்யப் போவதைப்பற்றிச் சிந்திப்பதே காரியம். காஞ்சியைச் சூழ்ந்து விட்ட நாம் பேசாமல் இருக்கப் போவதில்லை;,.,.,"

அடுத்தாற்போல் மாறன் எயினன் கூறினான்:

"விக்கிரமாதித்தர் அடைந்த வெற்றிக்கு ஈடாக பாண்டியப் படைகள் நாளை போராடப் போவதைப் பல்லவர்கள் நன்றாக உணர்வார்கள்!..,"

"பல்லவ வேந்தனான நந்திவர்மனின் குணம் எனக்குத் தெரியுமேயல்லாது......இங்கு வேறு யாருக்குத் தெரியும்?...அவனை வெல்வதென்றால் பெரும்பாடுபட்டாலல்லாமல் முடியாது என்று உறுதி கூறுகிறேன்; பல்லவ மகா சாமந்தாதிபதியான உதயசந்திரன் என்ன, ஸர்வாதிகாரியான முத்தரையனென்ன, சோழ ராஜ்யத்துப் படைத் தலைவர்களென்ன, மகா மேதாவிலாஸமான ஆசாரியர் அநிருத்தரென்ன—இவர்கள் யாவரும் அற்பமாக மதிப்பிடத் தக்கவர்களா?...... நந்திவர்மனின் தந்தையான ஹிரண்யவர்மன் உபாயத்தில் மகாசூரனாயிற்றே! இந்நிலையில் விக்கிரமாதித்த தேவர்......ஏதோ பல்லவர்களை அற்பமாக மதிப்பிடுகிறார் என்று கருதுகிறேன்!..." என்றான் சித்திரமாயன்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டார்கள்.

"ஆம்!...சித்திரமாயன் சொல்லியது முற்றும் உண்மை!...விக்கிரமரே....என் நோக்கங்கள்—லக்ஷியங்கள் என்னவென்று தாங்கள் அறிவீர்களல்லவா?..." என்று ராஜஸிம்மன் கேட்டான் புன்னகையுடன்.

அதற்கு மறுமொழி கூறுபவன் போல் வெடிநகை செய்தான் விக்கிரமாதித்தன்.

"ராஜஸிம்மரே, உம்மிலும் வயதில் மூத்தவன் நான்;...பல்லவரின் வலி எத்தகையது என்று அறிந்தவன்தான்;......எனினும் சித்திரமாயன் சொல்லியவை மறுக்கத் தக்கன அல்ல! உம்முடைய நோக்கங்களை நாம் சந்தித்த அன்றே தெரிந்துகொண்டேன்;... அதைப்பற்றிப் பேசுவதற்காக நான் இத்தருணம் வரவேண்டியதாயிற்று .....கங்க கன்னிகையைப் பெற வேண்டுமென்பது ஒன்று; கங்கராஜனையும், பல்லவனையும் அடக்கிவிட வேண்டுமென்பது மற்றொன்று; சித்திரமாயனைப் பல்லவ ராஜ்யத்திற்கு முடிமன்னனாக்குவது என்பது ஒன்று!......இவ்வளவே உம்முடைய லக்ஷியங்கள் ...அல்லவா!..." என்று உறுதியான குரலில் கேட்டான் விக்கிரமாதித்தன்.

பாண்டியன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் விக்கிரமாதித்தனை.

"தாங்கள் சொன்னவை அனைத்தும் என்னுடைய லக்ஷியங்கள் தாம்!....ஆனால் 'உக்ரோதயம்' என்ற நாகரத்ன மாலையுடன் கங்கராஜ கன்னிகையை அடைய வேண்டுமென்பது என் முதல் லக்ஷியம்; அது நிறைவேறிவிட்ட பின்....மற்றவை எளிதில் முடியக்கூடியன. தாங்கள் சொல்வதைத் தெளியக் கூறுமாறு கேட்கிறேன்...." என்று விக்கிரமாதித்தனை நோக்கிக் கம்பீரக் குரலில் கேட்டான் பாண்டியன்.

"ராஜஸிம்மரே, எனக்குத் தோன்றும் யோசனையை ஏற்றுக் கொள்வீரா?" என்று உடனே கேட்டான் விக்கிரமாதித்தன்.

ராஜஸிம்மனின் முகம் மாறுபட்டது. அனைவரும் திடுக்கிட்டார்கள்.

"தங்கள் யோசனை என்ன?"—என்று பாண்டியன் துணிவுடன் கேட்டான்.

"நான் இந்தப் போரை முடிவு கட்டிவிட எண்ணுகிறேன்."

விக்கிரமாதித்தன் அவ்விதம் கூறியவுடன், அனைவரும் உடல் வேறு உயிர் வேறாகத் தூக்கி எறியப்பட்டவர்கள்போல் ஆனார்கள்.

"விக்கிரமாதித்தர் சொன்ன வார்த்தைகள் என்ன?....மறுபடியும்....சொல்லட்டும்" என்று மந்திரி மாறன்காரி கூறினான். அவன் தன் ஆதனத்தைவிட்டு எழுந்து நின்றான்.

"என்ன யோசனை இது?" என்று கூறி வெகுண்டு எழுந்தான் சித்திரமாயன்.

"தங்கள் யோசனையை எவ்விதத்திலும் ஏற்க முடியாது" என்று கங்கராஜா குமாரர்கள் வன்மொழி கூறினார்கள்.


"இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பாண்டிய வீரர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்" என்றான் மகாசாமந்தாதிபதியான மாறன் எயினன்.

'இந்த யோசனையை நீங்கள் கூறுவீர்கள் என்று கனவிலும் நான் கருத முடியாது... உண்மையாகவே சொல்கிறீர்களா?" என்று கேட்டான் பாண்டியன்.

## செடியில் கொடிகள்

★

ஐக்ய நாடுகள் நடத்திய சுவரொட்டிப் போட்டியில் வெற்றிபெற்ற விளம்பரம். இதை வரைந்த கனடிய சித்திரக்காரருக்கு 1500 டாலர்கள் கிடைத்தன. இச்செடியில் 55 மெம்பர் நாடுகளின் கொடிகள் இருக்கின்றன. 30 நாடுகள் மேற்படி போட்டியில் கலந்து கொண்டன. விளம்பரம் உலகம் பூராவும் விநியோகிக்கப்படும்.





★

(கீழ்)


## போர்சப் மரீன்கள் தயாரிப்பு

இந்த வேலை வாஷிங்டனில் சீக்கிரத்தில் ஆரம்பமாகும்.



199K73 சென்னை

வேண்டிய அளவுக்கு கணக்கு, சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றனவாம். இது தவிர கைத்தொழிலில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறதாம். ஏழை மாணவர்களுக்கு இலவச ஆகாரமும், இருப்பதற்கு அங்கேயே இடமும் கொடுத்திருக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் நடைபெறும் பிரார்த்தனை எப்படிப்பட்ட மனதையும் உருகச் செய்யக்கூடியதாய் இருக்கிறதாம். நேரில் கண்டு கேட்டவர்கள் சொல்கிறார்கள். மொத்தம் பத்து வருஷம் படிப்பாம். அதில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை படித்து வெளியே வரும் ஒருவன் ‘குமாஸ்தா வேலையையே’ நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லையாம். அந்த அளவுக்கு திட்டம் போட்டிருக்கிறார்களாம். ஹிந்துஸ்தானி கட்டாய பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. என்ன பிரமிக்கிறாயா? பண்டைக்கால குருகுலமெல்லாம் கூட இதனிடம் பிச்சை வாங்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறொன்றும் சொல்லத் தெரியவில்லை. இதற்கு நல்லபடியாக பொது ஜனங்களிடம் ஆதரவு கிடைத்து தெருவுக்கொரு குருகுலம் ஏற்படுமானால் இதைவிட தேச முன்னேற்றத்துக்கு வேறு என்ன வேண்டுமென்று நினைக்கிறாய்? ஆகவே அந்த சினிமாக்காரியின் மீது வீண் சந்தேகம் கொண்டதும் தவறு. வாஸுவை இப்பொழுது இதைவிட்டுவிட்டு அங்கே வரச்சொல்வதும் தவறு என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அவர் வருவதாகச் சொன்னால்கூட போக வேண்டாமென்றுதான் நாங்கள் சொல்லப்போகிறோம். அத்துடன் அரசியலிலிருந்து விலகி இதிலேயே



‘...நல்ல பசிக்கு ரேஷன் அப்பளாம்...’

தனது முழுசக்தியையும் உபயோகப்படுத்தப் போவதாய் வாஸு தீர்மானித்து விட்டாராம். அந்நிய ஆதிக்கம் ஒழிந்து நமது ராஜ்யம் ஏற்படும் இந்த சமயத்தில இம்மாதிரி கல்லூரிகள் எவ்வளவு அவசியம் என்பது பிறகல்லவோ தெரியப் போகிறது! ஆகையால் இனி வாஸுவைப்பற்றிய அனாவசியமான விசாரம் வேண்டியதில்லை. அப்பா ஒருதரம் வந்து பார்த்தாரானால் பிரமித்தே போய்விடுவார்.



‘‘......இப்போது வேண்டாம் என்று மன்னியிடம் சொல்லிவிட்டேன்......’’

பார்த்தாயா! முக்யமான விஷயம் ஒன்று எழுதவேண்டுமென்றிருந்தேன் மறந்தே போய் விட்டேன். மன்னிக்கு வாய்வுக்காக நீ வாங்கிக் கொடுத்தனுப்பிய எண்ணெய் வந்து சேர்ந்தது. சாப்பிடவில்லை. அப்படியே வைத்திருக்கிறாள். அதைச் சாப்பிட்டால் மொச்சை சேர்த்த கீரைத் தண்டு கூட்டு சாப்பிட்டாக வேண்டுமென்று பத்யம் சொல்லியனுப்பியிருக்கிறாய். மொச்சைக் கொட்டை என்றாலே பயமாயிருக்கிறது. பர்மா மொச்சை என்று ஒன்று வந்திருக்கிறதாம். அதைச் சாப்பிட்டு ஜனங்கள் அங்கங்கே மாண்டு வரும் செய்தி பத்திரிகைகளில் பிரமாதப்படுகிறது. அதில் ஏதோ விஷம் கலந்திருக்கிறதாம். நா அதை எப்படியிருக்கிறது என்று கூடப் பார்க்கவில்லை. இருந்தாலும் சந்தேகம் ஏற்பட்டுவிடவே மொச்சையை உபயோகப்படுத்த பயமாயிருக்கிறது. அதை உபயோகப்படுத்தக் கூடாதென்று சர்க்கார் வேறு தடை விதித்திருக்கிறார்களாம். ஆகையால் மொச்சைக்கொட்டை பத்யம் இப்பொழுது வேண்டாமென்று மன்னியுடன் சொல்லிவிட்டேன். மொச்சைக்கொட்டைப் பத்யம் இல்லாமல் வாய்வுக்கு வேறு ஏதாவது மருந்து இருந்தால் வாங்கி அனுப்பவும். என்னமோ எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது. கலியடி அம்மா, கலி!

இப்படிக்கு,

உன் அன்புள்ள


அலமு.

---

இரண்டு நாசகாரிகளும் சேர்ந்து எல்லா
கீடங்களையும் கொல்லுகின்றன




5% DDT அடங்கியது



பிரீத்ரம் செயற்கை கலவைப் பொருட்கள் அடங்கியது.





ப்ளிட் ஸர்பேஸ் ஸ்ப்ரே (FLIT Surface Spray) நிச்சயமாகக்கிடைக்க, அனியா கசெல்லும் போர் வீரர்களோடு கூடின பச்சை டப்பா கேளுங்கள், ப்ளிட் வாங்கும்போது மஞ்சட டப்பாமீது போர்வீரன் இருக்கிறானா வென கவனியுங்கள்.

நீடித்த பாதுகாப்புக்கு
ப்ளிட்
ஸர்பேஸ் ஸ்ப்ரே
உபயோகியுங்கள்

சடிதி சாக அடிக்கும்
வன்மைக்கு
ப்ளிட்டை
நம்புங்கள்

CF-3 TM

...naui Iyongar at the Swadesamitran Power Press. 3 & 4, Whites ... Madras. Editor: C. R. Srinivasan, B. A.



ஆகாயத்தின் நட்சத்திர கிரண வரிசைகளே ரத்னங்களும் வைரங்களுமாகும். ரத்னங்களில் இக்கிரணங்கள் ஜ்வலிக்கும்போது இவற்றை அணிபவர் அனைவரையும் வசீகரிக்கும் சக்தியைப் பெறுகிறார். உடம்பினுள் அணுசக்திக் குறைபாட்டை நீக்கி, அவருக்கு ஒரு அலாதி மதிப்பை உண்டாக்கி, அவரது மேனி அழகும் ஆரோக்யமும் ததும்பச்செய்யும்.

ஆபரணங்கள் வெறும் அலங்காரத்திற்கு மட்டும் அல்ல. அவற்றின் நுட்பமான குணங்கள் என்றும் அழியாதவை. இம்மதிப்புவாய்ந்த சொத்துக்கள் உங்களுக்கு முடையான சமயத்தில் உதவுவது தவிர, செழிப்பான காலத்தில் மேலும் சோபிதம் அளிப்பவை. இவற்றை வாங்குவதென்பது இவற்றில் முதலீடு செய்வதாகும். சரியான பாதுகாப்புள்ள முதலீடு இதுவே.

**...ராஜமல்ஸ்**

...ரோ, எஸ்பிளனேட், மதராஸ்
விரு...

நம்பிக்...

லை...